Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 12 வியாழக்கிழமை (28.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 283

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே








# மாணவி வித்தியா கொலை; 7 பேருக்கு மரணதண்டனை

## ட்ரயல் அட்பார் தீர்ப்பு



(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில் ஏழு பேருக்கு மரண தண்டனை விதித்து ட்ரயல் அட்பார் (நீதாய விளக்கமன்று) தீர்ப்பளித்துள்ளது. அத்துடன் தலா ஒவ்வொருவருக்கும் 30 வருட கடூழிய சிறைத் தண்டனையும், வித்தியாவின் குடும்பத்துக்கு தலா 10 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக செலுத்த வேண்டும் என்றும் செலுத்தத் தவறின் இரண்டு வருட மேலதிக சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்துள்ளது. மேலும் முதலாவது மற்றும் ஏழாவது சந்தேக நபர்கள் நிரபராதிகள் என விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (23-ம் பக்.)

## எனது மகளுக்கு ஏற்பட்ட நிலை வேறு யாருக்கும் ஏற்படக்கூடாது

### தீர்ப்பின் பின் வித்தியாவின் தாய் சரஸ்வதி



(யாழ்ப்பாணம்)
வித்தியாவுக்கு ஏற்பட்ட நிலை வேறு எந்த பிள்ளைக்கும் நடக்க கூடாது. இந்த தீர்ப்பு சமுதாயத்துக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும் என வித்தியாவின் தாயாரான சர 24

## குற்றவாளிகள் அனைவரும் போகம்பரை சிறைச்சாலைக்கு



(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் 7 பேரும் கடும் 23

## மரணதண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படும்

### எதிரிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
தீர்ப்பாயத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படும் என்று 2ஆம், 3ஆம், 6ஆம், 8ஆம் எதிரிகளின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

வித்தியா கொலை வழக்கின் தீர்ப்பு நேற்று தீர்ப்பாயத்தால் அறிவிக்கப்பட்டது.

1ஆம், 7ஆம் எதிரிகள் தவிர்ந்த ஏனைய 7 பேரும் குற்றவாளிகள் எனக் கண்டறியப்பட்டு தூக்குத் தண்டனை விதித்தது தீர்ப்பா 24

### வித்தியா கொலை வழக்கில்

## விடுதலையானவர் மீண்டும் கைது

(யாழ்ப்பாணம்)
வித்தியா படுகொலை வழக்கில் நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முதலாம் சந்தேக நபர் பொலிஸாரை திட்டிய வழக்கில் மீண்டும் 23

## நீதிமன்றில் மயங்கி வீழ்ந்த மாணவி வித்தியாவின் தாய்

(யாழ்ப்பாணம்)
வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 7 பேருக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் மரண தண்டனை விதித்துள்ள நிலையில் வித்தியாவின் தாய் மன்றில் மயங்கி வீழ்ந்துள்ளார்.

வித்தியா படுகொலை வழக்கின் தீர்ப்பு நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, 7 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 23

### தற்காலிக ஊழியர்களின் பணி பறிபோகிறது

## பாதுகாப்பற்ற ரயில் கடவை பாதுகாப்பை சமுர்த்தி குடும்பத்துக்கு வழங்க முடிபு

(கொழும்பு)
நாட்டில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரத குறுக்கு வீதிகளின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக ஊழியர்களை நீக்கி விட்டு அப்பணியை சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அமைச் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை நிர்வாக சேவையின் வினாப்பத்திரம் வெளியாகவில்லை

## பரீட்சைத் திணைக்களம் மறுப்பு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவை தரம் மூன்றிற்கு ஆட்களை சேர்த்துக்கொள்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் போது வழங்கப்பட்ட நுண்ணறிவு வினாப்பத்திரம் ஏற்கெனவே வெளியானதென கூறப்பட்ட கருத்தை இலங்கை பரீட்சைகள் திணைக்களம் நிராகரித்துள்ளது.

குறித்த வினாப்பத்திரம் பரீட்சை நடத்தப்பட்டதற்கு முன்னர் வெளியாகவில்லை எனவும், இந்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி ஆராயப்பட்டு வருவதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நடத்தப்பட்ட போட்டிப பரீட்சையின் போது தயாரிக்கப்பட்ட வினாப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த வினாக்கள் சில இம்முறையும் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் இத்தகைய குழப்பநிலை ஏற்பட்டிருக்கலாம் என பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்டுள்ள குழுவினது அறிக்கை கிடைக்கப் பெற்றதும் பரீட்சாத்திகளுக்கு நியாயமான தீர்வினை வழங்குவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார். (மு-11)

# சிற்றுண்டிகளின் விலை அதிகரிக்கப்படவுள்ளன

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலை உயர்வடைந்துள்ளமையால், சிற்றுண்டிச்சாலை உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலையையும் அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக, அனைத்து இலங்கை சிற்றுண்டிசாலை உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, அப்பம் ஒன்றின் விலையை 15 ரூபாயாகவும், பிளேன்டி ஒன்றின் விலையை 20 ரூபாயாகவும், சோற்றுப் பொதி ஒன்றின் விலையை 130 ரூபாயாகவும், பால்தேநீர் ஒன்றின் விலையை 40 ரூபாயாகவும் அதிகரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் அத்தியாவசிய பொருட்களுக்கான விலை துரிதமாக அதிகரித்துச் செல்வதால், அனைத்து சிற்றுண்டிசாலை கட்டமைப்புக்களும் பாரிய நெருக்கடிக்கு உளளாகியுள்ளதாகவும், அனைத்து சிற்றுண்டிசாலை உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

நேற்றுமுன் தினம், நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு எழுத்து மூலம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே, அச் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் மேற்கண்ட விடயங்களை கூறியுள்ளார். (மு-11)

# வித்தியாவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு மலையக மக்கள் பாராட்டு தெரிவிப்பு

(கண்டி)

படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியா வழக்கு தொடர்பில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு மலையக மக்கள் நீதிக்கு தலை வணங்கி பாராட்டு தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் கூட்டு வன்கொடுமையின் பின் மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த கொலையுடன்சம்பந்தப்பட்ட ஏழு பேருக்கு நேற்று மூன்று நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இந்த நிலையில் நேற்று மதியம் மரண தண்டனை கிடைத்த செய்தியை கேட்டு பூரிப்பு அடைந்த மலையக மக்கள் இந்த நாட்டில் இவ்வாறான இழிவான செயலில் ஈடுபட எண்ணும் நபர்களுக்கு ஒரு பாடமாக அமைந்து விட்டதாக இந்த தீர்ப்பை தந்த நீதிபதிகளுக்கு சிரம் தாழ்த்தி நன்றி தெரிவிப்பதாகவும் மலையக மக்கள் தெரிவித்துள்ளனர். (மு-11)


## பிரத்தியேக வகுப்பு

2017 O/L பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணிதம், வணிகக் கல்வியும் கணக்கீடும் கடந்த 5 வருடகால மாதிரி வினாத்தாள்கள் அனுபவமிக்க ஆசிரியரால் தங்கள் வீடுகளுக்கு வந்து தனியாகவோ/ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:-**
**0776452622**

(818)


# மாடு மோதியதில் ஒருவர் காயம்


(யாழ்ப்பாணம்)

வீதியால் நடந்து சென்ற குடும்பஸ்தர் மீது மாடு மோதியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய் மாலை 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் கிளிநொச்சி கந்தபுரத்தை சேர்ந்த வேலுப்பிள்ளை (வயது 76) என்பவரே படுகாய மடைந்துள்ளார். (மு-30)

# சிவகரனுக்கு அழைப்பு?

(மன்னார்)



மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரனை, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி காலை 9 மணிக்கு விசாரணைக்கு வருமாறு, கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவின் ஊடாக அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார்-மாந்தை திருக்கேதீஸ்வரம் பகுதியில், தனியாருக்கு சொந்தமான 10 ஏக்கர் காணியை அபகரித்து, விகாரை அமைப்பது தானா நல்லாட்சி என, மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக, கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியதோடு, குறித்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

மேலும், எமது நியாயபூர்வமான வேண்டுகைளைப் புறக்கணித்து, நாளை 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை குறித்த திறப்பு விழா நடைபெற்றால், ஜனநாயக ரீதியில் கறுப்பு கொடியேந்தி முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம் என, குறித்த கடிதத்தில் குறிப் பிடப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே, சிவகரனை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவின் 2ஆம் பிரிவில் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில், சிவகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

விசாரணைக்கு வருமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. குறித்த அழைப்பாணை கடிதம் வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவினூடாக நேற்று பகல் எனக்கு கிடைத்துள்ளது என்றார். (மு-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 222 7603, 021 567 1532



## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

01.பதவி, குறியீட்டு இல. : கணனிப் பக்க உருவாக்குநர் 322/15
சம்பள அளவுத்திட்டம் : 13515-110X10-120X10-15815.00 (13/2015 இன் படி)
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : க.பொ.த சா.தர பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் உள்ளடங்கிய 06 பாடங்களில் சித்தியுடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழுநேர MS OFFICE அல்லது அதை ஒத்த கணனி பாடநெறி ஒன்றை பூர்த்தி செய்தமைக்கான தகைமை சான்றிதழ் அத்துடன் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஓராண்டுக்கு குறையாத செயல் அனுபவம்.

02.பதவி, குறியீட்டு இல. : விற்பனை உதவியாளர் 308/17
சம்பள அளவுத்திட்டம் : 12800-100X10-110X10-14900.00 (13/2015 இன் படி)
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ்
அல்லது
08ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்
விண்ணப்ப முடிவுத்திகதி : 12.10.2017

### நிபந்தனைகள்

01.பதவிக்கேற்ப பிணைப்பணம் அறவிடப்படும்.
02.வயது 18 தொடக்கம் 45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் (கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது)
03.அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்கப்படும்.
04.கூட்டுறவுச் சங்கங்களில் தற்பொழுது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.
05.சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
06.விண்ணப்பங்கள் முழுப்பெயர், முகவரி, தே.அ.அ.இல. பிறந்த திகதி, தகைமைகள், அனுபவம் என்பவை உள்ளடங்கலாக சுயமாக தயாரிக்கப்பட்டு அல்லது சங்கத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து கல்விச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் மேலதிக தகைமைகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
07.விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.
08.விண்ணப்பங்கள் '**தலைவர், பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி, பளை**' எனும் முகவரிக்கு எதிர்வரும் 12.10.2017ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
09.தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும், பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

**க.இராசதுரை**
**தலைவர், பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்**
**2017.09.28**

(822)







## கிழவன்காடு கலாமன்றம் யாழ்.கிளை



### புதிய மாணவர்களுக்கான நாள் வகுப்பும் அனுமதியும்

**நடைபெறும் கலை வகுப்புகள்**
அறநெறி பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வீணை, வயலின், சித்திரம், யோகாசனம், தியானம்.

காலம்:-2017.09.30 சனிக்கிழமை
(விஜயதசமி)
பி.ப 2.00-3.00 மணிவரை

பதிவாளர்,
கிழவன்காடு கலாமன்றம்,
யாழ்.கிளை
T.P:-0776408512

இல.11, 1-வது கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உதயன் பணிமனை அருகில் உள்ள ஒழுங்கை)

(சி-9775)



## பணியாளர்கள் தேவை

நெல்லியடியில் உள்ள மகளிர் நிலையம் ஒன்றில் பணிபுரிவதற்கு இரண்டு பெண்பணியாளர்கள் தேவை.

01.ஐபுரோ/திரேட்டிங்/பேசியல் தேர்ச்சியுள்ளவர்
02.சுத்திகரிப்பாளர் / உதவியாளர் தேவை
● பணிகளுக்கு தேவையான தகைமையுள்ளவர்கள் தாமே உடன் நேரில் வரவும்.

**தூரிகை**
**மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி.**

(சி-9774)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## அரசியல் கைதிகளுக்கான அமைப்பு அனைத்து தரப்பிடமும் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை இழுத்தடிப்பது அவர்களுக்குக் கொடுக்கின்ற மறைமுகமான தண்டனை என தெரிவித்துள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, அவர்களின் விடுதலைக்காக அனைத்துத் தரப்பினரும் இணைந்து அரசிற்கு அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும் எனவும் கோரியுள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,

அநுராதபுர சிறைச்சாலையில் மூன்று அரசியல் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். வவுனியா நீதிமன்றிலிருந்து தம்முடைய வழக்குகளை வேறு நீதிமன்றிற்கு மாற்றவேண்டாம் எனக் கோரிக்கை விடுத்து கடந்த மாதம்20ஆம்திகதிஉண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

வவுனியா நீதிமன்றில் இவர்கள் மீதான வழக்கு இம்மாதம் 25,26,27 ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் இவர்களின் வழக்கு விடயத்தில் நீதியான நிலைப்பாடு எடுக்க வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கடிதமொன்றை கையளித்தது. அதன் மீது நம்பிக்கை வைத்து தமது உண்ணா விரதப் போராட்டத்தினை கடந்த மாதம் 25 ஆம் திகதி கைதிகள் இடைநிறுத்தியிருந்தனர்.

இருப்பினும் எதிர்க்கட்சித் தலைவர் மீதும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீதும் நம்பிக்கை இழந்து மீண்டும் உண்ணா விரதப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர். இது கவலையளிக்கின்றது.

கடந்த மாதம் இவர்கள் உண்ணா விரதம் இருந்த போது இவர்களின் உறவுகள் "உண்ணா விரதம் இருப்போருக்கு ஏதும் நடந்தால் அதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவரும் அரசுமேபொறுப்பேற்கவேண்டும்" எனக் கூறியதை மீண்டும் நாம் நினைவுறுத்துகின்றோம்.

அரசியல் கைதிகளின் வழக்குகளை விசாரிப்பதற்கு நீண்டகாலம் எடுத்துக் கொள்ளப்படுவதையும் வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுவதையும் அவர்கள் கொடுக்கின்ற மறைமுக சித்திரவதையாகவும் தண்டனையாகவுமே கருதவேண் டும்.

புதிய பிரதேசத்தில் புதிய சட்டத்தரணிகளை தேடுவதும் அவர்களுக்கான பணத்தை தேடுவதென்பதும் அரசியல் கைதிகளின் உறவுகளுக்கு பெரும் மனவுளைச்சலை ஏற்படுத்துவதோடு. அரசும் அரசியல்வாதிகளும் தங்களை ஏமாற்றுகின்றார்கள் எனும் மனவேதனைக்கும் உள்ளாகின்றனர்.

ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் வழக்குகளை துரிதப்படுத்துங்கள் எனக் கூறுகையில் காலத்தை இழுத்தடிக்க வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுவதென்பது ஐ.நாவை அவமதிக்கும் செயலாக நாம் கருதுகின்றோம்.

அரசியல் கைதிகளின் பிரச்சினையை அரசு அரசியலாக நோக்குவது நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என நாம் தொடர்ச்சியாக்க கூறிவருகின்ற நிலையில் நல்லிணக்க ஆதரவாளர்களும் வடக்கு- கிழக்கு தமிழ் மக்களும் அரசியல் கைதிகளுடைய விடுதலையை வலியுறுத்தி அரசிற்கு அழுத்தம் கொடுக்க முன்வருமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலாவுக்கு இலங்.ஜனாதிபதி மைத்திரி வாழ்த்து





நான்காவது முறையாகவும் ஜேர்மன் ஜனாதிபதியாக தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் ஏஞ்சலா மார்க்கலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

"நாட்டின் தலைவராக நான்காவது முறையாகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கும் உங்களுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். "இந்த தேர்தல் வெற்றி உங்களது சிறந்த தலைமைத்துவத்தையும் ஜேர்மன் மக்கள் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகிறது" எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் நான்காவது முறையாகவும் வெற்றிபெற்றுள்ள ஏஞ்சலா மார்க்கலுக்கு ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். (இ-3)

# தியாக தீபம் திலீபன் நிராகரித்த தீர்வை தமிழ் மக்கள் மீது திணிக்க அரசு முயற்சி

## த.தே.ம.முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஒரு சொட்டு நீராகாரமும் அருந்தாமல் உண்ணா விரதம் இருந்து தியாக தீபம் திலீபன் எதற்கு எதிராகப் போராடி மரணித்தாரோ அதனையே இலங்கை அரசாங்கம் தற்போது தமிழ் மக்களுக்கு தீர்வாக திணிக்க முயல்கின்றது என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்திய அரசிடம் ஐந்தம்சக் கோரிக்கையை முன் வைத்து உண்ணாவிரதம் இருந்து மரணித்த தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் நல்லூரில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த அரசு தமிழ் மக்களுக்கு திணிக்க முயலும் ஒற்றையாட்சி முறைமையை நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம். புதிய அரசிலமைப்பில் சமஷ்டி இருக்கின்றது. ஒற்றையாட்சி இல்லை என மக்களை ஏமாற்றி சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெற இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த முயற்சிகளை மக்களோடு இணைந்து புறந்தள்ள அல்லது தோற்கடிக்க அனைவரும் ஒன்று திரள வேண்டும் என இந்த இடத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேவேளை புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற மக்களும் முப்பது ஆண்டுகாலத் திற்கும் மேலாக எமது போராட்டத்திற்கு பொருளாதார வழியிலும் [illegible] வழியிலும் உதவிய மக்கள் இப்போது எமது கொள்கை சார்ந்த போராட்டங்களை வீதிகளில் இறங்கி முன்னெடுக்க வேண்டும்.

இன்று அரசு அறிவித்துள்ள புதிய அரசிலமைப்பின் யோசனைகளை முற்றாக நிராகரித்து எமது இறைமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வை நோக்கி நாங்கள் நகர வேண்டும். தாயகத்தில் இருக்கும் இலட்சக்கணக்கான உறவுகளுக்கு புலம்பெயர் மக்கள், இந்த ஒற்றையாட்சி அரசிலமைப்பை நிராகரிக்க வேண்டும் என்ற தகவலைக் கூற வேண்டும். இந்தக் கணத்தில் மக்கள் உறுதியுடன் போராடினால் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வை நோக்கி நகர முடியும் என கஜேந்திரன் மேலும் தெரிவித்தார். (இ-4)

# சீனாவின் போட் சிற்றிக்கு இலங்கையில் தனிச்சட்டம்

## இந்தியா கடும் விசனம்

(கொழும்பு)

கொழும்பு போட் சிற்றி துறைமுகத்திற்கென தனியான சட்டம் ஒன்றை உருவாக்கி இலங்கையின் அரசியலமைப்பில் சேர்ப்பது தொடர்பாக அரசாங்கம் ஆலோசனை நடத்தி வருகின்றது.

ஆனால் அவ்வாறு புதிய சட்டம் ஒன்றை தயாரிப்பது குறித்து இந்தியா கடும் விசனம் தெரிவித்துள்ளதாகவும் எனினும் சீன அரசின் தேவைக்கேற்ப புதிய சட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும் அமைச்சரவைத் தகவல்கள் கூறுகின்றன.

முற்று முழுதாக சீனாவின் நிர்வாகத்தில் அமையவுள்ள கொழும்பு போட் சிற்றி திட்டம் அதி உயர் வர்த்தக நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஆடம்பர மையமாகவும் அதி உயர் பாதுகாப்பு பிரதேசமாகவும் அமையவுள்ளது.

இலங்கையின் கொழும்பு காலிமுகத்திடல் நிலப்பரப்பில் இருந்து 3ஆயிரத்து 320 ஹெக்டேயர் கடற்பரப்பை மண்ணால் நிரப்பி அமைக்கப்பட்டு வரும் புதிய பிரதேசம் தனியான சட்ட திட்டங்களுக்குள் அமைந்திருக்க வேண்டும் என சீனா கூறியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த போதே இதற்கான இணக்கப்பாடு ஏற்பட்டது எனவும் ரணில்-மைத்திரி நல்லாட்சி அரசாங்கமும் அந்த இணக்கப்பாட்டை தொடர்ந்து அமுல்படுத்தவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

புதிய அரசியல் யாப்பில் கொழும்பு போட் சிற்றி குறித்த சட்டமூலம் இடம்பெறும் எனவும் தற்போது சட்டமா அதிபர் திணைக்களம் அதற்கான வரைவை செய்து வருவதாகவும் அமைச்சரவைத் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை சீன உயர் அதிகாரிகளின் பங்களிப்பும் இந்த புதிய தனியான சட்டமூலம் தயாரிக்கப்படும் விடயத்தில் உள்ளதாகவும் ஐக்கிய தேசிய கட்சி,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட சிங்கள கட்சிகளும் இந்த புதிய சட்டமூலத்திற்கு இணங்கியுள்ளது எனவும் மற்றுமொரு தகவல் கூறுகின்றது. (இ-7)

# க.பொ.த.உயர் தரப் பரீட்சை பெறுபேறு டிசெம்பர் 27 இல்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் நாடளாவிய ரீதியில் இப்பரீட்சை நடைபெற்று முடிந்தது. இப்பரீட்சையின் ஆரம்ப கட்ட விடைத்தாள் திருத்தும் பணிகளும் நிறைவடைந்துள்ளன.

இதேவேளை, நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகளுக்கான பெறுபேறுகளை மார்ச் 28 ஆம் திகதி வெளியிட திட்டமிட்டுள்ளதாக [illegible] (இ-7)

# இந்தியாவின் வெற்றி நடை தொடருமா? ஆஸியுடன் இன்று பெங்களூருவில் மோதல்

இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் மோதும நான்காவது போட்டி இன்று பெங்களூருவில் நடக்கிறது. இதிலும் இந்தியா வெல்லும் பட்சத்தில், தொடர்ந்து 10 ஒருநாள் போட்டிகளில் வென்று வரலாறு படைக்கலாம்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டியில் வென்ற இந்தியா ஏற்கெனவே தொடரை 3-0 என கைப்பற்றிய நிலையில், நான்காவது போட்டி இன்று பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடக்கிறது.

ஆரம்ப வீரர்களான ரகானே, ரோகித் வலுவான அடித்தளம் அமைத்து தருகின்றனர். இரண்டாவது போட்டியில் 92 ஓட்டங்கள் விளாசிய ஹோலி, எதிரணிக்கு இன்றும் சவால் தரலாம். ஐ.பி.எல்., தொடரில் இவர் தலைமையிலான பெங்களூரு அணியின் சொந்த மைதானத்தில் இன்று போட்டி நடப்பது சாதகம்.

**வருவாரா ராகுல்**

மணிஷ் பாண்டே(3 போட்டி, 36 ஓட்.), கேதர் ஜாதவ் (3 போட்டி, 66 ஓட்.) செயல்பாடுதான் ஏமாற்றம் தருகிறது. இவர்களின் ஆட்டம் 'நடுத்தர வரிசையை' பலவீனமாக்குகிறது. ஜாதவ் நீக்கப்படலாம். உள்ளூர் ரசிகர்கள் முன் லோகேஷ் ராகுல் களம் காணலாம்.

**பாண்ட்யா கலக்கல்**

முதல் போட்டியில் 79 ஓட்டங்கள் விளாசிய தோனியிடம் ரசிகர்கள் அதிகம் எதிர்பார்க்கின்றனர். நம்பிக்கை நட்சத்திரமாக ஹர்திக் பாண்ட்யா திகழ்கிறார். 3 போட்டிகளிலும் இரண்டு அரை சதம் அடித்துள்ள இவரின் 'போர்ம்' மிரட்டலாக உள்ளது. போட்டியின் போக்கை மாற்றும் 'சகலதுறை வீரராக' இருக்கிறார்.

**அசத்தும் 'சுழல்':**

கொல்கத்தா போட்டியில் 'ஹட்ரிக்' விக்கெட் வீழ்த்தி 'சைனாமேன்' பவுலர் குல்தீப் குதூகலித்தார். தன் பங்கிற்கு சகாலும் எதிரணிக்கு தொல்லை தருகிறார். ஒரு புறம், புவனேஷ்வர் பந்தை 'சுவிங்' செய்தால், மறுபுறம் பும்ரா 'யோர்க்கராக' வீசுகிறார்.

**தொடர் தோல்வி:**

அவுஸ்திரேலிய அணி, அந்நிய மண்ணில் கடைசியாக பங்கேற்ற 11 ஒரு நாள் போட்டியிலும் வீழ்ந்துள்ளது. இந்தூர் போட்டியில் ஆரோன் பின்ஞ் சதம் அடித்து மிரட்டினார். வோர்னரும் விளாசினார். இந்திய பந்துவீச்சை அணித் தலைவர் ஸ்மித் அனாயசமாக எதிர் கொள்கிறார். இப்படி ஆரம்பம் நம்பிக்கை தந்தாலும், 'நடுத்தர வரிசை சொதப்பல் தொடர்கிறது. இதுதான் தோல்விக்கு முக்கிய காரணமாக உள்ளது. டிராவிஸ் ஹெட், மக்ஸ்வெல், வேட், ஹேண்ட்ஸ்கோம் என ஒருவர் கூட சோபிக்கவில்லை. ஸ்டாய்னிஸ் மட்டுமே ஆறுதல் தருகிறார். 'வேகத்தில்' குல்டர்-நைல் விக்கெட் வீழ்த்தினாலும், ரிச்சர்ட்சன் நிலை போராட்டமாகத்தான் உள்ளது. சுழற்பந்து வீச்சிலும் ஏமாற்றமே கிடைக்கிறது. அஷ்டன் ஏகர் காயத்தால் விலகியதால், மீண்டும் ஷாம்பா களமிறங்கலாம்.

**சாதனை நோக்கி...**

கடந்த ஜூலை 2ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகளிடம் (அன்டிகுவா) இந்தியா தோல்வியடைந்தது. பின், எழுச்சி கண்ட ஹோலி தலைமையிலான இந்திய அணி, மேற்கிந்தியத் தீவுகள் (1), இலங்கை (5 ), அவுஸ்திரேலியாவை (3) வீழ்த்தி தொடர்ந்து 9 போட்டிகளில் வெற்றி பெற்றது. இன்றும், அசத்தினால் ஒரு நாள் அரங்கில் முதல் முறையாக தொடர்ந்து 10 வெற்றி பெற்று சாதனை படைக்கலாம். இந்த இலக்கை எட்டிய முதல் இந்திய தலைவர் என்ற பெருமையும் ஹோலிக்கு கிடைக்கும்.

* அவுஸ்திரேலிய அணிதான் அதிக முறை (6) தொடர்ந்து 10 ஒரு நாள் போட்டியில் வென்றுள்ளது. அடுத்த இடத்தை தென்னாபிரிக்கா (5) வகிக்கிறது. பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை அணிகள் இந்த இலக்கை தலா இரண்டு முறை எட்டி உள்ளன. இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் தலா ஒரு முறை இந்த நிகழ்வை நிகழ்த்தி உள்ளன.

* ஒட்டுமொத்தமாக, தொடர்ந்து அதிக ஒரு நாள் போட்டியில் வெற்றி (21) பெற்ற அணி என்ற பெருமையை அவுஸ்திரேலியா பெற்றுள்ளது. அடுத்த இடத்தில் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் தலா 12 வெற்றியுடன் உள்ளன.

**மிரட்டும் மழை**


போட்டி நடக்கும் பெங்களூரு நகரின் இன்றைய வெப்பநிலையை பொறுத்தவரை அதிகபட்சம் 26, குறைந்தபட்சம் 20 டிகிரி செல்சியாக இருக்கும். மழை வர 80 சதவீதம் வாய்ப்புள்ளது.

**இதுவரை...**

இம்மைதானத்தில் இரு அணிகளும் இதுவரை 6 ஒரு நாள் போட்டிகளில் மோதின. இதில் இந்தியா 4, அவுஸ்திரேலியா ஒன்றில் வென்றன. மழை காரணமாக, ஒரு போட்டிக்கு முடிவு இல்லை.

**ரோகித் 'ராசி'**

கடந்த 2013 நவம்பர் 3ல் இங்கு நடந்த ஒரு நாள் போட்டியில் இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் மோதின. இதில் விஸ்வரூபம் எடுத்த இந்திய ஆரம்ப வீரர் ரோகித் இரட்டை சதம் (209) விளாசினார். இன்றும், அதே அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இவர் களமிறங்க உள்ளதால், பழைய ராசி கைகொடுக்கலாம்.



**100ஆவது போட்டி**

அவுஸ்திரேலிய தொடக்க வீரர் வோர்னர் தனது 100வது ஒரு நாள் போட்டியில் இன்று களமிறங்க உள்ளார்.

# மிதாலி ரொம்பவே மாறிட்டாங்க!




உடை விஷயத்தில் ரொம்பவே மாறிவிட்டார் மிதாலி ராஜ். கவர்ச்சியாக 'போஸ்' கொடுத்து ரசிகர்களை கிறங்கடிக்கிறார்.

இந்திய பெண்கள் அணித் தலைவர் மிதாலி ராஜ், (வயது-34) உலக கிண்ண இறுதிக்கு அணியை அழைத்துச் சென்றதும் மிக பிரபலமானார். சமீபத்தில் தனது தோழிகளுடன் எடுத்த கவர்ச்சி போட்டோவை வெளியிட்டு சர்ச்சையில் சிக்கினார்.

இதனிடையே, பிரபல ஆங்கில இந்திய பதிப்பின் பத்தாவது ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. இதன் சார்பில் இந்த ஆண்டின் சிறந்த பெண்ணாக மிதாலி ராஜ் தேர்வு செய்யப்பட்டார். தவிர, வில்வித்தை வீராங்கனை தீபிகா குமாரியும் தேர்வானார்.

இந்த பத்திரிகை சார்பில் வெளியான அட்டைப்படத்தில் மிதாலி ராஜ், பாலிவுட் நடிகர் ஷாருக் கான், மும்பை ஐ.பி.எல்., அணி உரிமையாளர், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினர் நீட்டா அம்பானி என, மூன்று பேர் இடம் பெற்றுள்ளனர்.

இதில், கறுப்பு உடையில், தலைமுடியை முன் பக்கமாக எடுத்து விட்டு பார்க்க, பாலிவுட் நடிகை போல கவர்ச்சியாக போஸ் கொடுத்து உள்ளார் மிதாலி ராஜ்.

இதுகுறித்து ஒரு ரசிகர் வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில்,' பார்க்க அற்புதமாக உள்ளீர்கள் தலைவி' என, தெரிவித்துள் ளார்.

மற்றொரு ரசிகர்,' பார்க்க அழகாக, ராணி போல இருக்கிறார்,' என தெரிவித்துள்ளார்.

# ரொனால்டோ '400': மட்ரிட் வெற்றி



ரியல் மட்ரிட் அணி சார்பில் 400ஆவது போட்டியில் களமிறங்கிய கிறிஸ்டியானோ ரொனால்டோ, 2 கோல்கள் அடித்து அசத்த மட்ரிட் 3-1 என்ற கோல்கள் கணக்கில் டார்ட்மண்ட் அணியை வீழ்த்தியது.


ஐரோப்பாவில் கழக அணிகளுக்கு இடையில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது. டார்ட்மண்ட் பகுதியில் நடந்த லீக் போட்டியில் ரியல் மட்ரிட் - பொருசியா டார்ட்மண்ட் அணிகள் மோதின.

18ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் வீரர் கேரத் பேல் முதல் கோல் அடித்தார். இதன்பின், நட்சத்திர வீரரான ரொனால்டோ அசத்தினார். தனது அபார ஆட்டத்தால் (49, 79ஆவது நிமிடம்) இரண்டு கோல் அடித்து கைகொடுத்தார். எதிரணி சார்பில், பியாரே (54) மட்டும் பதிலடி தந்தார். முடிவில், ரியல் மாட்ரிட் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**ரொனால்டோ '400'**

இது, ரியல் மட்ரிட் அணிக்காக ரொனால்டோ களமிறங்கிய 400ஆவது போட்டியாக அமைந்தது. இதுவரை, இவர் 400 போட்டியில் 411 கோல்கள் அடித்துள்ளார். தவிர, இத்தொடரில் ரொனால்டோ விளையாடிய 150ஆவது போட்டியாக அமைந்தது.

மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

திரு. அ. யூட்ஸ் கருணாகரன்
(SLEAS III) (ஆங்கிலம்)

எமது கல்லூரியில் ஆசிரியர்களாகச் சேவையாற்றி 26.09.2017 அன்று BMICHஇல் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் IIIற்கான நியமனத்தைப் பெற்ற மேற்படி எமது ஆசிரியர்களை மனம் மகிழ்ந்து வாழ்த்துவதோடு இவர்களது கல்விப் பணி மேலும் சிறக்க இறைவனை வேண்டுகின்றோம்.

திரு. மு. காந்தச்செல்வன்
(SLEAS III) (சுகாதாரமும் உடற்கல்வியும்)

இவர்களுடன்



திரு. தெ. மணிவண்ணன்

எமது கல்லூரியில் விசேட கல்வி ஆசிரியராகச் சேவையாற்றித் தற்போது தீவகம் கல்வி வலயத்தில் விசேட கல்விக்கான ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றும் திரு. தெ.மணிவண்ணன் அவர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/வட்டு. இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.

[815]

# புதிய அரசியலமைப்பில் பௌத்தத்திற்குரிய அதிவிசேட சிறப்பு அவசியம்- சு.க. உறுதி

(கொழும்பு)

அரசியலமைப்பில் இதுவரை காலமும் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டிருந்த அதிவிசேட சிறப்பு, புதிய அரசியலமைப்பிலும் வழங்கப்பட வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு செயற்குழு சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்சிகளின் நிலைப்பாடுகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதனைத் தெளிவாக குறிப்பிட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

தற்பொழுதுள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்கள் எதுவும் மாற்றம் செய்யப்படக் கூடாது எனவும் கட்சியின் இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## ஏல விற்பனை

மரத்தளபாடங்களும் அலுமினியப் பாத்திரங்களும் சிறிய இரும்பு உபகரணங்களும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.
இடம்- யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.
காலம் - 11.10.2017
நேரம் - 10.00 மணி (சி-9769)
அதிபர்,
யா/கொழும்புத்துறை இந்து ம.வித்தியாலயம்.

# கண்ணீரில் கரைந்த இரண்டாம் வருட நினைவஞ்சலி

அமரர்.

## குகனேஸ்வரி இராஜேந்திரன்

(பிரபல புவியியல், சமூகக் கல்வி ஆசிரியர், B.A, Dip In Edu, SLTS-I)

(நெடுந்தீவு மகா வித்தியாலயம், வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யா/கனகரட்ணம் ம.ம.வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றியவர்)



பிறப்பு: 1963.01.09 இறப்பு: 2015.10.20

அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமாய்
திகழ்ந்தவள் நீ அம்மா!
இனிய மொழி பேசியே உன் முத்தான மூன்று
பிள்ளைகளுக்கும் கலைகளை கற்பித்த ஆசான் நீ அம்மா!
அப்படி இருக்கையில் கண்ணீர் எனும் கடல்
தந்து ஆண்டு இரண்டானதம்மா!
உன் நினைவில் நித்தமும் வாடுகின்றோம் அம்மா!
நீ இல்லா வாழ்வு நடுக்கடலில் தத்தளிக்கும்
படகு போல் உள்ளதம்மா!
அப்பாவின் கண்ணீர் கடல் இன்னமும்
வற்றவில்லையம்மா!
மீண்டும் இப் பூமியில் பிறப்புண்டானால்
எமக்கு தாயாக நீ வேண்டும்...
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



(சி-6012)

"குகா இல்லம்"
110/1 இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 6777

என்றும் உன் நினைவுடன்
கணவன்,பிள்ளைகள்.

# இராசி பலன்

28.09.2017
(புரட்டாதி 12, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
அட்டமி முன்னிரவு 9.35 மணிவரை
மூலம் பிற்பகல் 1.03 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32--3.02 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகிணி, மிருகசீரிடம் | | ராகு |
| கேது | | | செவ் |
| சந் | சனி | குரு | சூரி. சுக் புத |

**மேடம்:** தடைகள் அகன்று தன வரவுகள் பெருகும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், திக்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகளைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**கடகம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாடு சிறப்பினைத் தரும்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்:** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், தனவரவு திருப்திகரமாக அமையும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு:** காரிய வெற்றிக்கு அம்பிகையை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.

**மகரம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சஞ்சலங்கள் கூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** திகைக்கும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.




ஊடகவியலாளர் பற்றிக் அல்பேட் அஸ்வின் சுதர்சனின் ஓராண்டு நினைவு நிகழ்வும் அவரது நினைவுகளைத் தாங்கிய கோடுகளால் பேசியவன் என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் ஹம்சியா மகால் மண்டபத்தில் நடைபெற்றன.

# தொழில்நுட்ப பீடம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நெல்லியடி மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப பீடத் திறப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு இக்கட்டடத்தை திறந்து வைப்பார். (இ-3-60)

# ஈழத்து தில்லையம்பதியில் மானம்பூ உற்சவம் 30ம் திகதி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழா சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

நாளை மறுதினம் 30 ஆம் திகதி விஜயதசமி நிகழ்வை முன்னிட்டு மானம்பூ உற்சவம் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருதல் இடம்பெறும். (இ-3)

# சனசமூக நிலையத்தின் 35 வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் மகேந்திரபுரம் பதுவையர் சனசமூக நிலையத்தின் 35 ஆவது ஆண்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 6 மணியளவில் பதுவையர் சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் அ.பிறாங்கிளின் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பொ.தயானந்தன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் ஆகியோர் கலந்து கொள்வர். பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ-10-107)

# பேருந்து மீது தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கைதடி நுணாவில் பகுதியில் கடந்த 25 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் 6 பேர்கொண்ட குழுவினர் நுழைந்து அங்கு தரித்து நின்ற தனியார் பேருந்தின் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

தடுக்க வந்த உரிமையாளரையும் தாக்க முற்பட்ட வேளை அவர் தாக்குதலிலிருந்து தப்பினார். யாழ்ப்பாணத்திற்கும் முல்லைத்தீவிற்குமிடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தே தாக்குதலுக்கு உட்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலி ஸில் முறைப்பாடு பதிவுசெய் யப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ-29)

# நகர அபிவிருத்தித் திட்டம் குறித்து யாழில் நாளை கலந்துரையாடல்

யாழ்.குடாநாட்டின் நகர அபிவிருத்தித்திட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை யாழ்.முகாமையாளர் சம்மேளனம் இலங்கை பொறியியளாளர் நிறுவகம் (வட பிராந்தியம்) இணைந்து ஒழுங்கு செய்துள்ளது. நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் வட மாகாணம் நகர அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் ஜி.கே. குணதிலக கலந்து கொள்ளவுள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ)

# சின்மயா மிஷனின் வியதசமி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் விஜயதசமி நிகழ்வு நாளை மறுதிழனம் 30 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இடம்பெறும். இதில் குழந்தைகளுக்கான வித்தியாரம்பம் (ஏடு தொடக்குதல்), சமஸ்கிருத அட்ஷர ஆரம்பம் என்பன சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்னயாவால் ஆரம்பித்து வைக்கப்படும். (இ-3)

# வீணாகான குருபீடத்தின் விஜயதசமி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வீணாகான குருபீடத்தின் விஜயதசமி நிகழ்வு நாளை மறுதினம் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் 8 மணி வரை சித்தன்கேணி வீணாகாண குருபீடத்தில் இடம்பெறும்.

இதில் ஏடுதொடக்கல், சரஸ்வதி வித்தியாநூல் அணிவித்தல், குருகுல நாள் வகுப்பு ஆரம்பம், ஆசீர்வாதம் வழங்கல், குழந்தைகளுக்கு பரிசில் வழங்கல் என்பன இடம்பெறும். (இ-3)




# நியாய விலைக்கடை திறப்பு



(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அதிகார சபையினால் கப்பூது கிராம மக்களுக்கான நியாய விலைக் கடை திறப்பு விழா அண்மையில் கப்பூது காட்டு கந்த சுவாமி ஆலய பரிபாலன சபைத் தலைவர் சிவகுருநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் சிறிமோகனன், பிரதேச செயலக கணக்காளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (இ-60)

# காந்தி ஜெயந்தியும் சர்வதேச அகிம்சை தினமும்

யாழ்.இந்தியத் துணைத் தூதரகமானது அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினருடன் இணைந்து காந்தி ஜெயந்தியையும் சர்வதேச அகிம்சை தினத்தையும் முன்னிட்டு சிறப்புப் பட்டிமன்ற நிகழ்வினை எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் கலாநிதி கு.ஞானசம்பந்தன் தலைமையில் யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பேச்சாளர்களான பேராசிரியர் ரி.வேல்நம்பி, எஸ்.லலீசன், என்.விஜயசுந்தரம், ஆர். சர்வேஸ்வரா, செல்வி பிரியா வின்சன்பீரிஸ், செல்வி கேதுயாளினி ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

மகாத்மா காந்தியின் பிறந்தினத்தை நினைவுகூரும் முகமாக ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 2 ஆம் திகதி காந்தி ஜெயந்தி கொண்டாடப்பட்டு வருகின்றது. மேலும் இந்தியாவில் மட்டுமல்ல ஐக்கிய நாடுகள் சபையிலும் காந்தி ஜெயந்தியை சர்வதேச அகிம்சை தினமாகப் பிரகடனப்படுத்தி வருடம்தோறும் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டி வேவில் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் வாணிவிழா இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் சனசமூக நிலையத் தலைவர் த.ஸ்ரீதர்சன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் சிவகாசித்தாந்த ஞான தேசிக பானு சிவஸ்ரீ சோ.தண்டபாணி தேசிகர் ஆசியுரையினை வழங்குவார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் கே.தர்மலிங்கம், வல்வெட்டித்துறை பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி கே.ரத்ஜயா, ஓய்வுபெற்ற தலைமை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தவநாயகம், வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ஸ்ரீஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)



வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் சந்தைப் படுத்தல் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பனம் பொருள் உற்பத்தி தொடர்பான முழுநாள் பயிற்சி நெறி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைதடி பனை தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. (படங்கள்:-தும்பளைச் செய்தியாளர்)

# கலை ஆற்றுகை நிகழ்ச்சி 1ம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கியக் குவியம் நடத்தும் கலைவெளி- I (படைப்பாளருக்கான கலை ஆற்றுகை நிகழ்ச்சி) எதிர்வரும் 01.10.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு i LEAD கணனிக் கல்வி நிறுவனத்தில் (பழைய பூங்கா வீதி, ஈச்சமோட்டை, உப தபாலகம் முன்பாக) ஜீவலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ-3)

# கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா 30 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 30 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலையின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் எம்.ஞானசம்பந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவர் ரகு தேவராஜா, சிறப்பு விருந்தினராக இப்பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் வே.ஞானகாந்தன், கௌரவ விருந்தினராக பழைய மாணவியும் சட்டத்தரணியுமான செல்வி ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-3)

# தமிழ் அமைப்புகளின் கோரிக்கை ஏற்பு; வைகோவிற்கு ஐ.நா.சார்பில் பாதுகாப்பு




தமிழ் அமைப்புகளின் கோரிக்கையை ஏற்று வைகோவுக்கு பாதுகாப்புத் தர ஐ.நா சார்பில் 2 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் பேசிய வைகோ, சுதந்திர தமிழீழ தேசம் அமைப்பதற்கான பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை சுட்டிக்காட்டினார். மனித உரிமைகள் ஆணையக உறுப்பினர் நாடுகள் பொது வாக்கெடுப்பின் மூலமாகத் தமிழீழ தேசத்தை அமைக்க முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கூட்டத்தில் உரையாற்றி விட்டு வெளியே வந்த வைகோவை சிங்களப் பெண் ஒருவர் வழிமறித்து அவரை திட்டியுள்ளார். பின்னர் அவருடன் சேர்ந்து வந்த சில சிங்களவர்கள் அவரை சுற்றி வளைத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். வைகோவை தாக்க முயன்றதாகவும் கூறப்படுகிறது. ஆனால், தமிழர்களுக்கு ஆதரவாக பேசுவதற்கு தனக்கு உரிமை உள்ளது என்று வைகோ வாதாடினார்.

பிரச்சினை முற்றிய நிலையில் அங்கிருந்த பாதுகாவலர்கள் வைகோவை பாதுகாப்பாக வெளியே கொண்டு வந்து விட்டுள்ளனர்.

இதுபற்றி செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, இலங்கையில் 90 ஆயிரம் விதவைகள், காணாமல் போன கணவன், தந்தையை தேடி கண்ணீர் விட்டு அழுது கொண்டிருக்கிறார்கள். 210 நாட்களாக பெண்கள் கிளிநொச்சியில் உண்ணா விரதம் இருக்கிறார்கள். எங்கள் மக்கள் அழிக்கப்பட்டுளங்கள் இனமே அழிக்கப்படும் கொடுமை நடந்துகொண்டிருக்கிறது. 2015 தீர்மானத்தை ஏற்க வேண்டியதில்லை என்று ரணில் விக்ரமசிங்கவும் மைத்ரிபாலா சிறிசேனவும் சொல்கிறார்கள். எனவே, மனித உரிமை ஆணையம் இதனை ஐ.நா. பொதுச் செயலாளருக்கு அனுப்பி அவர் நேரடியாக இலங்கை வந்து பார்வையிட்டு நீதி வழங்க வேண்டும் என்று பேசினேன்.

இதற்கு சிங்களப் பெண் ஒருவர் திட்டினார். போர்க்குற்றத்தில் ஈடுபட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் வீரசேகரா தலைமையிலான சிங்களவர்களே தகராறு செய்தனர். நீங்கள் தற்கொலை தீவிரவாதிகள், கொலைகாரர்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நானும் பதில் பேசினேன். ஆனால், அவர்கள் பிரச்சினை செய்ய வேண்டும் என்று திட்டமிட்டே வந்துள்ளனர். நான் பேசுவதை மட்டுமே வீடியோவில் பதிவு செய்தனர் என்று அவர் கூறினார்.

ஜெனிவாவில் வைகோவை சிங்களவர்கள் தாக்க முயன்றதற்கு தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். வைகோவிற்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று தமிழ் அமைப்பினர் சார்பில் கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

இதனையடுத்து வைகோவிற்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஐ.நா சார்பில் 2 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# சர்ச்சையில் சிக்கிய செயலாளர் பதவி உயர்வுடன் இடமாற்றம்



கின்னஸ் சாதனையை நிலைநாட்ட முயன்று சர்ச்சையில் சிக்கிய மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் விஜயரத்னவுக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் விஜயரத்ன ஊவா மாகாண பிரதம முன்னாள் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கண்டி கன்னொருவ நகரில் வீதியில் திருமணப் பெண்ணின் சேலையை மூன்று கிலோமீற்றர் வரை உருவாக்கி கின்னஸ் சாதனைக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சேலையை ஏந்திப் பிடித்துக் கொள்வதற்காக சுமார் 250 பாடசாலை மாணவிகளை ஈடுபடுத்திய குற்றச்சாட்டு மனித உரிமை ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இதுகுறித்த விசாரணையை ஆரம்பித்தது.

எவ்வாறாயினும் குறித்த மாணவிகளின் பெற்றோரது விருப்பத்திற்கு அமையவே இந்த முயற்சியில் மாணவிகள் ஈடுபடுத்தியதாக பின்னர் தெரியவந்தது.

எனினும் மாணவிகளது கல்வி உரிமையை மீறி வேறு விடயங்களில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டு மத்திய மாகாண கல்வியமைச்சின் செயலாளர் மீது சுமத்தப்பட்டது.

இந்நிலையில் அவருக்கு பதவியுயர்வுடன் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# பெண்களுக்கு "ஹலோ" கூறிய பிக்குகள் இருவர் நையப்புடைப்பு

பெண்களுக்கு தொலைபேசி அழைப்பு ஏற்படுத்திய பிக்குகள் இருவரை பிரதேச இளைஞர்கள் ஒன்றுதிரண்டு நையப்புடைத்த சம்பவம் பொலநறுவையில் இடம்பெற்றுள்ளது. பொலநறுவை-தமனகெமுனுபுர ஸ்ரீ நிக்ரோதாராமவாசி விகாரையைச் சேர்ந்த பிக்குகள் இருவர் இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி பொலநறுவை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகிய இரண்டு பிக்குகளும், 15 மற்றும் 14 வயதுடையவர்கள் என்று பொலநறுவை பொலிஸார் குறிப்பிட்டனர்.

விகாரையை அண்மித்த வீடுகளிலுள்ள பெண்களுக்கு குறித்த பிக்குகளால் தொலைபேசி அழைப்புக்கள் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அதனை விசாரிக்கச் சென்ற கிராமவாசிகள் விகாரைக்குச் சென்று நியாயம் கேட்டதால் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதன் போது ஆத்திரமடைந்த இளைஞர்கள் பிக்குகள் இருவரையும் தாக்கியுள்ளனர்.

காயமடைந்த குறித்த இரண்டு பிக்குகளும் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலநறுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சிவாஜிலிங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது- சந்திம



வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என தொழிற்பயிற்சி அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். கொழும்பில் அமைந்துள்ள அவரின் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரச படையினர் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும், அது தொடர்பில் சர்வதேச நீதிமன்றின் ஊடாக விசாரணை நடத்தி நியாயம் வழங்கப்பட வேண்டுமெனவும், சிவாஜிலிங்கம் ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. சிவாஜிலிங்கத்தின் கோரிக்கை மிகவும் இழிவான கோரிக்கையாகும். இவ்வாறான கோரிக்கைகளை விடுப்பது நாட்டுக்கும் இனத்திற்கும் பாதகமானது.

தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வரும் நல்லிணக்க முனைப்புக்களை பாதிக்கும் வகையில் இந்தக் கோரிக்கை அமைந்துள்ளது. ஆளும் கட்சியின் அமைச்சர்களோ அல்லது வேறு எவரோ இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் நாட்டின் எதிர்காலமே பாதிக்கப்படும் என அமைச்சர் சந்திமவீரக்கொடி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சுகாதார கல்விப் பணியகம் நீக்கம்

சுகாதார அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த சுகாதார கல்விப் பணியகம் நேற்று முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை அமைச்சரவையின் அனுமதியுடன் சுகாதார ஊக்குவிப்புப் பணியகம் என்ற பெயரில் புதிய நிறுவனம் ஆரம்பிக்கப்படும் எனச் சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுகாதாரத்துறையை ஊக்கப்படுத்துவதே புதிதாக ஆரம்பிக்கப்படும் நிறுவனத்தின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


ஆரம்ப சுகாதார அதிகாரிகள் திணைக்களம் மற்றும் பொதுமக்களுக்கு சுகாதாரம் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்க 1972ஆம் ஆண்டு சுகாதார கல்விப் பணியகம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

பிரம்ம ஸ்ரீ. நாகேஸ்வரசர்மா சிவசுந்தரசர்மா




எமது பாடசாலை ஆசிரியரான பிரம்மஸ்ரீ. நாகேஸ்வரசர்மா சிவசுந்தரசர்மா அவர்கள் 23.09.2017 அன்று நடைபெற்ற வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழாவில் வாத்தியக் கலைஞருக்கான (மிருதங்கம்) "இளங்கலைஞர் விருது" பெற்றதற்காக அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/வயாவிளான் ம...
வயாவிளான்



வவுனியாவில் தியாக தீபம் திலீபனின் நினைவு தினம் பொது அமைப்புக்களால் அனுஷ்டிக்கப்பட்டது. வவுனியா நகர சபை முன்பாகவுள்ள பொங்கு தமிழ் தூபியில் நேற்று பிற்பகல் 5 மணியளவில் இந் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. நினைவு தினத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது தியாக திலீபனின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# இராமநாதபுரம் ம.வி.வைரவிழா இரு அமர்வுகளாக நடத்த ஏற்பாடு

கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் வைரவிழா கொண்டாட்டங்கள் இரு அமர்வுகளாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் முழுமையான பங்களிப்புடன் நடைபெறவுள்ள இவ்விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம்திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

விழாவின் முதல் அமர்வு காலை ,9 மணிக்கு வைரவிழா மலர் வெளியீட்டு விழாவாக பாடசாலை அதிபர் எம்.சி.எல்.மனுவல் தலைமையில் நடைபெறும்.


இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராகக் கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தனும் சிறப்பு விருத்தினராக கிளிநொச்சி கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமா மதுரநாயகம், கௌரவ விருந்தினராக பாடசாலையின் முன்னாள் அதிபரும் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபருமான வே.க. இரத்தினகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்கள். மலர் வெளியீட்டுரையை கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் ஆற்ற மதிப்பீட்டுரையை கரைச்சி பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக உள்ளூராட்சி உதவியாளர் திருமதி ச.மணிமேகலை நிகழ்த்தவுள்ளார்.

விழாவின் இரண்டாம் அமர்வு பிற்பகல் 4 மணிக்கு வைரவிழா மற்றும் பரிசளிப்பு விழாவாக பாடசாலை அதிபர் எம்.சி.எல்.மனுவல் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும் யாழ்.மாவட்ட நர்டாளுமன்ற உறுப்பினருமான சி.சிறிதரனும் சிறப்பு விருத்தினராக பாடசாலையின் பழைய மாணவர் சங்க காப்பாளரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான வைத்தியநாதன் தவநாதன், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருஞானம் ஜோன் குயின்ரஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-312)




# பூர்வீக இறங்குதுறை படையினரால் கைப்பற்று

## கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினர் குற்றச்சாட்டு



முள்ளிவாய்க்கால் மேற்கு வளர்மதி கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினர் தங்களுடைய பூர்வீக இறங்குதுறையாக பாவித்து வந்த இடங்களை படையினர் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் மக்களின் தொழில் செய்யும் இறங்கு துறைகள் அனைத்தும் படையினர் வசம் இருந்துள்ளன. அதன் பின்னர் மக்கள் போராடிய நிலையில் 50 மீற்றர் தூரமான கரையோரப் பகுதியை விடுவித்துள்ளார்கள் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை 50 மீற்றர் தூரத்தில் 50 கடற்றொழிலாளர்களின் படகுகள் எவ்வாறு தரித்து நிற்க முடியும் என்று கேள்வி எழுப்பியுள்ளார்கள். அத்துடன் இவர்களின் பிரச்சினை தொடர்பில் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளதுடன் நேற்று முன்தினம் ரவிகரன் சம்பவ இடத்திற்கு சென்று நேரடியாக பார்வையிட்டுள்ளார். இதுதொடர்பில் மாகாண சபை அமர்பில் முதலமைச்சரிடம் இந்த மக்களின்கோரிக்கையை கொண்டு செல்லவுள்ளதாகவும் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் இம் மக்களுக்காக வாதாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# காணாமல் போனோர் கிடைக்க இறைவழிபாடு செய்வேன்

## பிரித்தானிய பல்கலை. மாணவி உறவினர்களிடம் தெரிவிப்பு



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை பிரித்தானிய பல்கலைக்கழக மாணவியொருவர் முல்லைத்தீவில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டு போராட்டம் நடைபெறும் இடத்தில் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளதுடன் குறித்த சந்திப்பு தனது கல்வி சார்ந்தது என்பதனை பிரித்தானிய பல்கலைக்கழக மாணவிகாணாமல் போனோரின் உறவினர்கள் முன்னிலையில் வெளிப்படுத்தியுள்ளார்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் படித்துப் பட்டம் பெற வேண்டிய எங்களுடய பிள்ளைகள் இடைநடுவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் எனக் கூறினர்.

அத்துடன் குறித்த மாணவியின் கல்விசார் வளர்ச்சிக்கு எங்களுடைய ஒத்துழைப்புகள் நிச்சயம் இருக்கும் என அந்த மாணவியிடம் கூறியுள்ளனர்.

அத்துடன் நாட்டில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போதும் அதற்கு பின்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எங்களுடைய பிள்ளைகள் எங்கே என்ற கேள்வியுடன் எட்டு வருடங்களுக்கு மேலாக நாங்கள் காத்திருந்தும் எமக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை என்று கண்ணீர்மல்க உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் எங்களுடைய பிள்ளைகளை நாங்கள் மீட்க்கும் வரை அவர்களின் தற்போதைய நிலை தொடர்பில் அறியும்வரை முன்னெடுத்த முயற்சியை கைவிட மாட்டோம் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மீளக் கிடைக்கவேண்டும் என பிரித்தானிய பல்கலைக்கழகத்தில் இறைவழிபாடு ஒன்றை செய்யவுள்ளதாகவும் குறித்த மாணவி காணாமல் ஆக்கப்பட்டவர்களின உறவினர்களிடம் தெரிவித்துள்ளார். (2-281)

# மேய்ச்சல் தரவைகள் இன்றி இவ்வாண்டும் கால்நடை பண்ணையாளர்கள் அவதி

கிளிநொச்சி மாவட்டத்தின் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் உருவாக்கப்படாமையினால் இவ்வாண்டும் கால்நடைப் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் 80 வீதமான மக்களின் வாழ்வாதாரத் தொழிலாக விவசாயமும் கால்நடை வளர்ப்பும் காணப்படுகின்றன.

கால்கடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இல்லாத நிலையில் பயிர்ச்செய்கை காலங்களில் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாண்டும் காலபோகச்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருவதனால் கால்நடைப்பண்ணையாளர்கள் தமது கால்நடைகளைப் பராமரிப்பதில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

பிரதேச செயலக ரீதியாக மேய்ச்சல் தரவைகள் நிலங்களை ஒதுக்கி மேய்ச்சல் தரவைகளை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அடுத்து வரும் மாதங்களில் காலபோகப்பயிர்ச்செய்கைள் ஆரம்பிக்கப்படுகின்ற போது வயல் நிலங்களில் வைத்து பராமரிக்கப்பட்ட கால்நடைகளை பராமரிப்பதில் பண்ணையாளர்கள் பாரிய சிரமங்களை எதிர்கொளளவேண்டிய நிலை காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

ஆதலால் மேய்ச்சல் தரவைகளை உருவாக்கித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கால்நடைப் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-315)

# அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பொலிஸாருக்கு பணப்பரிசுகள்



அர்ப்பணிப்புடன் பணியாற்றிய வவுனியா மாவட்ட பொலிஸாருக்கு வெகுமதி வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு மில் வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம்.எஸ்.தென்னக்கோன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கலந்துகொண்டிருந்தார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் போதைப்பொருள் பாவனை மற்றும் குற்றச் செயல்களை தடுப்பதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய 21 பொலிஸாருக்கு வெகுமதிகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட போக்குவரத்து பொலிஸ் அதிகாரி எஸ்.ஐ.அசோக்க என்பவருக்கு ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 700 ரூபாவை அதிகபட்ச வெகுமதியாக பெற்றுக் கொண்டிருந்தார்.

வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கிய பொது மகன் ஒருவருக்கும் 5 ஆயிரத்து 500 ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்தது.

பொலிஸாருக்கு பரிசில் வழங்கும் நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்ததுடன் நிகழ்வுகளில் ஈடுபட்டிருந்த மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. வவுனியா மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொலிஸாருக்கு வவுனியா மாவட்ட உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம்.எஸ்.தென்னக்கோன் , வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் பரிசில்களை வழங்கி வைத்தனர். (2-250)

# குடிநீர் தேவைக்கு அமைக்கப்பட்ட குழாய்க்கிணறுகளை திருத்துங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் மற்றும் கொங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தேவைகளுக்காக அமைக்கப்பட்டு சேதமடைந்த நிலையில் காணப்படுகின்ற குழாய்க்கிணறுகளை புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடிநீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழுள்ள கோணாவில், கொங்காதரன் குடியிருப்பு, கல்மடுநகர், அக்கராயன் ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட குழாய்க்கிணறுகளில் பல கிணறுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற குழாய்க்கிணறுகளை திருத்தம் செய்து தருமாறு பல தடவைகள் கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கின்ற போதும், இன்றுவரை நிவர்த்தி செய்யப்படவில்லை என இந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# திருக்கேதீச்சர விகாரைக் கட்டடத் திறப்பு விழாவில் ஜனாதிபதி பங்கேற்பது மத விரோதத்திற்கு தூபமிடும்

## ஆலய திருப்பணிச் சபையினர் மகஜர் கையளிப்பு

(மன்னார்)

திருக்கேதீச்சரம் மாந்தை விகாரைக் கட்டடத் திறப்பு விழாவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்வதை தவிர்க்க வேண்டுமென திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையினரால் ஜனாதிபதியின் செயலாளர் ஊடாக ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாந்தை விகாரை கட்டடத் திறப்பு விழா நாளை 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதி கலந்து கொள்வது மத விரோத உணர்விற்கு தூபமிடும் செயல் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளருடன் நேற்று முன்தினம் மாலை நடந்த சந்திப்பில் திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபையின் தலைவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவருமான கந்தையா நீலகண்டன், திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் மா.தவயோகராஜா, அச்சபையின் இணைச் செயலாளர் செ.இராகவன், உப தலைவர் சின்னத்துரை தனபாலா ஆகியோர் கலந்து கொண்டு திருப்பணிச்சபையின் மகஜரைக் கையளித்து இந்து மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஜனாதிபதி மேற்குறித்த நிகழ்வில் தன் பங்களிப்பை தவிர்க்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

பௌத்த மக்கள் தங்கள் வழிபாட்டுக்கு விகாரை அமைப்பதை இந்து மக்கள் என்றும் எதிர்க்கவில்லை. ஆனால் பௌத்த மக்கள் வாழாத இடத்தில் பௌத்த மத வழிபாட்டுத் தலங்களை அமைப்பது, அதுவும் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சர ஆலய சூழலில் அவ்வாறு அமைப்பது தவறு என்பதனையும் திருப்பணிச் சபையினர் எடுத்துரைத்தனர்.

மேலும் அண்மையில் இருக்கும் தாளையடி இராணுவத் தளத்தில் புத்தவிகாரை இராணுவத்தினரின் வழிபாட்டுக்கு இருக்கும் போது இப்படியான விகாரை இங்கு தேவையில்லை என்பதையும் சுட்டிக் காட்டினர்.


மேலும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மன்னார் இந்து குருமார் பேரவை, சைவ மங்கையர் கழகம் தெரிவித்திருந்த ஆட்சேபனைகளையும் தூதுக்குழு எடுத்துக்காட்டியது.

இந்து மக்களின் வேதனைகளைத் திருப்பணிச் சபையினர் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியை நேரில் தொடர்பு கொண்டு இந்து மக்களினதும் ஏனைய மதத்தினரினதும் உணர்வுகளை எடுத்துரைத்திருக்கிறார். இந்நிலையில் வெள்ளிக்கிழமை திருக்கேதீச்சரம் மாந்தை விகாரைக் கட்டடத் திறப்பு விழாவில் மேன்மை தங்கிய ஜனாதிபதி கலந்து கொள்ளமாட்டார் என்றே நம்புகின்றோம் என அதில் தெரிவித்துள்ளனர். (2)




# வன்னி பிராந்தியத்தின் இராணுவம், பொலிஸ் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகள் மூன்று மாதத்தில் விடுக்கப்படும்

## வவுனியா மாவட்ட செயலக கூட்டத்தில் தீர்மானம்



(குருமன்காடு)

வன்னி பிராந்தியத்திலுள்ள இராணுவம் மற்றும் பொலிஸ் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகள் மூன்று மாதத்தினுள் விடுவிக்கப்படும் என வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வன்னி பிராந்தியத்தின் இராணுவம் மற்றும் பொலிஸ் ஆக்கிரமிப்பிலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள், அரச கட்டடங்கள், தனியார் நிலங்கள் போன்றவற்றை விடுவிப்பது தொடர்பான கூட்டம் நேற்றுக்காலை வவுனியா மாவட்டச்செயலகத்தில் நடைபெற்றது.

வவுனியா அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன், மீள்குடியேற்ற அமைச்சரின் செயலாளர் சுரேஸ் மற்றும் இராணுவ, பொலிஸ் அதிகாரிகள், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது வவுனியா மாவட்டத்தில் பேயாடிகூழாங்குளம் இராணுவ முகாமிற்குள் அமைந்துள்ள பாடசாலை, புனர்வாழ்வு நிலையமாக செயற்பட்டு வரும் கூட்டுறவு கல்லூரி, பம்பைமடு கருவேப்பங்குளம் பகுதியில் காணப்படும் விவசாய திணைக்கள கட்டடங்கள் என்பவற்றை விடுவிப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு இராணுவ முகாம் விடுவிப்பது தொடர்பாகவும் அங்குள்ள பாடசாலை விடுவிப்பது தொடர்பாகவும் கூற்சிலைமடு இராணுவ முகாமிற்குள் உள்ள பிரசித்தி பெற்ற நாகதம்பிரான் ஆலயத்தை விடுவிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் முள்ளிக்குளத்தில் கடற்படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்ற சுகாதார திணைக்களத்திற்கு சொந்தமான கட்டடத்தொகுதியை விடுவிப்பது தொடர்பாகவும், வவுனியா நேரியகுளம் வைத்தியசாலை காணியொன்றும், கனகராயன்குளத்தில் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு சொந்தமான காணி பொலிஸாரினால் அபகரிக்கப்பட்டது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இதன்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள காணிகளை மூன்று மாதத்திற்குள் விடுவித்து தருவதாக உறுதியளித்துள்ளனர். (2-250)

# தடைகளை உடைத்தெறிந்து சங்கத்தை முன்னேற்றுவேன்



(பரந்தன்)

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு சங்கத்திற்காகவும் அங்கத்தவர்களுக்காகவும் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி சங்கத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்வேன் என கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள கனகையா மதனரூபன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மீள் குடியேற்றத்தின் போது அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மிகவும் நெருக்கடியான நிலையில் இயங்கிவந்த சங்கத்தை பொறுப்பேற்ற பின்னர் பல மாற்றங்களைக் கொண்டு வந்தேன். அங்கத்தவர்களுக்கு பல விசேட நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவர்களின் குடும்பம் வாழ்வாதாரத்தில் முன்னேறுவதற்கு கடுமையாக உழைத்தேன்.

மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் கள்ளை நிலத்தில் ஊற்றினால் குறித்த தொழிலை நம்பி வாழும் அங்கத்தவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்படும் என்பதனைக் கருத்தில்கொண்டு அவற்றை போத்தலில் அடைத்து விற்பனை செய்யும் நடைமுறையை பின்பற்றி வருகின்றேன்.

அதேநேரம், தொடர்ந்தும் சங்கத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (2-312)

# இரணைதீவு பொதுமக்களின் காணிகளை ஒக்.9இல் அளவீடு செய்ய நடவடிக்கைகள்

## பூநகரி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி இரணைதீவிற்குச்சென்று பொதுமக்களின் காணிகளை அடையாளப்படுத்தி அளவீடு செய்வதற்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பூநகரி பிரதேச செயலாளர் சி.ச.கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரிப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தங்களின் பூர்வீக நிலமான இரணைதீவில் இருந்து யுத்தம் காரணமாக 1992ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து முழாங்காவில் இரணைமாதா நகரில் தங்கியுள்ள தங்களை தமது சொந்த நிலத்தில் மீள்குடியேற்றுமாறு கோரி கடந்த மே மாதம் முதலாம் திகதி முதல் இரணைதீவு மக்கள் தொடர் கவனயீர்ப்புப்போராட்டத்தில் ஐந்து மாதங்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 31ஆம் திகதி கிளிநொச்சி பூநகரிக்கு விஜயம் செய்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் உள்ளிட்டோர் படைதரப்புடன் நடத்திய கலந்துரையாடலையடுத்து இம்மாத முற்பகுதியில் இரணை தீவிற்குச்சென்று கடற்படையினர் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவித்த 126 ஏக்கர் காணிகளையும் அடையாளப்படுத்துகின்ற நடவடிக்கைகளுக்காக பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவினர் அங்கு சென்று திரும்பியிருந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பில் எந்தவிதமான முன்னேற்றங்களும் தென்படுவதாக தெரியவில்லை என பல்வேறு தரப்புக்களும் குறிப்பிட்டநிலையில் இவ்விடயம் தொடர்பில் பூநகரிப்பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு வினவியபோது, எதிர்வரும் 9ஆம் திகதி காணிகளை அடையாளப்படுத்தி அளவீடு செய்கின்ற நடவடிக்கைகளுக்காக இரணைதீவிற்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வேலைத் திட்டங்களுக்காக பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் அனுப்பியிருப்பதாகவும் பூநகரிப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (2-315)

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் விபத்து விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்வு

(மன்னார்)

மன்னார் வீதி விபத்துக்களின் போது விபத்திற்கு உள்ளாகியவர்களை எவ்வாறு மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று அவசர சிகிச்சைகளை மேற்கொள்வது தொடர்பில் மன்னாரில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒத்திகை நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் அன்ரன் சிசில் தலைமையில் நேற்றுக்காலை மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெற்றுள்ளது.

இந்த மாவட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் விபத்துகள் தொடர்பாக வைத்தியசாலை பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் தத்ரூப ஒத்திகை நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

விபத்து ஒன்று இடம்பெற்றால் அதிகமானவர்கள் காயமடைந்திருந்தால் அவர்களை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்கு முன் வைத்தியசாலையினை தயார் நிலையில் வைத்தல்.

வெளி நோயாளர் பிரிவில் உள்ளவர்களை வேறு இடத்திற்கு மாற்றி வெளிநோயாளர் பிரிவை தயார்படுத்துதல், வைத்தியர்கள், பணியாளர்கள் தயார் நிலையில் இருத்தல் போன்ற ஒத்திகைகள் இடம்பெற்றுள்ளன.

விபத்து ஒன்று ஏற்பட்ட போது பலர் காயமடைந்திருந்த நிலையில் அவர்களை நோயாளர் காவு வண்டி மூலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அவர்களுக்கான அவசர சிகிச்சைகளை வழங்குதல், முதலுதவிகளை வழங்குதல் உள்ளிட்டவை ஒத்திகையாக நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் அனர்த்த பாதுகாப்பு பிரிவினர், போக்குவரத்துப் பொலிஸார், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை தொண்டர்கள், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும், இந்த ஒத்திகை நிகழ்வானது வைத்தியசாலை பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# பொய் வாக்குறுதிகளே மகிந்தவின் தந்திரம்

## "Rajapakse the Sinhala Selfie" நூல் வெளியீட்டில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரை



(தொடர்ச்சி...)

'சிறுபான்மையினருக்குசேவை யாற்றிய இரண்டாம் சபை, பொதுச் சேவை நியமனங்களில் எவ்வித பாரபட்சங்களும் இடம்பெறுவதைத் தடுக்கும்சுயாதீன பொதுச் சேவை ஆணைக்குழு, நீதிச் சேவையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தும் நீதிச் சேவை ஆணைக்குழு, பிரதிநிதித்துவம் அற்றவர்களின் தேவைகளை பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட தேர்வு செய்யப்பட்ட சட்ட சபை உறுப்பினர்கள், அரசியல் சாசனத்தின் நீதி மீளாய்வு, 29 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட பாரபட்சப்படுத்தப்பட்ட அரசியல் சாசனத்தைத் தடை செய்தல் போன்ற ஆறு அம்சங்கள் 1978 அரசியல் சாசனத்திலிருந்து நீக்கப்பட்டது. இதனைத் தமிழ் அரசியல்வாதிகளும் ஏற்றுக் கொண்டனர்' என கலாநிதி ஜெயவிக்கிரம குறிப்பிட்டிருந்தார்.

பெடரல் கட்சியால் அரசியலமைப்புச் சட்டமன்றத்திடம் கையளிக்கப்பட்ட நான்கு விடயங்கள் தொடர்பாக குசல் பெரேராவால் குறிப்பிடப்பட்டுள்ளது. 'சிங்கள மொழிக்குச் சமமாக தமிழ் மொழியை அரசியல் சாசனத்தில் அங்கீகரித்தல், மதச்சார்ப ற்ற நாட்டை உருவாக்குதல், அரசாங்க ஆட்சிக் கட்டமைப்புக்களை மத்தியிலிருந்து பிரித்தெடுத்து பரவலாக்குதல், அனைத்து தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கும் எவ்வித பாரபட்சமுமின்றி குடியுரிமையை வழங்குதல் போன்ற நான்கு விடயங்களை தமிழ் பிரதிநிதிகளால் தலைமை வகிக்கப்பட்ட பெடரல் கட்சியால் கையளிக்கப்பட்ட போதிலும் லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகளை உள்ளடக்கிய அரசியலமைப்புச் சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் கொண்டிருந்த ஐக்கிய முன்னணியால் நிராகரிக்கப்பட்டது.

இதன் மூலம் 'இறையாண்மை மிக்கதும் சுதந்திரம் மிக்க குடியரசாக' இலங்கை அறிவிக்கப்பட்டது. இது இலங்கையை மேலும் சிங்கள பௌத்த நாடாக பலப்படுத்துவதற்கு உதவியது என குசல் தனது நூலில் எழுதியுள்ளார்.

ஜனநாயக, ஒழுக்கம்மிக்க, அமைதி விரும்பிகளான தமிழ்த் தலைவர்கள் ஒற்றை நாட்டிற்குள் மாற்றுத் தீர்வுடன் வாழ்வதற்கான வழிகளைத் தேடிய போதிலும் ஐக்கிய முன்னணியின் அரசியலானது தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கக் காரணமாகியது. தமிழ்த் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த தந்தை செல்வா தனது காங்கேசன்துறை தொகுதிக்கான நாடாளுமன்ற ஆசனத்தில் இருந்து 1972 ஒக்டோபரில் விலகிக் கொண்டார்.

1972 குடியரசு அரசியல் யாப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை தேர்தல் மூலம் உறுதி செய்வதற்காகவே தான் பதவி விலகிக்கொள்வதாக தந்தை செல்வா அறிவித்தார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் தேர்தலைப் பிற்போட்டது. இது தமிழ் மக்கள் ம்த்தியில் மேலும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

1973இல் மல்லாகத்தில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 12ஆவது மாநாட்டில் முதன் முதலாக 'தனித் தமிழ் நாட்டுக்' கோரிக்கைக்கான அத்திபாரத்தை இடுவது தொடர்பாக தீவிரமாக கலந்துரையாடப்பட்டது.

1974 பெப்ரவரியில் காங்கேசன்துறை தொகுதிக்கான தேர்தலை நடத்த ஐக்கிய முன்னணி தலைமை தீர்மானித்தது. இத்தேர்தலில் போட்டியிட்ட செல்வநாயகம் வரலாறு காணாத வெற்றியைப் பெற்றார். இவர் 72.55 சதவீத வாக்குப் பலத்துடன் தேர்தலில் வெற்றி பெற்றார். இலங்கை சுதந்திரம் அடைந்ததற் குப் பின்னர் இன்றுவரை இவ்வாறான ஒரு தேர்தல் வெற்றியை எந்தவொரு அரசியல்வாதியும் பெற்றுக்கொள்ளவில்லை.

இத்தேர்தலில் ஐக்கிய முன்னணி சார்பாக போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் வி.பொன்னம்பலம் 26.46 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொண்டார். இத்தேர்தலானது தமிழ்த் தேசிய அரசியலின் 'தந்தையாகக்' கருதப்பட்டவரும் 33 ஆண்டுகளாக ஜனநாயக அரசியலிற்காக மிகவும் துடிப்புடன் செயற்பட்ட தலைவருமான தந்தை செல்வா அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதற்கு இரண்டு ஆண்டுகளின் முன்னர் இடம்பெற்றது.

30 ஆண்டுகளாக ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் அரசியல் அவாக்களை முன்வைத்துப் போராடிய தந்தை செல்வா அவர்கள், தனது அரசியல் வாழ்வின் இறுதி மூன்று ஆண்டுகளும் தமிழ் மக்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு அவர்களின் அரசியல் அவாக்களுக்கான பதிலாக தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கை மட்டுமே தீர்வாக அமையும் என்பதை ஏற்றுக் கொள்ளுமளவிற்கு சிங்களத் தலைவர்களால் இவர் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்.

'எனது மக்களுக்கும் இந்த நாட்டிற்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவெனில், இவ் இடைத் தேர்தல் மூலம் மக்கள் அளித்த ஆணையானது தமிழ் மக்கள் இறையாண்மையுடன் வாழ்வதற்கும் சுதந்திரமாக வாழ்வதற்கும் தமிழீழம் உருவாக்கப்பட வேண்டும்என்பதை உறுதி படத் தெரிவிப்பதாகவும் இதுவே தமிழ் மக்களின் தீர்ப்பாக இருப்பதாகவும் நான் கருதுகிறேன்' என தேர்தல் வெற்றியை ஏற்றுக் கொண்டு விடுத்த அறிக்கையில் தந்தை செல்வா குறிப்பிட்டிருந்தார்.

இவரது இந்த அறிக்கையானது அப்போது என்ன நடந்தது என்பதைத் தெளிவாக விளக்குகிறது. குசல் ஒரு சிங்க ஊடகவியலாளராக உள்ள போதிலும் அவர் தன்னை ஒரு சிங்களவர் எனக் கருதாது ஒரு மனிதனாகக் கருதி இந்த நூலில் பல்வேறு முக்கிய கருத்துக்களை எவ்வித பக்கச்சார்பற்ற வகையிலும் முன்வைத்துள்ளார். இவரது இந்த மனோ நிலையை தம்மைத்தாமே சிங்களத் தேசியவாதிகள் எனப் பறைசாற்றும் கடும்போக்கு சிங்களவாதிகள் கருத்திற் கொள்ள வேண்டும்.

குசல் தனது நூலில் எழுதிய பல விடயங்களை இங்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதே விடயங்களை நான் தெரிவித்தால் நான் ஒரு தீவிரவாதியாகவே நோக்கப்படுவேன். குசலுக்கு எதிராக முன்வைக்கப்படும் சில புனைப்பெயர்கள் தொடர்பில் நான் சந்தேகப்படுகிறேன். ஆனால் நாங்கள் இருவரும் உண்மையை மட்டுமே கூறமுற்படுகிறோம் உண்மையைத் தவிர வேறெதையும் கூற நாங்கள் விரும்பவில்லை.

குசலின் இந்த நூலானது மிகவும் பயனுள்ளது. குறிப்பாக கடந்த காலத்தில் இடம்பெற்ற அரசியல் சம்பவங்களை நினைவுபடுத்துவதற்கும் தற்காலத்தில் இடம்பெறும் பல்வேறு பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணங்கள் என்புதை அறிவதற்கும் குசலின் இந்த நூல் பெரிதும் உதவுகின்றது. இந்த நூலானது காலத்திற்கு உகந்த ஒரு வெளியீடாகும்.

இந்த நூல் 'மகிந்த சிங்கள செல்பி' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட போதிலும் நாட்டில் ஆயுதப் போராட்டம் ஒன்று ஆரம்பிப்பதற்கு காரணமான கடந்தகால அரசியல் வரலாற்று உண்மைகளைப் பதிவு செய்துள்ளது. தனித் தாய் நாட்டுக்கோரிக்கையானது முதன் முதலாக பிரபாகரனால் முன் வைக்கப்பட்ட ஒன்று அல்ல என்பதையும் இக்கோரிக்கையானது முதன் முதலாக செல்வநாயகத்தாலேயே முன்வைக்கப்பட்டது என்ற உண்மையும் குசலின் நூலின் ஊடாக வெளிப்படுத்தப்படுகிறது. இந்த நூலின் இறுதிப் பந்தியில் மகிந்தவின் பங்கு என்ன என்பது தொடர்பாகவும் விளக்கப்பட்டுள்ளது.

(முற்றும்)

மொழியாக்கம் -நித்தியபாரதி

# ரோஹிஞ்சா அகதிகள் மீதான அட்டூழியத்தை நிறுத்தவும்



## அரசிடம் அமைச்சர் றிசாத் கோரிக்கை

ஐக்கிய நாடுகளின் மேற்பார்வையில் கொழும்பு, கல்கிஸையில் தங்கவைக்கப்பட்டுள்ள ரோஹிஞ்யா அகதிகளை, அங்கிருந்து வெளியேற்றச் செய்து அகதிகளையும் முஸ்லிம்களையும், மிகவும் மோசமான முறையில் தூஷித்து அடாவடித்தனம் மேற்கொண்ட இனவாதிகள் மீது, அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று, கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் றிசாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்கவை சந்தித்தபோதே, அவர் மேற் கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம், நேற்று முன்தினம் முடிவடைந்த பின்னர், அமைச்சர் சாகல ரத்நாயக்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதே, அமைச்சீர் றிசாத் மேற் கண்டவாறு வலியுறுத்தியுள்ளார் என்று அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்கிஸையில் இடம்பெற்ற இந்த மிலேச்சத்தனமான சம்பவங்களை விவரித்ததுடன், அது தொடர்பிலான காணொலியையும் அவரிடம் காட்டினார்.

"கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் பருத்தித்துறை கடல் வழியாக படகுகளில் சென்றுகொண்டிருந்த மியான்மார் அகதிகளை இலங்கைக் கடற்படை கைதுசெய்து யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பொலிஸில் ஒப்படைத்தது.

"பின்னர், அவர்கள் விடுதலை செய்யப்பட்டு ஐ.நா அதிகாரிகளின் பராமரிப்பில் கல்கிஸைக்கு கொண்டுவரப்பட்டு, தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

"இவ்வாறு தஞ்சமடைந்திருந்த அகதிகளையே நேற்று முன்தினம் காலை அந்தப் பிரதேசத்துக்கு சென்ற பௌத்த பிக்குகள் அடங்கிய இனவாதிகள் அங்கிருந்து வெளியேற்றினர்.

"சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, அமைதியைப் பேண வேண்டிய பொலிஸாரும் இதற்கு உடந்தையாக இருந்தமை வேதனையானது" என அமைச்சர் றிசாத் பதியுதீன், அமைச்சர் சாகலவிடம் சுட்டிக்காட்டினார்.

இனவாதிகள் ஐ.நா உயர் அதிகாரிகளையும் அச்சுறுத்தியிருக்கின்றனர். ஐ.நாவின் மனித உரிமை சாசனத்தைக்கூட புறக்கணித்து, தான்தோன்றித்தனமாக இனவாதிகள் செயற்பட்டமை, வேதனைக்குரியதெனவும் அமைச்சர் றிசாத் சுட்டிக்காட்டினார்.

அமைச்சரின் கருத்துகளைக் கேட்டறிந்த பின்னர் அமைச்சர் சாகல ரத்நாயக்க பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மியன்மார் அகதிகளுக்கு எவ்வித இடையூறுகளும் வழங்கவேண்டாம் எனப் பணிப்புரை விடுத்ததுடன், அமைச்சரின் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

# கலைத் தரிசனம்

*இவர் ஆறு மாதக் குழந்தையாக இருந்தபோது சகோதரப்பாசம் என்ற நாடகத்தில் பன்னீர்செல்வன் என்ற பாத்திரத்திற்காக உள்வாங்கப்பட்டார். பத்து வயதில் இருந்து பெரிய தகப்பனார் கலை போதனாச்சுடர் மு.பொன்னையா அவர்களோடு சென்று அவர் வாசிக்கும் ஆர்மோனிய முறைகளைக் கவனித்து தனது சுய முயற்சியினால் இன்று ஓர் ஆர்மோனியக் கலைஞனாக நிமிர்ந்து கொண்டார். ஆயிரத்திற்கு மேற்பட்ட மேடைகளைக் கண்ட இவர் தற்புகழின்றி கலைத்துறைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டு வருகிறார். இவர் காத்தவராயன் சிந்துநடைக் கூத்து, சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா மயான காண்டம், வள்ளி திருமணம், பவளக் கொடி ஆகிய நாடகங்களை நெறியாள்கை செய்ததோடு இந்த நாடகங்களில் நடித்துமுள்ளார். அரங்கில் பெண் பாத்திரங்களை சிறப்பாக நடித்து பெரும் புகழைத் தேடினார். 1959 ஆம் ஆண்டு மாசி மாதம் 23 ஆம் திகதி வடமராட்சி அல்வாயில் பிறந்த இவர் 2000 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை கற்கோவளம் வேணு கான சபா மன்றத்தில் ஆர்மோனியம் இசைப்பவராகவும் உள்ளார். மூத்த கலைஞர் ம.தயாமணி அவர்க்ள் தன் கலைப்பணி பற்றி மனம் திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.*



## மூத்த கலைஞர் ம. தயாமணி அவர்களுடனான சந்திப்பு

**❖ தாங்கள் கலைத்துறைக்குள் எவ்வாறு கால் பதித்தீர்கள்?**

நான் எனது சிறு வயதிலேயே எனதுபெரியதகப்பனார்மு.பொன்னையாவிடம் (10 வயதிலிருந்து) அவருடன் இருந்து அவர் ஆர்மோனிய த்தை வாசிப்பதற்காக செல்லும் போது நானும் அவருடன் சென்று அவர் வாசிப் பதை பார்த்து ஆர்மோனியத்தை வாசிக்கப் பழகத் தொடங்கினேன்.

நாடகம்,நடிப்பு கலைகளில் எனது குடும்பத்தையும் பரம்பரையாக வழிநடத்தி கலைகளில் விளங்கி வருகின்றேன். நாடக, நடிப்பு வழிகாட்டி எனது அண்ணன் விவேகானந்தனின் பின்னணியில் நான் வளர்ந்து வந்துள்ளேன். எனது டெரிய தகப்பனான (கலைப் போதனாச் சுடர்) மு.பொன்னையா என்னை 15 வயதிலேயே அல்வாய் சாமணந்துறை ஆலடிப் பிள்ளையார் கோயிலில் ஆஸ் தான வித்துவானாக விளங்க வைத்தார். என்னைப் பன்னீர் செல்வன் என்ற நாடகத்தில் பன்னீர் செல்வம் என்ற பாத்திரத்திற்கு அண்ணாவியார் சிவபா தம் என்பவர் முதல் மேடையாக ஏற வைத்தார். அதிலிருந்து நான் எனது பெரிய தந்தையாரின் நாடகங்களில் அரிச்சந்திரா மயான காண்டம் நாடகத்தில் லோகிதாஸனாக நடித்துள்ளேன். எனது பெரிய தந்தையார் பொன்னையா அவ ரோடு ஆர்மோனியத்தை இசை க்க ஆரம்பித்துள்ளேன். அந்த இசைத்துறையில் இருந்து இன்று 2017 ஆம் ஆண்டு வரை நான் ஒரு அண்ணா வியாராக வும் ஆர்மோனிய கலைஞர்ாகவும் விளங்கிபுகழ்பூத்துவந்துள்ளேன். இற்றைக்கு 1000 மேடைகள் ஏறியிருக்கின்றேன்.

**❖ தாங்கள்றூனீமோனி வாசித்த நாடகங்கள்:-**

1998 ஆம் ஆண்டு முதல் முறையாக எனது அண்ணன் மு.விவேகானந்தனின் காத்தவராயன் நாடகக் கூத்துக்கு ஆர்மோனியத்தை இசைத்துள்ளேன். அவரின் நெறியாள்கையிலும் நடிப்புக்கும் அரிச்சந்திரா மயான காண்டத் துக்கும் ஆர்மோனியத்தை வாசித்தேன். 1999 ஆம் ஆண்டு நான் நெறியாள்கை செய்த சத்தியவான் சாவித்திரி நாடகத்திற்கும் ஆர்மோனியத்தை வாசித்துள்ளேன். 2000 ஆம் ஆண்டு கற்கோவளம் வேணுகான சபா நாடக மன்றத்தினருக்கு அம்மன் ஆலயத்தில் காத்தவராயன் சிந்து நடைக் கூத்துக்கும் ஆர்மோனி யத்தை இசைத்து வந்துள்ளேன். 2002 ஆம் ஆண்டு நான் நெறியாள்கை செய்த வள்ளி திருமணம் என்ற நாடகத்தை எனது ஊர்ப் பிள்ளைகளுக்கு பழக்கி அல்வாய் சாமணந்தறை பிள்ளையார் கோயிலில் மேடையேற்றி ஆர்மோனியத்தை வாசித்துள்ளேன். 2003 ஆம் ஆண்டு கோவலன் கண்ணகி என்ற நாடகத்திற்கு ஆர்மோனியத்தை வாசித்திருந்தேன். 2003 ஆம் ஆண்டு காத்தவராயன் சிந்து நடைக்



கூத்துக்கும் வாசித்துள்ளேன். 2005 ஆம் ஆண்டு பூதத்தம்பி நாடகத்திற்கும் ஆர்மோனியத்தை வாசித்துள்ளேன். 2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் உள்ள சல்லிம்மன் கோயிலில் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து என்ற நாடகத் திற்கும் ஆர்மோனியத்தை இசைத்து வந்துள்ளேன். ஆகவே நான் இன்றைக்கு ஏறத்தாழ 1000 மேடைகள் ஏறி கர்நாடக இசை நாடகங்களுக்கு ஆர் மோனியம் வாசித்திருக்கின்றேன் என்பது மன மகிழ்வைத் தருகின்றது.

**❖ பாரம்பரிய இசை நாடகத் திற்கு இன்று ஆர்மோனியம் தேவைப் படுவது எப்படி இருக்கின்றது:-**

பாரம்பரிய காலத்தில் இசை நாடகங்களுக்கு ஆர்மோனியம் தான் இசைக்கப்பட்டன. பாரம்பரிய நாடக மேடைப்பாடல் இசை நாடகத்தின் பாடலுக்கும் ஆர்மோனியம்தான் இசைவாக எடுத்துக் கொடுக்கும். ஆகவே இன்று நாடக மேடைப் பாடல் என்றால் என்ன? நாடகம் நடிப்பாக இருந்தாலும் கீபோட்டை பயன்படுத்துகின்றனர். எனவே கீபோட் வாசிப்பதை விட ஆர்மோனியம் தான் நாடக இசைக்கு சிறப்பானது. எனவே பாரம்பரிய நாடகங்களுக்கு கீபோட்டை பாவிக்காமல் ஆர்மோனியத்தை பாவித்து பாரம்பரிய இசை நாடகங்களை முன்வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இற்றைக்கு ஆர்மோனியத்தை எடுத்துப் பாருங்கள். ஆர்மோனியத்தின் சுருதிக்கும் கீபோட்டின் சுருதிக்கும் எவ்வளவு இசை சுருதி வித்தியாசப்படுகின்றது. சாதாரணமாக ஓர் இசை நாடகத்தின் விருத்தம் என்ற இசைக்கு கீபோட்டிலும் வாசித்து பாருங்கள். ஆர்மோனியத்திலும் பாடி வாசித்துப் பாருங்கள் எது சுரு திக்கு இசைவாக இருக்கின்றது என்று. ஆகவே கீபோட் பாவிப்பதை விட்டு பாரம்பரிய இசையை முன்வைக்க ஆர்மோனியத்தை இசைத்து வாருங்கள். உங்கள் நாடகங்கள் எந்த அளவுக்கு முன்வருகின்றன என்பதை நீங் களே தெரிந்து கொள்ளுவீர்கள். சாதாரணமான ஓர் இசை நாட கம்,சங்கீத பாடல், வில்லுப்பாட்டுஆகிய இசைப் பாடல்களுக்கு ஆர்மோனியத்தில் பாடிப் பாருங் கள் எப்படி சுருதி சேருகின்றது, எப்படி இருக்கின்றது என்று நீங்களே தெரிந்து கொள்ளு வீர்கள்.

**❖ தாங்கள் நடித்த நாடங்கள் பற்றி?**

நான் எனது பெரிய தந்தையான மு.பொன்னையா (அப்பா) அவரின் வழிநடத்தலில் நாடக நடிப்பை பெற்று வந்துள்ளேன். நான் பிறந்து 6 மாதம் பன்னீர்செல்வன் என்ற வேடத்துக்கு என்னை மேடையில் வைத்து நடித்துள்ளனர். அதிலிருந்து எனக்கு 10 வயதிலேயே அரிச்சந்திரா மயானகாண்ட நாடகத்தில் லோகிதாஸனாக நடித்துக் கொண்டேன். அதிலிருந்து நான் 1987 ஆம் ஆண்டு சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் சித்திரகுப்தனாக நடித்து வந்தேன். ஆகவே அந்த நாடக நடிப்பிலிருந்து இன்றுவரை வள்ளி திருமணம், பூதத்தம்பி, காத்தவராயன் கூத்து ஆகிய இசை நாடகங்களை நடித்து பல பட்டங்கள், கௌரவிப்புக்களை பெற்றுக் கொண்டேன். நான் செய்த இசை நாடகங்களில் எனக்கு பெருமை சேர்த்தநாடகம்அரிச்சந்திராமயான காண்டத்தில் சத்தியகீர்த்தி என்ற நடிப்பிற்கே எனக்கு புகழ் சேர்ந்தது. நான் மந்துவில் கவிதாலயா மன்றத்தின் அண்ணாவியார் கலா பூஷணம் செல்வராஜா அவர்களுடன் சேர்ந்து 2013 ஆம் ஆண்டுஅரிச்சந்திராமயான காண்டம் நாடகம் செய்துள்ளோம். வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலில் காத்தவராயன் கூத்து நடித்துள் ளோம். ஆகவே நான் நடிப்புக் களை செய்து புகழ் பெற்று வாழ்கின்ற தகைமை எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்தப் பெருமையை எனது தந்தையாகிய (கலை போதனாச்சுடர்) மு.பொன்னையா அவருக்குத் தான் சாரும்.

**❖ தாங்கள் நெறியாள்கை செய்த நாடகம் பற்றி**

1997 ஆம் ஆண்டுஎனது ஆலயம் சாமணந்தறை பிள்ளையார் கோயிலில் முதல் முறையாக எனது பிள்ளைக்கு நெறியாள்கை செய்து சத்தியவான் சாவித்திரி என்ற நாடகத்தை மேடை ஏற்றி உள்ளேன். அதனை தொடர்ந்து காத்தவராயன் கூத்து, அரிச்சந்திரா, வள்ளி திருமணம் போன்ற நாடகங்கள் நெறியாள்கை செய்து மேடை ஏற்றினேன். நான் எனது நெறியாள்கையை எனது மகளிடம் சொல்லிக் கொடுத்து எனது மகள் தயாமணி சரண்யா அவருக்கு உதவியாக வி.கவிச்செல்வன், வி.கலாரூபி ஆகியோர் அதனைத் தொடர்ந்து இன்றைக்கு அந்த நெறியாள்கையை செய்து கொண்டு வருகின்ற னர். அவர்கள் பாடசாலை மாணவர்களுக்கு 10 வயதிலிருந்து (A/L) படிக்கும் மாணவர்களு க்கு இசை நாடகங்களை பழ க்கி இசை நாடகத்தை வளர்த் துக் கொண்டு வருகின்றனர். எனது அப்பா மு.பொன்னையா, அண்ணன் செ.விவேகானந்தன், தயாமணி ஆகிய நாங்கள் பரம்பரையில் நெறியாள்கை செய்து இப்போது எங்கள் விழுதுகளாக உள்ள சரண்யா, கவிச் செல்வன்,கலாரூபி ஆகியோர் நெறியாள்கை செய்து வருகின்றனர்.

ஆகவே மீண்டும் பாரம்பரிய கலையை வழிநடத்த வேண்டும் என எங்கள் விழுதுகள் துளிர்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

**❖ இறுதியாக நீங்கள் மனம் திறந்து கூறுவது**

இன்றைக்கு பாரம்பரியம், கலாசாரத்தை நாங்கள் வளர்க்க வேண்டும். காலாகாலங்களும் பாரம்பரியம் அழியக் கூடாது. கலையை வளர்க்க வேண்டும் நான் எனது பரம்பரையை கலைமூலமாகவே வளர்த்துக் கொண்டு வருகின்றேன். நாங்கள் வளர்த்துக்கொண்டு வருகின்றது போல் எல்லோரும் வளர்த்து வர வேண்டும் எனவும் கலை கலாசாரத்தை வளர்க்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

**❖ தங்களின் கவிஞர் நாடக மன்றம் பற்றி?**

1973ஆம் ஆண்டு கவிஞர் நாடக மன்றம் உருவாக்கப் பட்டது. இந்த நாடக மன்றம் அண்ணன் மு. செ. விவேகானந்தனால் உருவாக்கப்பட்டது. அவர் தனது தந்தையின் பெயரால் அமைக்கப்பட வேண்டும் என்று அவரின் பெயரினாலே அமைத்துக் கொண்டார். எமது கவிஞர் நாடகமன்றத்தை இப்போது எம்து குடும்பத்தின் பிள்ளைகள் தான் வளர்த்துக்கொண்டு வருகின்றனர். எமது நாடகமன்றத்தை உருவாக்கிய மு. செ விவேகானந்தரின் காத்தவராயன் சிந்து நடை கூத்து நாடகம் மிகச் சிறப்பாக நடிக்கப்படுகின்றது. நாடக மன்றத்தை வளர்க்க வேண்டும். நாடக இசையை வளர்க்க அனைவரும் முன்வரவேண்டும்.

நேர்காணல்:
ஜெய[illegible] ஜெகன்




# நடராஜன் கவலைக்கிடம்;
## பரோலில் வருவாரா சசிகலா?



(பெங்களூர்)

சசிகலாவின் கணவர் நடராஜன் குளோபல் வைத்தியசாலையில் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் சசிகலா பரோலில் வருவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

சென்னை பெரும்பாக்கத்தில்உள்ள குளோபல்வைத்தியசாலையில் கடந்த 10ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட நடராஜனுக்கு (வயது-74) கல்லீரல் மற்றும் சிறுநீரகம் செயலிழந்தது.

கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வரும் அவருக்கு கல்லீரல் மற்றும் சிறுநீரகம் மாற்றப்பட வேண்டும். இதற்காக உறுப்புதான இயக்கத்தில் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கணவர்உடல்நிலைமோசமானதால்பெங்களூர்பரப்பன அக்ரஹார சிறையில் உள்ள சசிகலா பரோல் கேட்டு சிறை அதிகாரிகளிடம் விண்ணப்பித்ததாக செய்திகள் வெளியாகின. ஆனால்இத்தகவலை கர்நாடக மாநில அ.தி.மு.க. அம்மா அணி செயலாளர் புகழேந்தி மறுத்துள்ளார். இது குறித்து அவர் நேற்று நிருபரிடம் கூறியதாவது.

சசிகலா தற்போது வரை பரோல் கேட்டு எந்த விண்ணப்பத்தையும் சிறை அதிகாரிகளிடம் கொடுக்கவில்லை என்றார். சசிகலா பரோல் குறித்து கர்நாடக சிறைத்துறை கூடுதல்டி.ஜி.பி.மெக்ரத்திடம் கேட்ட போது அவர் கூறியதாவது.

தற்போது சசிகலா பரோல் கேட்டு விண்ணப்பிக்கவில்லை. அவர் பரோல் கேட்டு விண்ணப்பித்த எந்த விண்ணப்பமும் என்னிடம் வரவில்லை என்றார். (8-3)

# போரை விரும்புகிறதா வடகொரியா

(வோஷிங்டன்)

அமெரிக்கா போரை அறிவிக்காத நிலையிலும் போரை முதன்முதலில் அறிவித்தது அமெரிக்காதான் என்று பறைசாற்றுவதன் மூலம் வடகொரியா போரைத்தான் விரும்புகின்றதா? என்ற ஐயம் பல நாடுகளிடையே எழுந்துள்ளது.

**“போரை முதலில் அறிவித்தது அமெரிக்காதான் என்று வட கொரியா கூறியுள்ளமை அபத்தமானது. அமெரிக்கா அமைதியைத்தான் விரும்புகின்றது. அமெரிக்காவை தூண்டும் நடவடிக்கையை வடகொரியா நிறுத்திக்கொள்ளவேண்டும்.”**

வடகொரியா மற்றும் அமெரிக்கா இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் அமெரிக்காவின் முன்னாள் விமானப் படை தலைமை அதிகாரி ஒருவர் வெளியிட்டுள்ள தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதில் வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா போர் தொடுக்கும் எனில் தென் கொரியாவிலுள்ள 20,000 அப்பாவி மக்கள் தினசரி கொல்லப்பட வாய்ப்புள்ளதாகவும்.

இது அணுஆயுதம் பயன்படுத்தினால் பலமடங்கு அதிகரிக்கும் எனவும் கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இதனிடையே தென்கொரியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் தனித்தனியே அமெரிக்காவிடம் போர் குறித்து விவாதித்ததாகவும் தற்போதைய சூழலில் போர் தீர்வல்ல எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் கிம் ஜாங் உன் மேற்கொண்டு வரும் ஏவுகணை சோதனை மற்றும் அச்சுறுத்தல்களை தடுத்து நிறுத்த வேண்டும் எனில், அவர் தோற்கடிக்கப்பட வேண்டும் என அமெரிக்கா எடுத்துரைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனிடையே அமெரிக்கா தங்கள் மீது போர் அறிவித்துள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ள கருத்துக்கு மறுப்புத் தெரிவித்துள்ள வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் சாரா, “போரை முதலில் அறிவித்தது அமெரிக்காதான் என்று வடகொரியா கூறியுள்ளது அபத்தமானது. அமெரிக்கா அமைதியைத்தான் விரும்புகிறது. அமெரிக்காவை தூண்டும் நடவடிக்கையை வடகொரியா நிறுத்திக் கொள்ளவேண்டும்” என்றார்.

தொடர் ஏவுகணை சோதனைகளில் ஈடுபட்டு வரும் வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

இதன் காரணமாக இரு நாட்டுக்கும் இடையே போர் ஏற்படும் அபாயம் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் தங்கள் நாட்டின் மீது அமெரிக்கா போர் அறிவித்துள்ளதாக வடகொரியா கூறியுள்ளதை அபத்தம் என்று அமெரிக்கா விமர்சித்துள்ளது.

மேலும் அதிரடி பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்துவதால் மட்டுமே வட கொரியா கட்டுக்குள் வரும் என்ற நிலைப்பாட்டில் சீனாவும் தற்போது களமிறங்கியுள்ளது.

முன்னதாக அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரத் தடைகள் தங்களை எதுவும் கட்டுப்படுத்தாதுஎனவடகொரியா பகிரங்கமாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# வடகொரிய
## தடை விதித்த



(வோஷிங்டன்)

வடகொரியா நடத்திவரும் அணுஆயுத சோதனைகளை தடுக்கும் வகையில் அந்நாட்டைச் சேர்ந்த எட்டு வங்கிகள் மீதும், 26 அதிகாரிகள் மீதும் அமெரிக்க அரசு தடை விதித்துள்ளது.

உலக நாடுகளின் கடும் கண்டனங்களையும் மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. இது அமெரிக்க அரசை எரிச்சலடையச் செய்துள்ளது. இதன்காரணமாக வட கொரியா மீது அமெரிக்க அரசு பல தடைகளை விதித்துள்ளது.

இத் தடைகளுக்கு அமெரிக்கா, ஜப்பான், சீனா உட்பட பல நாடுகள் ஆதரவளித்துள்ளதால் வடகொரியாவிற்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அந்நாட்டில் எரிபொருட்களின் விலை கணிசமாக அதிகரித்துள்ளது. இதன்காரணமாகஏனைய பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இத் தடைகளை பொருட்படுத்தாமல் வடகொரியா செயற்பட்டு வருகிறது.

# உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் பண்பாட்டுமையம் ஆரம்பிக்கப்படவுள்ளது

### தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மா.பா.பாண்டியன் அறிவிப்பு



(சென்னை)

உலகமெங்கும்உள்ள தமிழர்களை ஒன்றிணைக்கும் வகையில் தமிழ் பண்பாட்டு மையம் மற்றும் தமிழ் வளர்ச்சி மையம் உருவாக்கப்படவுள்ளது என தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மா. பா.பாண்டியராஜன் தெரிவித்துள்ளார்.

தமிழர் தந்தை சி.பா ஆதித்தனாரின் 113ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை எழும்பூரில் உள்ள அவரது சிலைக்கு தமிழக அரசின் சார்பில் அமைச்சர் டி.ஜெயக்குமார், மா.பா பாண்டியராஜன் ஆகியோர் நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதனையடுத்து செய்தியாளர்களை சந்தித்த மா.பா.பாண்டியராஜன் கூறியதாவது,

தமிழர் தந்தை சி.பா ஆதித்தனாரின் 113ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் சில அறிவிப்புகளை இங்கே வெளியிடுகிறேன். உலகமெங்கும் உள்ள தமிழர்களை ஒன்றிணைக்கும் விதமாக தமிழ் பண்பாட்டு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் பண்பாட்டு இசைக்கலை, கர்நாடக இசை ஆகியவை வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிக்காக இந்த மையங்கள் உருவாக்கப்படவுள்ளன. இதற்காக, சுவிட்சர்லாந்து மற்றும்பிரான்ஸ் நாடுகளுடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

தமிழ் மொழியை பரப்பும் விதமாக தமிழ் வளர்ச்சி மையம் உருவாக்கவுள்ளோம். தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் கீழ் இம்மையம் செயற்படும்.

கீழடியில் மூன்று கட்ட ஆய்வுகள் முடிந்துள்ளன. அடுத்தகட்ட ஆய்வு பெரிய அளவில் இருக்கும். மத்திய அரசின் கீழ் இயங்கும் செம்மொழி ஆய்வு நிறுவனத்திற்கு தேவையான நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (3-8)

# பெண்களுக்கு
## வழங்க சவுதி

(ஜெட்டா)

பெண்கள் வாகனம் ஓட்டுவது தடை செய்யப்பட்டிருந்த சவுதி அரேபியாவில் தற்போது அந்த நடைமுறை விலக்கப்பட்டு பெண்கள் வாகனம் ஓட்டுவதற்காக உரிமங்கள் வழங்க மன்னர் சல்மான் முடிவு செய்துள்ளார்.

பழைமைவாத நடைமுறைகளை கொண்டுள்ள சவுதி அரேபியா மன்னராட்சியின் கீழ் இயங்கும் நிர்வாகத்தைக் கொண்டுள்ளது. இந்நாட்டில் பெண்களுக்கான பல்வேறு உரிமைகள் மறுக்கப்பட்டு வந்தது. கார் ஓட்டுவது, விளையாட்டுகளில் ஈடுபடுவது, மைதானத்தில் சில விளையாட்டுக்களை நேரில் பார்ப்பது என பல உரிமைகள் மறுக்கப்பட்டு வந்தன.

அண்மைக்காலமாக சவுதி அரசு தனது நிலைப்பாட்டில் சற்றே மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. அதன்படி, கடந்த ஒலிம்பிக் போட்டிகளில் அந்நாட்டின் வீராங்கனைகள் பங்கேற்றனர். மேலும், சர்வதேச பெண்கள் தினம் அண்மையில் அரண்மனையில் கொண்டாடப்பட்டது.

இந்நிலையில், அந்நாட்டிலுள்ள பெண்கள் கார் உள்ளிட்ட வாகனங்கள் ஓட்டுவதற்கு அனுமதியளிக்க மன்னர் சல்மான் முடிவு செய்துள்ள

# வெளிநாடு

# வங்கிகள் மீது
# ...து அமெரிக்கா



மேலும் அமெரிக்க மற்றும் வடகொரிய அதிகாரிகள் இடையே அண்மைக் காலமாக மோதல் போக்கு நிலவிவருகிறது.

இந்நிலையில், வடகொரியாவிற்கு மேலும் அழுத்தம் கொடுக்கும் வகையில் அந்நாட்டைச் சேர்ந்த எட்டு வங்கிகள் மீது அமெரிக்க அரசு தடை விதித்துள்ளது.

அத்தோடு அவ்வங்கிகளைச் சேர்ந்த 26 வங்கி அதிகாரிகள் மீதும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அமெரிக்காவில் அவ்வங்கிகளின் அனைத்துச் சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து பேசிய அமெரிக்க கருவூல செயலாளர் ஸ்டீவன் முனுச்சின் இந்தத் தடைகளின் மூலம் வட கொரியாவை முழுமையாக தனிமைப்படுத்தி கொரிய தீபகற்பத்தை சமாதானம் நிறைந்த மற்றும் அணு ஆயுதம் இல்லா பகுதியாக மாற்றும் எண்ணத்தை நிறைவேற்ற முடியும் என கூறினார். (3-8)

## பேராபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பூமி

# மிகப்பெரிய பனிப்பாறை உடைந்தது



உலகின் மிகப்பெரிய பனிப்பாறைகளில் ஒன்று அந்தாட்டிக்காவில் இருந்து உடைந்து பிரிந்துள்ளதை புதிதாக வெளியான சட்டலைட் புகைப்படம் உறுதி செய்துள்ளது.

இப் பனிப்பிளவானது அந்தாட்டிக்காவில் இந்த ஆண்டு ஏற்பட்ட இரண்டாவது மிகப்பெரிய பனிப்பிளவாகும்.

உலகின் 5 ஆவது மிகப் பெரிய கண்டம் அந்தாட்டிக்கா. புவியின் தென்முனையில் இக் கண்டம் முழுவதும் ஏறக்குறைய பனிக்கட்டியினால் மூடப்பட்டுள்ளது.

புவி வெப்பமாதலினால் இங்குள்ள பனி உருகி வருகின்றது. இதன்மூலம் கடல் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் மேற்கு அந்தாட்டிக்காவில் உள்ள பைன் தீவு பனிப்பாறையில் ஏற்பட்ட பிளவால் 266 சதுர கிலோ மீற்றர் அளவுள்ள பனிப்பாறை ஒன்று பிரிந்துள்ளது.

இது பைன் தீவு பனிப்பாறையானது அந்தாட்டிக்காவிலேயே மிகவும் வேகமாக உருகும் பனிப்பாறையாகும். இப்பனித்தீவு முழுவதுமாக உருகிவிட்டால் உலகின் ஒட்டுமொத்த கடலின் நீர்மட்டம் 1.7 அடி அளவு அதிகரிக்கும்.

எனவே ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பனிப்பாறையை கவனத்துடன் கண்காணித்து வரு கின்றனர்.

உலக வெப்பமயமாதலின் காரணமாக அந்தாட்டிக்காவின் பனிப்பாறைகள் நாளுக்கு நாள் உருகி வரும் நிலையில் பூமியானது ஒரு பேராபத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதையே இந்தப் பனித்தகர்வுகள் நமக்கு காட்டுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (3-8)

# பாதயாத்திரை சென்ற 7 பேரை பலியெடுத்தது தறிகெட்டு ஓடிய கார்

(ஜெய்ப்பூர்)

இராஜஸ்தான் மாநிலம் தாவுல்பூர் அருகே நேற்றுக் காலை பயங்கர வேகமாக தறிகெட்டு ஓடிய கார் மோதி கோயிலுக்கு பாதயாத்திரை சென்ற 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இராஜஸ்தான் மாநிலம் தாவுல்பூர் மாவட்டத்தில் உள்ள ஒரு கோவிலுக்கு அங்குள்ள பக்தர்கள் பாத யாத்திரையாகச் சென்றுள்ளனர். நேற்று அதிகாலை காரா ஆற்றின் அருகே அவர்கள் வந்து கொண்டிருந்த போது எதிரே பயங்கர வேகமாக வந்த கார் யாத்திரிகர்கள் மீது திடீரென மோதியது.

இக்கோர விபத்தில் சம்பவ இடத்திலேயே 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 15 இற்கும் அதிகமானோர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு மேலும் மூவர் உயிரிழந்தனர். இவ் விபத்துக் குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (3-8)

# ...த ஓட்டுநர் உரிமம்
# ...தி மன்னர் முடிவு



...தாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. மேலும், ஓட்டுநர் உரிமங்கள் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க அவர் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்தாண்டு ஜூன் மாதத்தில் இருந்து இந்தப் புதிய உத்தரவு நடைமுறைக்கு வர இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மன்னரின் இந்த முடிவுக்கு பெண்கள் நல ஆர்வலர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். சவுதி மக்கள் தொகையில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் சரிபாதி இடம்பிடித்துவிட்ட இந்த நேரத்தில் இதுபோன்ற முக்கிய முடிவுகள் அவசியம் என மன்னர் தெரிவித்ததாக கூறப்படுகிறது. (3-8)

# தற்கொலைப்படை தாக்குதல் நடத்திய பெண் தீவிரவாதிகள்

## மசூதிக்குள் 5 பேர் பலி!

(மைடுகுரி)

நைஜீரியா நாட்டின் வட கிழக்கு பகுதியிலுள்ள மசூதியில் நேற்று போகோ ஹராம் தற்கொலைப்படையைச் சேர்ந்த பெண் தீவிரவாதிகள் நடத்திய மனித குண்டுத் தாக்குதலில் 5 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் சரிசமமான எண்ணிக்கையில் வாழ்ந்து வரும் நைஜீரியாவில் இஸ்லாமிய சட்டதிட்டத்துக்கு உட்பட்ட அரசை நிறுவ வேண்டும் என்று கூறி ஒரு பிரிவினர் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அண்மைக்காலமாக தற்கொலைப் படை தாக்குதலுக்கு இவர்கள் பெண்களை அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர். நைஜீரியா நாட்டின் போர்னோ மாநில தலைநகரான மைடுகுரி நகரில் போகோஹராம் தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகமாகவுள்ளது.

இந்நகரின் மத்திய பகுதியிலுள்ள திக்வா பகுதியில் பிரபலமான மசூதி ஒன்றினுள் நேற்று முன்தினம் அதிகாலை சுமார் 5 மணியளவில் நுழைந்த ஒரு பெண் தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க வைத்தார். இந்தத் தாக்குதலில் ஐந்து பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். படுகாயமடைந்த மூன்று பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் அருகாமையிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மசூதிக்குள் தாக்குதல் நடந்த அதே வேளையில் மைடுகுரி நகரின் மற்றொரு பகுதியில் சந்தேகத்திடமான வகையில் சுற்றித்திரிந்த ஒரு பெண்ணிடம் இராணுவத்தினர் சோதனை நடத்த முயன்றனர். அப்போது அந்தப் பெண் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க செய்ததில் அப்பெண் உடல்சிதறி பலியானார்.



இந்தத் தாக்கு தலில் வேறு எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

இத் தாக்குதலின் காரணமாக அப்பகுதியிலுள்ள அனைத்துக் கடைகளும் மூடப்பட்டன. இன்னும் சில தீவிரவாதிகள் பதுங்கியிருக்கக்கூடும் என்ற தகவலையடுத்து அப்பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சோதனையில் ஈடுபட்டனர். இதே மைடுகுரி நகரிலுள்ள மோலை கொலேமரி பகுதியில் போகோஹராம் தற்கொலைப் படையை சேர்ந்த 4 பெண் தீவிரவாதி கள் கடந்த ஜூலை மாதம் நடத்திய மனிதகுண்டு தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

# தமிழ் இளைஞர்கள் கடத்தலுடன் கடற்படையினருக்குத் தொடர்பு

## சட்டமா அதிபர் நீதிமன்றில் தகவல்

(கொழும்பு)

கடந்த 2008 ஆம் ஆண்டு கொழும்பு நகரில் 11 தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போனமை தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இலங்கைக் கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க உட்பட 6 கடற்படை அதிகாரிகள் இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளதை நிரூபிக்க தேவையான ஆதாரங்கள் இருப்பதாக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தமக்குப் பிணை வழங்குமாறு கோரி சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் தாக்கல் செய்த மனுக்கள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த அறிவித்தல் வழங்கப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச தரப்பின் சட்டத்தரணி கருத்துத் தெரிவித்த போது சம்பந்தப்பட்ட இளைஞர்கள் கடத்தப்பட்டது முதல் அவர்கள் காணாமல் போகும் வரை இடம் பெற்ற நிகழ்வுகளில் இந்த சந்தேக நபர்களுக்குத் தொடர்புள்ளதாகத் தெரிவித்தார்.

இப்போது சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கப்பட்டால் அதன் மூலம் விசாரணைகளுக்குப் பாதிப்பு ஏற்படும் ஆபத்து இருப்பதாகத் தெரிவித்த அரச தரப்பு சட்டத்தரணி மேலும் சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுமென்றும் எச்சரித்தார்.

எனவே சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்குவது தொடர்பாக தான் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் கூறினார்.

அரச தரப்பு சட்டத்தரணியின் கருத்துக்களை ஆராய்ந்த நீதிபதி, சந்தேக நபர்கள் தொடர்பாக விசாரணைகளைமேற்கொள்ள அரச தரப்பிற்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென்று தெரிவித்தார்.

இதன்படி பிணை மனுக்கள் மீதான விசாரணையை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை ஒத்திவைத்த நீதிபதி அன்றையதினம் விசாரணைகளின் முன்னேற்றத்தை அறிவிக்குமாறு அரச தரப்பின் சட்டத்தரணிக்கு உத்தரவிட்டார். (இ-7)

# நோபல் பரிசு பரிந்துரைப் பட்டியலில் ஜனாதிபதி மைத்திரியும் உள்ளடக்கம்

(கொழும்பு)

அமைதிக்கான நோபல் பரிசுக்கான பரிந்துரைப் பட்டியலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைதிக்கான ஒஸ்லோ ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசு அடுத்த மாதம் அறிவிக்கப்படவுள்ள நிலையில், இந்தப் பரிசுக்குத் தகுதி பெற்றவர்களின் பட்டியல் ஒன்றை அமைதிக்கான ஒஸ்லோ ஆய்வு நிறுவகம் வெளியிடவுள்ளது.

சுயாதீன மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைதிக்கான ஒஸ்லோ ஆய்வு நிறுவகம் 2002ஆம் ஆண்டு முதல் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படக் கூடியவர்களின் தகுதிப்பட்டியல் ஒன்றை வெளியிட்டு வருகிறது.

இதன்படி இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுக்கு தெரிவு செய்யப்படக் கூடியவர்களின் பட்டியலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரையும் உள்ளடக்கியுள்ளதாக கூறப்படுகிறது.



இலங்கையில் அமைதி, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளுக்காக இவருக்கு இந்தப் பரிசை அளிக்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் சிரியாவைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டு அமைப்பான வெள்ளை தலைக்கவசம் அமைப்பின் ராட் அல்சாலே, அமெரிக்க சிவில் உரிமைகள் ஒன்றியம், சூசன் என். ஹேர்மன் ஜீன், நகச் பன்யாரே, ஜெனெட் கஹின்டோ பிந்து, டெனிஸ் முக்வேஸ் ஆகியோரின் பெயர்களையும் அமைதிக்கான ஒஸ்லோ ஆய்வு நிறுவகம் பரிந்துரைப் பட்டியலில் இணைத்துள்ளது. (இ-7)

# பெல்ஜியம் வெளிவிவகார அமைச்சருடன் அமைச்சர் திலக் மாரப்பன சந்திப்பு

பெல்ஜியத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன அந்த நாட்டின் பிரதிப் பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான டிடியர் ரென்டேர்சுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.



பிரசெல்சிலுள்ள எக்மன்ட் பலசில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இதன்போது இருதரப்பு விவகாரங்கள் மற்றும் உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# கொலைக் குற்றவாளிக்கு மரண தண்டனை

(கொழும்பு)

கொலைக் குற்றம் தொடர்பில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு கம்பஹா உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

ஏழு பேர் கொண்ட ஜூரி சபையின் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நபர் வெளிநாடு சென்றுள்ளதாக குடிவரவு குடியகல்வு முகாமையாளர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜூன் 30 ஆம் திகதி யு.எல். 207 ஆம் இலக்க விமானத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டவர் அபுதாபி சென்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

குறித்த குற்றவாளி நாட்டுக்கு வருகை தந்தவுடன் கைது செய்யுமாறு திறந்த பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி பெண்ணொருவர் வெயாங்கொட கொரஸ பகுதியில் கொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### குற்ற உணர்வை உண்டாக்கலாமா?

நானும் என் உறவினரும் ஓர் இடத்திற்குப் புறப்படுவதாக இருந்தது. நேரமும் முடிவாயிற்று. அந்த மனிதர் எப்போதுமே எதையும் ஆற அமரத்தான் செய்வார். நேரத்திற்குப் புறப்படமாட்டார். இது எனக்கு நன்கு தெரியும். அவர் குளிக்கக்கூட ஆயத்தமாகாத நிலையில் நான் தயாராகி வேண்டுமென்றே அவர் கண்ணில் படும்படி நடமாடினேன்.

ஓ நீங்க ரெடியா? என்றவர் கொஞ்சம் ஆடிப் போய்விட்டார்.

பக்குவப்படாத நாட்களில் இதே நபரை நான் எப்படி அணுகியிருப்பேன் என்பதையும் இங்கே சொல்லிவிடுகிறேன்.

என்னங்க நீங்க? இன்னுமா ரெடியாகலை? நான் எப்பவோ ரெடியாயிட்டேன் தெரியுமா? நீங்க எப்பவுமே லேட்தான் என்று ஒரு விளாசு விளாசியிருப்பேன்.

பிறருடைய தவறுகளை நாம் வெளிப்படையாகச் சுட்டிக் காட்டுவதைவிடக் குறிப்பால் உணர்த்துவதும் அவர்களையே உணர வைப்பதும் ஆரோக்கியமான அணுகுமுறையாக இருக்கும்.

சிலபேர் அத்தனை பேரையும் வைத்துக் கொண்டு மானத்தை வாங்குவார்கள்.

என்னங்க நீங்க! இது கூடவா தெரியாது? என்று கேட்டு வைப்பார்கள். பாதிக்கப்பட்ட மனிதர் குற்ற உணர்வில் குன்றிப்போவார். இது கூடத் தெரியாமல் இருக்கிறோமே என்பது அவருக்குத் தோன்றாமல் போய், இந்த மனுஷன் நம்ம மானத்தை வாங்கிட்டான்யா, என்பதுதான் தலைதூக்கி நிற்கும்.

ஒருவர் நம் வீட்டு விசேடத்திற்குத் தாமதமாக வருகிறார். என்னங்க இவ்வளவு லேட்டா வர்றீங்க ? இது தானா நீங்க வர்ற லட்சணம்? நானும் கலந்துகிட்டேன்னு பேரு வாங்க வந்தீங்களா? என்று சிலபேர் பிடி பிடி என்று செமப்பிடி பிடித்து விடுவது உண்டு. நாம் கேட்பது உரிமையின் பேரிலும் அன்பின் பேரிலும் தான். ஆனால் இந்த அடிப்படை உணர்ச்சி அவரைப் போய் அடைவதில்லை.

இப்படிக் கேட்டு அவருடைய குற்ற உணர்வை மிதமிஞ்சிய நிலைமைக்கு உயர்த்துவதன் மூலம் வெறுப்புக்குரியவர்களின் பட்டியலில் நாமும் சேர்ந்து விடுகிறோம்.

மாறாக நீங்க இன்னும் கொஞ்சம் முன்னாடி வந்திருந்தா எவ்வளவோ நல்லாயிருந்திருக்கும்! என்று அணுகியிருந்தால் அந்த மனிதர் ஆடிப்போயிருப்பார், அவர் சொன்னது ரொம்பச் சரி. நாம சீக்கிரம் வந்திருக்கணும் என்று அவருக்குத் தோன்றியிருக்கும்.

தவறான செயல்களைச் செய்தவர்கள் தவறான அணுகுமுறையைப் பின்பற்றியவர்கள், தவறான சொல்லைப் பயன்படுத்தியவர்கள் இவர்கள் அனைவரையுமே ஓர் எல்லைக்குள் நின்று கொண்டு சுட்டிக்காட்டும் போதுதான் அவர்களிடத்தில் அடுத்த முறை வரவேற்கத்தக்க மாற்றங்களை எதிர்பார்க்க முடியும்.

இதையே அளவுக்கு மீறிச் செய்தால் அவர்கள் தவறுகளை உணராததோடு நம் மீது வருத்தமும் கோபமும் கொண்டு விடயத்தையே திசை திருப்பி விடுகிறார்கள்.

இது நமக்குக் கிடைத்த இரட்டைத் தோல்வியாக அல்லவா ஆகிவிடுகிறது?

**லேனா தமிழ்வாணன்**

# வித்தியா கொலை வழக்கு தீர்ப்பின் போது











புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் நீதாய விளக்க தீர்ப்பு நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு பொது மக்கள், புத்திஜீவிகள் , சமூக செயற்பாட்டாளர்கள், மாணவர்கள் எனப் பலர் நீதிமன்ற வளாகத்தில் ஒன்று கூடியிருந்தனர். இதேவேளை விசேட அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.


3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். பாமதி அமிர்தகுமார்

தோற்றம் 1970 – 09 – 13

மறைவு 2014 – 09 – 28



பாரினில் அவதரித்து
பண்புடனே கற்றுயர்ந்து
பதவியிலே கண்ணியமாய்
பள்ளிதனில் பாசம் கொண்டு
பக்குவமாய் பாடமளித்து


பரிவுடனே நட்புயிர்த்து
பதிவுடனே பாதியாகி
பரலோகம் சரணடைய
பல மனங்கள் உருகியிங்கு
பரன் நிழலில் சாந்தி பெற வேண்டும்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(815)

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.

உம்பிரிவால் தவிக்கும்
குடும்பத்தினர்.


# சிறைபிடிக்கப்பட்ட படகுகளை மீட்க 53 மீனவர்கள் இலங்கைக்கு பயணம்

(சென்னை)

இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட படகுகளை சரி செய்து கொண்டு வர இந்தியாவில் இருந்து நேற்று காலை 8 மணியளவில் 7 படகுகளில் 53 மீனவர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவொன்று இலங்கை வந்தடைந்துள்ளது.

தமிழக மீனவர்கள் கடலுக்கு செல்லும்போது எல்லை தாண்டி வந்ததாக கூறி அவர்களின் படகுடன் சிறைபிடிப்பது தொடர்ந்து நடந்து வருகிறது. பின்னர் மத்திய அரசு நடவடிக்கையின் பேரில் இலங்கை அரசு மீனவர்களை விடுதலை செய்து வருகின்றது. ஆனால் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை விடுவிக்க மறுத்து வந்தது.

இவ்வாறு இலங்கையில் தமிழக மீனவர்களின் 179 விசைப்படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. போதிய பாதுகாப்பு இன்மையால் படகுகள் 80 சதவீதம் சேதமடைந்துள்ளன.

படகுகளை இழந்த மீனவர்கள் வாழ்வாதாரம் இன்றி தவித்து வந்தனர். பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி மீனவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தனர்.

இதையடுத்து மத்திய அரசு பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்திய பின் இலங்கை அரசு முதற்கட்டமாக 42 படகுகளை விடுவிக்க சம்மதித்தது. இதனைத் தொடர்ந்து விடுக்கப்பட்ட படகுகளின் தன்மை குறித்து ஆராய மீன்வளத்துறையின் கூடுதல் இயக்குநர் சமீரன் தலைமையில் குழுவினர் இலங்கை வந்தனர்.

இங்கு ஆய்வு செய்த போது அனைத்துப் படகுகளிலும் இயந்திரம் இல்லை. விடுவிக்கப்பட்ட படகுகளில் 32 படகுகள் ஓரளவு சரி செய்து கொண்டு வரும் நிலையில் உள்ளன. மற்ற படகுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதால் அதனை உரிமையாளர்கள் விரும்பினால் விற்பனை செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் விடுவிக்கப்பட்ட படகுகளை சரி செய்து கொண்டு செல்ல இராமேஸ்வரம் மண்டபத்தில் இருந்து நேற்றுக்காலை 8 மணியளவில் 7 படகுகளில் 53 மீனவர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

இந்திய கடலோர காவல் படையினர் இவர்களை அழைத்து வந்தனர். இந்திய கடல் எல்லையில் மீனவர்கள் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்படுவார்கள். பின்னர் இந்த குழு படகுகளை சரி செய்து நாடு திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)



மத்தொனி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் கரவெட்டி பிரேதேச செயலகத்தால் வயல் மேட்டு நிலப்பகுதியிலுள்ள கருவேல மரங்களை அழித்தல்,கழிவுகள் போடப்படும் இடங்களில் உள்ள கழிவுகளை அகற்றும் நடவடிக்கை என்பன மேற்கொள்ளப்பட்டன. (படங்கள்: மகாலிங்கம்)

# மாணவர்களைத் தாக்குமாறு பல்கலை நிர்வாகம் அறிவித்ததா?

ஒலுவில் பல்கலைக்கழக மாணவர்கள் கிராமத்திற்குள் நுழைந்தால் தாக்குதல் நடத்துமாறு ஒலுவில் பகுதி மக்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது உண்மையா? அப்படியாயின் நிர்வாகத்திற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றீர்கள் என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவர் தினேஷ் குணவர்த்தன சபையில் கேள்வி எழுப்பினார், அத்துடன் 1500 மாணவர்களுக்கு பரீட்சை உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு பரீட்சை எழுத அனுமதிக்கப்படுமா? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நிலையியற் கட்டளை 23 இன் 2 கீழ் கேள்வி எழுப்பும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒலுவில் பல்கலைக்கழகத்தின் 55 மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட வகுப்பு தடைகாரணமாக சுமார் 9 மாதங்களாக அவர்களுக்கு வகுப்புகளுக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மேலும் இருவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் அனைத்தும் நிர்வாகத்தின் பழிவாங்கல் செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினால் மாணவர்களுக்கு பரீட்சைக்கு தோற்றும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 80 வீத வகுப்பு வரவு இருக்க வேண்டும் என்ற விதிமுறைமையின் காரணமாக 1500 பேருக்கு பரீட்சை எழுத முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே வகுப்பு வரவினை 80 வீதத்தில் இருந்து 40 வீதமாக குறைக்க வேண்டும்.

மேலும் ஒலுவில் பல்கலைக்கழக மாணவர்கள் கிராமத்திற்குள் நுழைந்தால் தாக்குதல் நடத்துமாறு ஒலுவில் பகுதி மக்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது உண்மையா? அப்படியாயின் நிர்வாகத்திற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்க போகின்றீர்கள் எனவும் கேள்வியெழுப்பினார். (இ-7)

# வடமத்திய மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று ஆர்ப்பாட்டம்

வடமத்திய மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று இரண்டாவது நாளாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தம்மை ஆசிரியர் சேவையில் அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு தெரிவித்தே நேற்றுக் காலை முதல் வடமத்திய மாகாண சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வருடம் வேலையற்ற பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டு பரீட்சை நடத்தப்பட்ட போதிலும் வடமத்திய மாகாணத்தில் தகுதிபெற்றவர்களுக்கு நியமனங்கள் வழங்காது வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தமக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# விபத்தில் மூவர் காயம்

துவிச்சக்கர வண்டியில் சென்றவர்களை மோட்டார் சைக்கிள் மோதியதில் மூவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்கான அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை சாரையடிப் பகுதியில் இடம்பெற்றது.

இவ் விபத்தில் புலோலியைச் சேர்ந்த கிட்டினபிள்ளை(வயது-60), அவரின் பேரனான சாருகன்(வயது-9) மோட்டார் சைக்கிளில் சென்ற தம்ப சிட்டியைச் சேர்ந்த பிரபாகர்(வயது-40)ஆகிய மூவரே படுகாயங்களுக்கு உள்ளாகினர். (இ-60)

# அபிவிருத்திச் செயற்பாடுகளில் எவ்வித முறைகேடுகளுக்கும் இடமளிக்கப்பட மாட்டாது

## ஜனாதிபதி மைத்திரி உறுதி



இன்று நாட்டில் அரசியல் ஸ்திரப்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் சர்வதேச ரீதியாக அனைவருடைய உதவியும் இலங்கையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு குறைவின்றி கிடைத்து வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்த அபிவிருத்தி செயற்பாடுகளில் எவ்வித முறைகேடுகள் அல்லது மோசடிகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் பதுளை மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்காது, அந்த தவறுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு கடந்த அரசாங்கம் இடமளித்த போதும் இன்று எவ்வித அரசியல் வேறுபாடுகளுமின்றி ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்திற்கு ஏற்ப எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் அரசாங்கத்திற்கு எத்தகைய குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்களை முன்வைத்த போதும் உலகில் அனைத்து நட்பு நாடுகளினதும் உதவியுடன் நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பின்னோக்கித் திருப்புவதற்கு எவருக்கும் முடியாது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-3)

# இலங்கைக்குள் நுழைந்த ஈரானிய பிரஜை கைது

(கொழும்பு)

இலங்கைக்கு போலிக் கடவுச்சீட்டு மூலம் வந்த ஈரானிய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஈரானிய பிரஜை ஒருவரின் கடவுச்சீட்டை மிக நுணுக்கமான முறையில் தொழிநுட்பத்தை பயன்படுத்தி போலியாக தயாரித்து இலங்கைக்குள் நுழைந்துள்ளார் என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த சந்தேக நபர் இலங்கை விமான நிலையத்திலிருந்து அவுஸ்ரேலியாவிற்கு செல்ல முற்படுகையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. (இ-7)

# பேருந்து கடத்தல்

(கொழும்பு)

மதுகம நகரத்தில் நேற்று தனியார் பேருந்து ஒன்று கடத்தப்பட்டுள்ளது. WP NA -5408 என்ற இலக்கமுடைய தனியார் பேருந்துதே, மதுகம நகரப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது கடத்தப்பட்டுள்ளது. இதன் போது பயணிகள் எவரும் பேருந்தில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 154cm
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: B/7115

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 39செவ் 8 இல்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்:O/Lலண்டன் PR
தொ.இ: B/7119

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 28 செவ் 8 இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்: A/L/சொந்த தொழில்
தொ.இ: B/7121

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: செவ் 4 இல்
தகைமை/தொழில் A/Lசுவிஸ் NOTPR
தொ.இ: B/7122

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 18 செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/Lஎதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/7107

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/7109

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:பட்டதாரிலண்டன் NOT PRஎதிர்பார்ப்பு: விவாகரத்தான வரும் ஏற்கப்படும்.
தொ.இ: G/7110

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 94செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:HND CIMA, ACCA/கணக்காளர்
தொ.இ: G/7111

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சுற்றுலாத்துறையின் கேந்திரமாக இலங்கை மாறும்; பிரதமர் நம்பிக்கை

"எதிர்வரும் ஆண்டுகளில், உலக சுற்றுலாத் துறையின் மையமாக ஆசியப் பிராந்தியம் விளங்குவதுடன் அதன் பிரதான கேந்திரமாக இலங்கை மாற்றமடையும்" என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டார்.

'இலங்கையின் அபிவிருத்திக்கான சுற்றுலா' என்ற தொனிப்பொருளிலான சர்வதேச மாநாடு கொழும்பு சினமன்ட் கிரான்ட் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் மேலும் உரை நிகழ்த்துகையில், "இலங்கை நிலையான பொருளாதார அபிவிருத்தியை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது. சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரையில் வேகமாக வளர்ச்சியடைந்துவரும் துறையாக மாறியிருக்கிறது.

"எதிர்வரும் ஆண்டுகளில் உலகத்திலேயே அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிராந்தியமாக ஆசியா மாற்றமடையும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. 2030ஆம் ஆண்டளவில் ஆசிய பிராந்தியத்துக்கு சுமார் 500 பில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள். அதில் முக்கிய கேந்திர நிலையமாக இலங்கை விளங்கும் என்பதில் ஐயமில்லை.

"இலங்கையில் தென் பகுதியை அபிவிருத்தி செய்ய வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது. சுற்றுலாப் பயணிகள் பெரிதும் விரும்பும் இடமாக தென்பகுதி விளங்குகிறது. அத்துடன் யாழ்ப்பாணம், மன்னார், கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

"கொழும்பு, திருகோணமலை, அம்பாந்தோட்டைத் துறைமுகங்களின் அபிவிருத்திக்காக நாம் நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு முன்மொழிவுகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். இலங்கையின் சுற்றுலாத்துறையை நிலையான வருமானம் மிக்கதாக மாற்றுவதற்கு 2025 ஆம் ஆண்டில் எமது அடைவுகள் குறித்தும் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சின்னையாவின் பதவி தப்புமா?



அண்மையில் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட ட்ரவிஸ் சின்னையா விரைவில் ஓய்வுபெறும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா நேற்று முன்தினம் தனது 55 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். ஜனாதிபதியால் சேவை நீடிப்பு வழங்கப்படாவிட்டால் 55 வயது பூர்த்தியானதன்பின்னர் கடற்படைத் தளபதி தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ட்ராவிஸ் சின்னையாவுக்கு சேவை நீடிப்பு ஒன்றை வழங்கியுள்ள போதிலும் அந்த சேவை நீடிப்பு ஒரு மாத காலத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. ட்ரவிஸ் சின்னையாவுக்கு வழங்கப்பட்டுள்ள சேவை நீடிப்பானது எதிர்வரும்ஒக்டோபர்மாதம்26 ஆம் திகதியுடன் பூர்த்தியாகின்றது.

ட்ரவிஸ் சின்னையாவுக்கு அடுத்தபடியாக கடற்படையில் சேவை மூப்பு அடிப்படையில் கடற்படைத் தளபதி பதவியை வகிக்க தகுதியானவராக ரியர் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க கருதப்படுகின்றார். எனினும் எதிர்வரும் நவம்பர் மாதம் 19ஆம் திகதி அவருக்கும் 55 வயது பூர்த்தியாகின்றது.

ட்ரவிஸ் சின்னையா பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டதும் சிறிமேவன் அந்தப் பதவிக்கு நியமிக் கப்படலாம் என தெரிவிக்கப்படு கிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி ட்ரவிஸ் சின்னையா கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட் டிருந்தார். அடுத்த மாதம் ட்ரவிஸ் சின்னையா ஓய்வு பெற்றுக்கொண்டால் கடற் படை வரலாற்றில் மிகவும் குறுகிய காலத்திற்கு பதவி வகித்த கடற்படைத் தளபதி என வரலாற்றில் இடம்பிடிப் பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# மகாத்மா காந்தியடிகளின் 148 ஆவது ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினர் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியடிகளின் 148 ஆவது ஜெயந்தி தினம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல். 10 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள காந்தி அடிகளின் திருவுருவச் சிலையடியில் இடம் பெறவுள்ளது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தலைவர் ந.சிவகரன் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, இரத்தினபுரி மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவுகின்ற மழைவீழ்ச்சி எதிர்வரும் தினங்களுக்கும் இதே போன்று தொடருமானால் பாதுகாப்பு நடவடிக்கைகளை கையாளுமாறு குறித்த பிரதேச மக்களிடம் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது. (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1203

Search for people, places and things · Nagendram · Home

கமல்





செல்வி




நாகேஸ்




சுதன்




மீனா




குவேதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## இது நடந்தா ஓவியாதான் பிக்போஸ் டைட்டில்




நடிகை ஓவியா பிக் பாஸ் நிகழ்ச்சியின் 100 நாள் விழாவுக்கு நிச்சயம் வருவேன் என நேற்று அறிவித்ததால் அவரது ஆர்மி மகிழ்ச்சியில் உள்ளது.

ஒரு பிரபல கடையின் திறப்பு விழாவில் கலந்துகொண்ட அவர் இதை தெரிவித்தார். இதே நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய பிரியங்கா தற்போது ஒரு பேட்டியில் ஓவியாவின் திட்டம் பற்றி பேசியுள்ளார்.

பைனலுக்குப் பிறகு ரசிகர்களிடம் மனம்விட்டு பேசப் போறேன்"னு சொன்னாங்க. அவங்களோட பிளான் தெரிஞ்சதுலேருந்து நான் செம குஷியா இருக்கேன்.

இந்த வாரத்துடன் "பிக் பாஸ்" நிகழ்ச்சி முடியப்போகுது. நிகழ்ச்சியின் ஃபைனல் நாளில் ரிசல்ட் அறிவிக்க ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி ஓவியாவை போட்டியாளராக்கி, ஓட்டிங்கை ஸ்டார்ட் பண்ணினாலும் அவங்கதான் வின் பண்ணுவாங்கனு நான் உறுதியா நம்புறேன் என பிரியங்கா கூறியுள்ளார்.

## சிம்பு, நயன்தாரவை ரஜினி சேர்த்து வைப்பாரா பிக்போஸ் டாஸ்க்



பிக் பாஸ் வீட்டில் இன்று நடிகர்கள் போல வேடமிட்டு போட்டியாளர்கள் நடிகர்கள் நடனமாடினர். சிம்பு போல நடிகர் ஹரிஷ் கல்யாண் வேடமிட்டிருந்தார், நயன்தாரா போல பிந்து மாதவி உடை அணிந்திருந்தார். ரஜினிபோல ஆரவ் உடையணிந்து பர்பார்ம் செய்தார்.

நயன்தாராவை போல இருந்த பிந்துவை பார்த்தவுடன் சிம்பு (ஹரிஷ்) ரஜினியை அழைத்து "எங்களுக்குள் ஒரு சின்ன பிரச்சனை. அதை நீங்கள் தான் பேசி தீர்க்கவேண்டும்" என கூறினார். அதற்கு பிந்து முடியாது என கூற, உடனே சிம்பு ஹன்சிகா வரலியா. என தேடத்துவங்கிவிட்டார்.

## தமிழ் பிக்போஸ் வெற்றியாளர் யார்? பிரபல இயக்குநர்




மக்கள் மத்தியும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது இந்த பிக்பாஸ் நிகழ்ச்சி. இந்த வார இறுதியோடு 100 நாட்கள் முடிவிற்கு வருகிறது. இருக்கின்ற போட்டியாளர்களில் வெற்றி பெறப்போவது யார் என்பது தான் ஹைப். இது குறித்து இயக்குனர் சீனு ராமசாமி தன் கருத்துக்களை பத்திரிக்கையில் பகிர்ந்துள்ளார்.

நம்மை நாமே, உணரவைத்த நிகழ்ச்சி இது. இதில் பெண்களின் கவர்ச்சி உடை தான் ஆண்களின் கண்களை திசை திருப்பும் விதமாக இருந்தது. பெண் சுதந்திரம் என்று சொன்னாலும் கட்டுப்பாடற்ற சுதந்திரம் ஆபத்து தான் என்பதை நாம் உணரவேண்டும். கலந்துகொண்டவர்களில் ஓவியா, வையாபுரி, சக்தி என மூன்று பேரையும் எனக்கு பிடிக்கும்.

ஓவியா போன்ற பெண்ணை பார்ப்பது கடினம். இன்னும் சொல்லப்போனால் அவர் ஒரு கவித்துவமான காவியம். சினேகன், கணேஷ் இருவரும் ஓவியா காயத்திரி போல. கடுமையான போட்டிக்கு நடுவில் சமூகத்தில் பெரும்பங்கு வகிக்கும் இவர்களில் யார் வெற்றி பெறப்போகிறார் என நானும் பொறுத்திருந்து பார்க்கிறேன் என்று கூறியுள்ளார்.

ஓவியாவுக்கு சில நேரங்களில் சினேகன் மிகுந்த ஆறுதலாகவும், கவனிப்பாகவும் இருந்திருக்கிறார் என்பதை மறக்க முடியாது.

## சிங்கத்துக்கு ஏன் நரி அறிவுரை கூறுகிறது பிக்போஸ் காயத்திரி

பிக்பாஸ் நிகழ்ச்சியின் மூலம் பிரபலமானவர் நடிகை காயத்ரி. ஆனால் நல்ல முறையில் பிரபலமாகவில்லை என்பதே உண்மை. மிகவும் பிரபலமான நடன இயக்குனர் ரகுராமின் மகளான இவர் இந்நிகழ்ச்சியில் பலரையும் அடக்கி ஆள முயற்சித்து மக்களால் வெளியேற்றப்பட்டார்.

வெளிவந்த பிறகு டிவிட்டரில் ஆக்டிவாக இருக்கும் இவர் ஆங்கில தத்துவங்களை பதிவேற்றி வருகிறார். அந்த வகையில் நேற்று சிங்கத்துக்கு நரி அறிவுரை கூறுகிற தென்றால் கண்டிப்பாக வஞ்சத்தோடுதான் இருக்கும் என்ற பிரபல கவிஞரின் தத்துவத்தை பதிவேற்றியுள்ளார். யாரை மனதில் வைத்து இதை கூறியுள்ளார் என்று தெரியவில்லை ஆனால் வழக்கம்போல ரசிகர்கள் அவரைத் தான் திட்டி கமெண்ட்கள் போட்டு வருகின்றனர்.

## ஓவியாவாக மாறி சினேகனுடன் சண்டை



பிக்பாஸ் நிகழ்ச்சி இந்த வாரத்துடன் நிறைவடைய உள்ளது. இந்நிகழ்ச்சியில் டாஸ்க்குகளுக்கு பஞ்சமிருக்காது. இதனால் பல சண்டைகளும் அரங்கேறும்.

அந்த வகையில் கொடுக்கப்பட்ட டாஸ்க்கில் பழைய டாஸ்க்கை கிண்டல் செய்திருந்தனர். ஜூலி ஒருமுறை சமை யல் போட்டி நடுவராக மாறி தோரணையோடு பேசினார்.

இதன்படி சினேகன் ஜூலி போல் நடந்துகொண்டார். ஆரவ் ஓவியா போல நடந்து கொண்டார். சக்தியிடம் ஒருமுறை அடிங்க பார்ப்போம் என்று சண்டைக்கு வந்ததை போலவும் செய்நார்.

## காதலை வெளிப்படுத்திய சினேகன் - பிந்து, ஆரவ் அதிர்ச்சியில்



பிக்போஸ் வீட்டில் நிகழ்ச்சி ஆரம்பத்தில் இருந்து மிகவும் கடுமையாக விளையாடியவர் சினேகன். இவர் ஒரு கவிஞர், வீட்டிலும் பலரிடம் பல விஷயங்களை வைத்து கவிதைகளை கூறியிருக்கிறார், அதனை நாமும் பார்த்திருக்கிறோம்.

இந்த நிலையில் தற்போது புதிதாக வந்த புரொமோவில், நான் நல்ல காதலன், நல்ல காதலி கிடைக்கவில்லை என சினேகன் கூற ஆரவ் நீங்கள் நிறைய காதல் செய்திருப்பீர்கள் போல என கூறுகிறார்.

அதற்கு சினேகன் நான் யாரையும் காதலிக்கவில்லை, கேட்டுப்பாருங்கள் என்னை காதலித்தவர்களை என்கிறார். இதுபற்றி சினேகன், ஆரவ், பிந்து இடையே ஒரு காதல் பேச்சுகள் இடம்பெறுகிறது.

# ஜேர்மனியின் பொதுத் தேர்தல் 2017-ஒரு பார்வை

ஜேர்மனி, உலகப் பொருளாதாரத்தில் ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஜப்பானுக்கு அடுத்து நான்காவது இடத்தையும், ஐரோப்பிய ஒன்றியத்தில் (E.U) முக்கிய நாடாகவும், உலக கைத்தொழில், தொழில்நுட்பத் துறைகளில் முக்கியத்துவம் பெற்ற நாடாகவும் இருக்கின்றது. ஐக்கிய அமெரிக்காவுக்கு அடுத்து அகதிகள் செல்லும் நாடாகவும் இருக்கின்றது. இன்று ஜேர்மனியின் மக்கள் தொகை 82 மில்லியனாக இருக்கின்றது. இத் தொகையில் 10 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் ஜேர்மன் நாட்டுக்கு வெளியில் பிறந்தவர்கள். இன்றைய ஜேர்மனியின் மக்கள் தொகையில் 12% இற்கு மேற்பட்டோர் பிறநாடுகளிலிருந்து இருந்து வந்து குடியேறியவர்களாவர். 2015 இல் ஏறக்குறைய ஒரு மில்லியன் சீரிய, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் பல நாட்டு அகதிகள், சான்சலர் அஞ்சலாமேர்க்கல் ஜேர்மன் எல்லைகளைத் திறந்துவிட்டதால் ஜேர்மனிக்கு வந்துள்ளனர். இவர் அகதிகளாக வந்த மக்களுக்கு மனிதநேயமாக அடைக்கலம் கொடுத்தார். இவர் அகதிகளைக் கையாண்ட விதம் குறித்து ஜேர்மனியில் இவருக்கு வரவேற்பும் கடும் எதிர்ப்பும் ஜேர்மன் மக்களிடம் உண்டு. ஜேர்மனியின் மாற்றுக் கட்சி (AFD) யின் வளர்ச்சிக்கு இதுவே முக்கிய காரணமாகும்.

1949 இல் மேற்கு/கிழக்கு என இரு ஜேர்மனிகள் உருவாகின. இந்த இரண்டு ஜேர்மனிகளும் 1989ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஒன்றாக இணைத்து தற்போதைய ஜேர்மனி உருவாகியது. இன்றைய ஜேர்மனி 16 மாநிலங்களைக் கொண்டு இருக்கின்றன. இந்த மாநிலங்கள் பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் பெரியளவு வேறுபாடுகளைக் கொண்டன. பரப்பிலும், குடித்தொகையிலும் சிறிய மாநிலமாக பிரமன் நகர் திகழ்கின்றது. மிகப் பெரிய மாநிலங்களாக வடரைன் வெஸ்பேலியாவும் பவேரியாவும் விளங்குகின்றன.

ஜேர்மன் கலப்புத் தேர்தல் முறை முதன் முதலாக எங்கள் நாட்டில் வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் அமுலாக இருக்கிறது. ஜேர்மன் தேர்தல் முறையில் சில மாற்றங்களு டன் இலங்கை கலப்புத தேர்தல் முறையை பின்பற்றத் தொடங்கியிருப்பதால் ஜேர்மனியின் தேர்தல் முறைகள், தேர்தல் முடிபுகள் பற்றி அறிவு எம்மவர்களுக்கு மிகவும் பிரயோசன மாக இருக்கலாம். மேலும் ஜேர்மனியில் இலங்கைத் தமி ழர்கள் 60, 000 பேர் வரையில் இருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியில் இருக்கும் தேர்தல் முறை கலப்புத் தேர்தல் முறையென அழைப்பர். ஒவ்வொரு வாக்காளருக்கும் இரண்டு வாக்குகள் கொடுக்கப்படும். இதன் மூலம் தனது தொகுதியில், கேட்கும் அபேட்சகர் ஒருவருக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம் உண்டு. கூடியளவு வாக்கு பெறும் அபேட்சகர் தெரிவு செய்யப்படுவர். தனக்கு விருப்பமான கட்சிக்கும் வாக்கு போட சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் நாடு 299 தேர்தல் தொகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த 299 தேர்தல் தொகுதியில் பல்வேறு கட்சி அங்கத்தவர்களும் சுயேட்சைகளும் போட்டியிடலாம். இதற்கான தேர்தல் முறையில் இடம்பெறும். அதாவது ஒரு தொகுதியில் போட்டியிட்டவர்களில் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர்கள் வெற்றி பெற்றவராவர். தொகுதிகளில் குறைந்தது மூன்று தொகுதிகளில் ஒரு கட்சி வெற்றி பெற்றிருக்க வேண்டும் அல்லது இக் கட்சிக்கு தேசிய ரீதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகுதியான வாக்குகளில் 5% ற்கு மேல் பெற்றிருக்க வேண்டும். ஒரு கட்சி 2 தொகுதிகளில் வெற்றி பெற்று, மொத்த வாக்கில் 5%ற்கு குறைவாகப் பெற்றால் வெற்றி பெற்ற இரண்டு ஆசனங்களும் குறித்த கட்சிக்கு கிடைக்காது போய்விடும்.

இரண்டாவது வாக்கை வாக்காளர் தங்களுக்கு பிடித்த கட்சிக்கு போடுவார்கள்.

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு கட்சியும் முன்னுரிமை அடிப்படையில் கட்சியில் கேட்பவர்களின் பெயர் பட்டியல் வெளியிடுவர். கட்சி பெற்ற வாக்குகள் அடிப்படையில் கட்சிகளுக்குரிய ஆசனங்கள் ஒதுக்கப்படும். ஆனால் தொகுதி அடிப்படையில் கிடைத்த ஆசனங்களைக் கருத்திற் கொண்டு மிகுதி ஆசனமே ஒதுக்கப்படும். உதாரணமாக ஒரு கட்சிக்கு வாக்கு அடிப்படையில் 10 உறுப்பினர்களைப் பெறத் தகுதி உண்டெனக் கொண்டு அக் கட்சி தொகுதியடிப்படையில் 5 ஆசனங்களைப் பெற்று இருந்தால் இக் கட்சி விகிதாசார முறையில் 5 ஆசனங்களையே பெற முடியும். ஒரு கட்சி 10 தொகுதியில் வெற்றி பெற்ற பொழுதும் கட்சிபெற்ற வாக்குகள் அடிப்படையில் 8 ஆசனங் களுக்கே உரித்துடைய தாக இருப்பின் கட்சி 2 தொகுதி ஆசனங்களை மேலதிகமாக வைத்திருக்கலாம். இதனை Over Hang Seats என அழைப்பர்.

ஜேர்மனியில் தொகுதியில் கூடிய வாக்கு பெற்றவர் வெல்வதும் மற்றும் கட்சி பெற்ற வாக்குகள் அடிப் படையில் அங்கத்தவர் பங்கீடும் பங்கீட்டில் மேலதிக தொங்கு எண்ணிக்கையும் சமப்படுத்தல் எண்ணிக்கையும் Saint-Lagus கணித முறை மூலம் சீர் செய்வர். இதன் மூலம் ஜேர்மன் பாராளுமன்ற அங்கத்தவர் எண்ணிக்கை தேர்தலுக்குப் பின்னர் வேறுபடும் 2013 இல் பாராளுமன்ற அங்கத்தவர் எண்ணிக்கை 630 ஆக இருக்க இம்முறை 2017 இல் பாராளுமன்ற அங்கத்தவர் எண்ணிக்கை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

709 ஆக இருக்கின்றது. உண்மையில் 598 அங்கத்தவர்களைத் தெரிவு செய்யவே தேர்தல் இடம் பெற்றது. அங்கத்தவர் எண்ணிக்கை தொங்கு நிலையிலும் சமப்படுத் தல் முறையிலும் 110 பேரால் அதிகரித்துள்ளது.

2017 இல் நடைபெற்ற தேர்தலில் பிரபல்யமான Popular வாக்கு விகிதம் பின்வருமாறு:

| | |
|---|---|
| CDU/CSU | 32.93 |
| SPD | 20.57 |
| AFD | 12.64 |
| FDP | 10.75 |
| The left | 9.24 |
| Green | 8.94 |
| Others | 4.99 |

**பாராளுமன்றத்தில் கட்சிகளின் விகிதமும்-ஆசனங்கள் எண்ணிக்கையும்.**

| கட்சி | விகிதம் | எண்ணிக்கை |
|---|---|---|
| CDU/CSU | 34.70 | 246 |
| SPD | 21.58 | 153 |
| AFD | 13.26 | 94 |
| FDP | 11.28 | 80 |
| The left | 9.73 | 69 |
| Green | 9.45 | 67 |

மேற்குறிப்பிட்ட கட்சிகளைத் தவிர 20ற்கு மேற்பட்ட

**2017ஆம் ஆண்டு தேர்தல் விபரங்கள் பின்வருமாறு:**

| கட்சி | தொ.வா. | வீதம் | அங்க.எண் | கட்சிவாக்கு | வீதம் | எண்ணி. | ...எண். | மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| CDU | 14027804 | 30.2 | 185 | 12445832 | 26.8 | 15 | 200 | -55 |
| SPD | 11426613 | 24.6 | 59 | 9538367 | 20.5 | 94 | 153 | -40 |
| AFD | 5316095 | 11.5 | 03 | 5877094 | 12.6 | 91 | 94 | +94 |
| FDP | 3248745 | 7.0 | 0 | 4997178 | 10.7 | 80 | 80 | +80 |
| The left | 3966036 | 8.6 | 05 | 4296762 | 9.2 | 64 | 69 | +5 |
| Green | 3717436 | 8.0 | 01 | 4157564 | 8.9 | 66 | 67 | +1 |
| CSU | 3255604 | 7.0 | 46 | 2869744 | 6.2 | 00 | 46 | +10 |

கட்சிகள் ஒன்றும் 5% மேலான வாக்குகளைப் பெறாததால் இக் கட்சிகள் பெற்ற வாக்குகள் தகுதியற் றவையாகின. தகுதி பெறாத கட்சிகள் பெற்றவாக்குகள் 4199% ஆகும். இத் தேர்தலில் 46,973,799 வாக்குகள் அளிக்கப்பட் டன. மொத்தமாக பதிவு செய்யப் பட்ட வாக்காளர் 61,675,529 ஆகும். இம் முறை வாக்களிப்பு விகிதம் 76% மாக இருந்ததுடன் கடந்த முறையிலும் 0.5% உயர்வாக இருந்தது.

கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியும் அதனது சகோதரிக் கட்சியான கிறிஸ்தவ சமுக யூனியன் கட்சியும் கடந்த தேர்தலில் பெற்ற ஆசனங்களை விட 65 ஆசனங்கள் குறைவாகப் பெற்றுள்ளன. (தொடரும்)

ஜேர்மன் மாநிலங்கள்
Landers



# வித்தியா படுகொலை வழக்கு



நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருந்த புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை சம்பவத்தை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது.

புங்குடுதீவு 09 ஆம் வட்டாரத்தில் வசித்து வந்த பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி பாடசாலை செல்லும் வழியில் கடத்தப்பட்டு பாலியல் வன் புணர்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கொடூரமாக படு கொலை செய்யப்பட்டிருந்தார்.

2015.05.14 ஆம் திகதி அவருடைய சடலம் சின்ன ஆலடியில் உள்ள அலரிச் செடிகள் நிறைந்த பற்றைப் பகுதியில் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குடாநாடு மட்டுமல்ல நாடு முழுவதும் பாரிய எதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்ததுடன், குற்றவாளிகள் உடனடியாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்ற ஆக்ரோசம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அன்றைய தினமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களான பூபாலசிங்கம். இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் ஆகிய மூவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். தொடர்சியான தேடுதலின் அடிப்படையில் மகாலிங்கம் சசிதரன், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துசாந்தன், பழனி ரூபசிங்கம் குகநாதன், ஜெயதரன் கோகிலன் ஆகிய ஐந்து பேரும் 2015.05.17 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் இச்சம்பவத் துடன் தொடர்புள்ளதாக புங்குடுதீவு பொதுமக்களால் கட்டிவைத்து தாக்கப்பட்ட மகாலிங்கம் சசிகுமார் (சுவிஸ்குமார்)பொலிஸாரிடம் சரணடைந்து பின்னர் விடுவிக்கப்பட்ட நிலையில், 2015.05.19 ஆம் திகதி கொழும்பில் வைத்து மீண்டும் கைது செய்யப்புட்டார்.

இப் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர் தப்பிவிட்டார் என்ற செய்தி பரவலாக வெளிவந்ததையடுத்து பொது மக்கள் ஆக்ரோசமடைந்து போராட்டங்களில் ஈடுபட்டனர். யாழ். நீதிமன்ற கட்டடம் ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக் கப்பட்டது. அதன் காரணமாகவும் பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்., குடாநாடு முழுவதும் போராட்ட களமாக காட்சியளித்தது.

இதன் காரணமாக குறித்த வழக்கு நடவடிக்கை விரைவாக இடம்பெற வேண்டும். என்பதைத் தொடர்ந்து 2015.05.21 ஆம் திகதி குறித்த சம்பவத்தின் விசாரணை நடவடிக்கைகளைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பொறுப்பெடுத்திருந்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கள் 9 பேரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் 2015.12.15 ஆம் திகதி ஜெயவர்த்தன ராஜ்குமார் என்பவர் கைது செய்யப்பட்டார். மேலும் குறித்த குற்றச்செயலுடன் நேரடி தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், 2016.03.03 அன்று உதயசூரியன் சுரேஸ்கரன் கைது செய்யப்பட்டார். 2016.04.01 அன்று மேலும் ஒரு சந்தேக நபரான தர்மலிங்கம் ரவீந்திரன் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர், சந்தேகநபரான உதயசூரியன் சுரேஸ்கரன் அரச தரப்பு சாட்சியாக மாற்றப்பட்டார், ஒரு வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயவர்த்தன ராஜ்குமார் மற்றும் தர்ம லிங்கம் ரவீநிதிரன் ஆகியோர் வழக்கில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டனர். ஏனைய 9 பேரும் எதிரிகளாக இனங் காணப்பட்டனர்.

அந்த வகையில் முதலாம் எதிரியான பூ.இந்திரகுமார், 2 ஆம் எதிரியான பூ.ஜெயக்குமார், 3 ஆம் எதிரியான பூ.தவக்குமார், 4 ஆம் எதிரியான ம.சசிதரன், 5 ஆம் எதிரியான நி.சந்திரகாசன், 6 ஆம் எதிரியான சி.துசாந் தன், 7 ஆம் எதிரியான ப.குகநாதன், 8 ஆம் எதிரியான ஜெ.கோகிலன், 9 ஆம் எதிரியான ம.சசிகுமார் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றச்சாட்டு பத்திரம் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கை நீதாய விளக்க நீதி மன்றில் (ட்ரயல்அட்பார்) விசாரணை செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் பரிந்துரை செய்ததை யடுத்து, பிரதம நீதியரசரால் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம சங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் நியமிக் கப்பட்டனர்.

மூன்று நீதிபதிகள் முன் னிலையில் நீதாய விளக்க மன்று ஜூன் மாதம் 12 ஆம் திகதி முதன் முறையாக யாழ். மேல் நீதிமன்றில் கூடியது.

சிவலோகநாதன் வித்தியா என்ற

## ஒரே பார்வையில்

மாணவியை வன்புணர்வு செய்யும் நோக்கத்துக்காக கடத்துவதற்கு சதித்திட்டம் தீட்டடியமை , வன்புணர்வு நோக்கத்துக்காக கடத்தியமை, கூட்டாகச் சேர்ந்து வன்புணர்வு செய்தமை, கூட்டாகச் சேர்ந்து வன்புணர்வு செய்து கொலை செய் தமை போன்ற பிரதான குற்றங்களும் மேற்குறித்த குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட 41 குற்றச்சாட்டுக்கள் எதிரி களுக்கு எதிராக சுமத்தப்பட்டன.

இதில் 9 ஆம், 4 ஆம் எதிரிகளுக்கு எதிராக பிரதான குற்றச்சாட்டாக. வித்தியாவை வன்புணர்வு நோக்கத் துக்காக கடத்துவதற்கு சதித்திட்டம் தீட்டியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. 2 ஆம், 3 ஆம், 5 ஆம் 6 ஆம் எதிரி களுக்கு எதிராக மேற்குறித்த நான்கு பிரதான குற்றச் சாட்டுக்களும் சாட்டப்பட்டிருந்தன. 7 ஆம், 8 ஆம் எதிரி களுக்கு எதிராக மேற்குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு உடந்தையாக இருந்துள் ளதாக பிரதான குற்றச்சாட் டுக்களாக முன்வைக்கப்பட்டன. மேற்குறித்த குற்றச் சாட்டுக்களுக்கு தாம் சுற்றவாளிகள் என 9 எதிரிகளும் மன்றுரை செய்திருந்தனர். அதனையடுத்து கடந்த ஜூன் மாதம் 28 ஆம் திகதியில் இருந்து நீதாய விளக்க நீதிபதிகள் மூவர் முன்னிலை்யில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் குறித்த வழக்கை அரச சட்டவாதிகளான நாகரட்ணம் நிஷாந், மாதினி விக்னேஸ்வரன் ஆகியோருடன் பிரதி மன்றாதிபதி கே.குமாரரட்ணம் வழக்கை நெறிப்படுத்தி யிருந்தார்.

1,2,3,6 ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான மகிந்த ஜெயவர்தன, 5 ஆம் எதிரி சார்பில் சட்டத்தரணி ரகுபதி ஆஜராகி யிருந்தார். 4,7,9 ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சி.கேதீஸ்வரன் ஆஜராகியிருந்தார், 1 தொடக்கம் 9 வரையான எதிரிகளுக்கு மன்றால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி வி.ஜெயந்தன் ஆஜராகியிருந்தார்.

வழக்குத் தொடுநர் தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சியங்கள் என அனைத்து சாட்சியங்களின் விசாரணைகள் முடிவுற்றிருந்த நிலையில்

கடந்த செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைகள் அனைத்தும் முடிவுறுத்தப்பட்டதுடன் தீர்ப்புக்காக நேற்றை தினம் திகதியிடப்பட்டிருந்தது. அந்த வகையில் நீதாய விளக்க நீதிபதிகள் மூவரும் மேல் நீதிமன்றத்தில் கூடி நேற்றைய தினம் இவ் வழக்கின் தீர்ப்பை அறிவித்தனர். இந்த வழக்கில் முதலாம் ஏழாம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாமையால் அவர்கள் இருவரையும் குற்றச் சாட்டுக்களிலும் வழக்கில் இருந்தும் விடுதலை செய்திருந்தனர். ஏனைய 2ஆம் 3ஆம் 4ஆம் 5ஆம் 6ஆம் 8ஆம் 9ஆம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டமையை அடுத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் மரண தண்டனை விதித்ததுடன் 30 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் பாதிக்கப்பட்ட வித்தியாவின் குடும்பத்திற்கு ஒவ்வொரு குற்றவாளிகளும் தலா 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் செலுத்த தவறின் 2 வருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தமது தீர்ப்பில் அறிவித்திருந்தனர்.

பொ.சோபிகா

## சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 250 | 100 | 160 | 160 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 95 | 110 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 320 | 400 | 280 | 280 | 400 | 280 |
| தக்காளி | 120 | 250 | 100 | 120 | 200 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 40 | 60 | 60 | 60 |
| கோவா | 150 | 120 | 80 | 160 | 160 | 120 |
| கரட் | 100 | 250 | 90 | 180 | 200 | 80 |
| பூசணி | 60 | 100 | 30 | 40 | 60 | 40 |
| புடோல் | 80 | 100 | 60 | 120 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 80 | 120 | 90 |
| சின்ன வெங்காயம் | 240 | 300 | 200 | 240 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 75 | 120 | 400 | 120 |
| பாகற்காய் | 300 | 100 | 250 | 400 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 180 | 100 | 60 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 80 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 150 | 50 | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 140 | 150 | 140 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 50 | 50 | 30 | 40 | 120 | 50 |
| கறிமிளகாய் | 200 | 250 | 110 | 160 | 240 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 130 | 200 | 200 | 200 |
| போஞ்சி | 200 | 250 | 140 | 200 | 240 | 200 |
| கத்தரிதமடுள்ள | 140 | 100 | 100 | 160 | 140 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 20 | 30 | 40 | 35 |
| தேசிக்காய | 250 | 250 | 200 | 300 | 400 | 300 |
| தேங்காய (ஒன்று) | 70 | 80 | 70 | 90 | 60-80 | 80 |
| இராசவள்ளி | 280 | 300 | 250 | - | 400 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 120 | 180 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 25 | 50 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 07 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 60 | 40 | 25 | 130 | 60 | 80 |

## இலங்கை எம்.பிக்கள் அமெரிக்காவில் ஆய்வு



சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஆய்வுச்சுற்றுலா மேற்கொண்டு ஐக்கிய அமெரிக்கா பயணமாகியுள்ளது.

குறித்த பயணத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான நிமால் சிறிபால டீ சில்வா, பாலித ரங்கே பண்டார, சந்திராணி பண்டார, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர் குமார வெல்கம ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். (இ-7)

எல்லோரும் நீதியை விரும்புகின்றனர்... ஆனால் அடுத்தவர் விடயத்தில் மட்டும்..

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சமூகம் சீரழிந்தால் அழிவுகள்தான் மிஞ்சும்

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலைக் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட ஏழு பேருக்கு நேற்றைய தினம் மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

மரண தண்டனை விதிப்பதாகத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டபோது மரண தண்டனை பெற்றவர்களும் அவர்களின் உறவினர்களும் நீதிமன்றில் கதறி அழுதனர்.

இந்த அழுகை உலக மக்களுக்கு ஒரு பெரும் செய்தியைச் சொல்கிறது.

ஆம், தனி மனிதர்கள் தங்களை நெறிப்படுத்தி வாழுகின்ற அறத்தைப் பின்பற்றாவிட்டால், தனி மனிதர்களை மக்கள் சமூகம் திருத்த முற்படாவிட்டால், மக்கள் சமூகத்தில் போதைவஸ்து, ஆபாசப் படங்கள், சமூக விரோத செயல்கள் மலிந்து போனால் இந்த மண்ணில் வாழும் அனைவரும் கவலை கொள்வதும் கண்ணீர் விடுவதுமே முடிவாக இருக்கும்.

மாணவி வித்தியாவைக் கொலை செய்ததால் வாழவேண்டிய அந்த மாணவி அழிக்கப்பட்டார். அதனால் அவரின் குடும்பம் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்கிறது.

அந்த மிகப்பெரும் அக்கிரமத்தைச் செய்தவர்கள் என்று குற்றம் நிரூபிக்கப்பட்டவர்கள் மரண தண்டனை பெற்றுள்ளனர்.

இவர்களின் மரண தண்டனை அவர்களின் குடும்பங்களை நிச்சயம் பரிதவிக்க வைக்கும்.

ஆக, கூடாத கூட்டம், சமூகச் சீரழிவில் ஈடுபடுவோரின் உறவு, பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காத மிருகத்தனம் என எல்லாமும் சேர்ந்து தந்தது என்ன? என்பதை இந்த நாடும் இந்த உலகமும் மக்கள் சமூகமும் சிந்திக்க வேண்டும்.

இந்தச் சிந்தனை ஏற்படுமாக இருந்தால், தம் பிள்ளைகள் மீது பெற்றோர் கண்ணும் கருத்துமாக இருப்பதும் பாடசாலைகள் உள்ளிட்ட சமூகக் கட்டமைப்புகள் அன்பு, அறம், அகிம்சை, கொல்லாமை, கள்ளுண்ணாமை உள்ளிட்ட அத்தனை அறக் கருத்துக்களையும் போதித்து தனிமனிதர்களைப் பக்குவப்படுத்துவதிலும் கூடிய கரிசனை கொள்ள வேண்டும்.

இதேவேளை சமூகச் சீரழிவுகளை அடியோடு கட்டுப்படுத்துவதில் சமூக நிறுவனங்கள் மிக உச்சமாகச் செயற்படுதல், போதைவஸ்து உள்ளிட்ட சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட அரச அமைப்புக்கள் பொறுப்புடன் செயலாற்றுதல் என்பனவும் வலிமை பெறும்போதுதான் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தில் குற்றச் செயல்கள் நலிந்து போகும். இதுவே மக்கள் சமூகம் கண்ணியத்துடன் வாழ்வதற்கு உதவும்.

போருக்குப் பின்பாக எங்கள் மண்ணில் ஏற்பட்டுவரும் சமூகச் சீரழிவுகளை அடியோடு வேரறுத்து எங்கள் எதிர்காலச் சந்ததியைக் காப்பாற்ற பொருத்தமான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக குற்றம் செய்தால் அதன் பின்விளைவுகள் எவ்வாறாக இருக்கும் என்பதை தெளிவாக அறிய வைத்து எங்கள் சமூகத்தை நல்வழிப்படுத்துவது கட்டாயமானதாகும்.

### முஸ்லிம் அகதிகள் மீது தாக்குதல்

# பௌத்த பிக்குகளின் செயற்பாட்டுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம்

(கொழும்பு)

இலங்கைக்கு அடைக்கலம்கோரி வந்த ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகளை நாடுகடத்துமாறு கோரி கொழும்பில் பௌத்த கடும்போக்குவாத பிக்குகள் செயற்பட்ட விதத்தை அரசாங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த கடும்போக்குவாத பிக்குகளின் இந்த செயற்பாட்டின் ஊடாக ஒட்டுமொத்த பௌத்த மதத்திற்கும் அவமானம் ஏற்பட்டிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

புகலிடம்கோரி வந்த 30 ரோஹிங்கியா முஸ்லிம்கள் ஐ.நா அகதிகள் காப்பு நிறுவகத்தின் கண்காணிப்பில் கொழும்பு - கல்கிஸை பகுதியில் இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த நிலையில் அவர்களை நாடு கடத்துமாறு கோரி சிங்ஹலே தேசிய அமைப்பு என்ற கடும்போக்குவாத பிக்குகள் இணைந்து போராட்டம் நடத்தினர்.

தகாத வார்த்தைகளால் ரோஹிங்கியா முஸ்லிம்களை திட்டிய பிக்குமார்கள், வீதிகளை மறித்தும் கூச்சலிட்டும் பெரும் பதற்றத்தை தோற்றுவித்தனர்.

குறித்த அகதிகள் மீது தாக்குதல் நடத்தவும் பிக்குகள் முயற்சி செய்த போதிலும் பொலிஸார் தலையீடு செய்து ரோஹிங்கியா அகதிகளை காப்பாற்றி பாதுகாப்பாக பொலிஸ் வாகனத்தில் அழைத்துச் சென்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஊடகவியலாளர்கள் வினவினர்.

இதறகு பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன "பிக்குமார்களின் இந்த செயற்பாடு முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். இவ்வாறான பிக்குகளின் செயற்பாடுகள் காரணமாகவே ஒட்டுமொத்த பௌத்த மதத்திற்கே பங்கம் ஏற்படுகின்றது. மேலும் அங்கிருந்த பொலிஸார், பிக்குகளின் செயற்பாடுகளை அவதானித்துக் கொண்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. ஏன் பொலிஸாரும் அவ்வண்ணமாக நடந்தார்கள் என்பது கேள்வி. அமைச்சரவை இது தொடர்பாக விரைவில் கலந்தாலோசிக்கும். இனி இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். 2008ஆம் ஆண்டிலிருந்து குறித்த ரோஹிங்கியா முஸ்லிம்கள் இலங்கையில் இருந்துகொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் அப்போதெல்லாம் போராட்டம் நடத்தாத பிக்குமார்கள் ஏன் இப்போது மட்டும் போராடுகிறார்கள் என்பது தெரியவில்லை என்றார். (மு-11)

# ஊழலில் ஈடுபடுவோருக்கு எதிராக கட்சி பேதமின்றி சட்ட நடவடிக்கை

### ஜனாதிபதி மைத்திரி

ஊழல் மோசடியில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கட்சி பேதமின்றி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பின் மூலம் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளமை உறுதியானது. அரசாங்கத்தின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. சர்வதேசமும் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை எதிர்பார்க்கின்றது.

அபிவிருத்திக்கு உதவிகளை வழங்க அவர்கள் அதனை எதிர்பார்க்கிறார்கள். பாராளுமன்றத்தில் நாம் அந்த வெற்றியைப் பெற்றுக் கொண்ட அதே வேளை, நான் ஐ.நாவிற்கு சென்று செயலாளர் நாயகம் மற்றும் மனித உரிமை ஆணையாளர், அரச தலைவர்களை சந்தித்து சர்வதேசத்தின் ஆதரவை வென்றெடுத்தேன். அதனால் சர்வதேசத்தின் நம்பிக்கையை நாம் பெற்றுக் கொண்டுள்ளோம். எனவே, நாட்டில் அபிவிருத்திகள் ஏற்படும் என மேலும் தெரிவித்துள்ளார். (மு-11)

### ஐந்தாவது நாளாக

# உணவு தவிர்ப்பு போராட்டத்தில் அரசியல் கைதிகள் மூவர்

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் மூவர் இன்றைய தினம் ஐந்தாவது நாளாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆண்டு கைது செய்யப்பட்டு அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த இராசதுரை திருவருள் (வயது-40), கரணவாயை சேர்ந்த மதியரசன் சுலக்ஸன் (வயது 30), நாவலப்பிட்டியை சேர்ந்த கணேசன் தர்சன் (வயது 26) ஆகியோருக்கு கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்த வருடம் குறித்த வழக்கு நிறைவடையும் நிலையில் இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தினர் தற்போது அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றியுள்ளனர்.

இது அரசியல் கைதிகளை பழிவாங்கும் நடவடிக்கை என தெரிவித்து, மொழிப்பிரச்சினை உள்ள காரணத்தினால் தமது வழக்கு வவுனியா அல்லது யாழ்ப்பாண நீதிமன்றங்களில் நடைபெற வேண்டும் என கோரி உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர்.

இவர்கள் தற்போது அநுராதபுரம் சிறையில் மரண தண்டனை கைதிகளுடன் சேர்கபட்டுள்ளார்கள். ஐந்து நாடகள் ஆன நிலையிலும இவர்களை எவரும் சென்று சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (மு-9)

### வித்தியா கொலை வழக்கு

# ஆரம்ப கட்ட விசாரணை பொலிஸாரால் பின்னடிப்பு

வித்தியா கொலை வழக்கின் ஆரம்பகட்ட விசாரணைகளை பொலிஸார் நாசம் செய்துவிட்டனர் என நீதாய விளக்க நீதிபதிகளில் ஒருவரான மா. இளஞ்செழியன் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளார்.

வித்தியா படுகொலை வழக்கின் தீர்ப்பு நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டது. நீதாய விளக்க நீதிபதிகளில் ஒருவரான நீதிபதி மா. இளஞ்செழியன் தனது தீர்ப்பை வாசிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மாபெரும் கொலை நடைபெற்ற நிலையில் ஊடகவியலாளர்கள் குரல்கொடுத்து போராடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் சரியான முறையில் விசாரணைகளை முன்னெடுக்காமல் ஊர்காவற்றுறை பொலிஸ் குயின்டஸ் பெரேரா இந்த வழக்கை முதன்முதலில் நாசம் செய்தார்.

பாரிய கொலை வழக்கினை விசாரிப்பதற்கு சம்பவம் இடம்பெற்ற அவ் இடத்துக்கு வந்திருந்தவர் ஒரு சாதாரண பொலிஸ் கான்ஸ்டபிள், ஏனைய அதிகாரிகள் அக்கறை செலுத்தவில்லை. இது வெட்கக்கேடான விடயம

இந்தநிலையில்தான் களத்தில் இறங்கியவர் குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி நிசாந்த சில்வா. குற்றப்புலனாய்வு பிரிவினர் பாராட்டப்பட கூடியவர்கள். இவர்களின் ஓய்வில்லாத விசாரணைதான் இறுதிக் கட்ட நீதிக்கு வந்துள்ளோம் என தெரிவித்தார். (மு-9)

# நவராத்திரி பாமாலை

கல்விக்கு இன்று இரண்டாம் நாள்



**கலைமகளே சரணம்!**

ஜெய ஜெய கலைமகள்
சரணம் சரணம்
வெண் தாமரையில் இருப்பவளிற்கு
சரணம் சரணம்
கல்வி எனும் பெயரினை தந்திடுவாய்
கற்காரோரிற்கு கல்வியைத் தந்திடுவாய்
தாமரைப் பூவிலே சுருதியை வாசிப்பவளிற்கு
சரணம் சரணம் சரணம்
எனக்கு கல்வி தந்த தாயிற்கு
நாள் என்ன கூறுவென்.

ந.ஆதித்தியன்
தரம்–8E
யா.இ.க.

# இறுதி நிமிட கோலினால் ஸாஹிராவை வீழ்த்திய புனித பத்திரிசியார் கல்லூரி



இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான பிரிவு ஒன்று (டிவிஷன் 1) கால்பந்து தொடரில் நடப்புச் சம்பியன் கொழும்பு ஸாஹிரா கல்லூரியை 2-1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்திய யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி அணி, இவ்வருடத்திற்கான இந்தத் தொடரில் தமது மூன்றாவது தொடர் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இதற்கு முன்னைய போட்டியில் ஹமீட் அல் ஹுசைனி கல்லூரியை 1-0 என ஸாஹிராக் கல்லூரியும், லும்பினி கல்லூரியுடனான ஆட்டத்தை 5-0 என புனித பத்திரிசியார் கல்லூரி அணியும் வெற்றி கொண்டிருந்தன.

அதே போன்றே, இரு அணிகளும் எந்தவித தோல்விகளையும் சந்திக்காத நிலையில் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த மோதலில் களமிறங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

# வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் மாட்டு வண்டி சவாரிப் போட்டி



(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 4 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட 4 ஆவது மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் உட்பட்ட மாவட்டங்களில் இருந்தும் சுமார் 54 மாட்டு வண்டிச் சோடிகள் கலந்து கொண்டன.

வட்டுக்கோட்டை சவாரி விடந்தையில் இடம்பெற்ற இப்போட்டியில் முதலிடம் பெற்ற காளைச் சொந்தக்காரர்களுக்கு தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்பட்டது.


இதை காண்பதற்காக ஏராளமான பார்வையாளர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-104)

# அரையிறுதிக்கு முன்னேறியது திருநெல்வேலி வி.கழகம்



V.T மகாலிங்கம் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் இருபது-20 போட்டியின் கால் இறுதியாட்டம் அண்மையில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் திருநெல்வேலி .C.C அணி ஜொனியன்ஸ் வி. கழகத்தை 116 ஓட்டங்களினால் வென்றது. (க)

# வி.ரி.மகாலிங்கம் பிறிமியர் லீக் சென்றலைட்ஸ் அரை இறுதிக்கு தெரிவு



வி.ரி. மகாலிங்கம் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் சென்றலைட்ஸ் அணி யாழ். சென்றல் அணியை 7 இலக்குகளால் வெற்றி பெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 17.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. றஜீவ்குமார் 24, லதூசன் -15 சுதர்சன் -15 ஓட்டங்களைப் பெற்றனர். மயூரன் -2, ஜேம்ஸ் -3, அலன் -2 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 14.4 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களை பெற்றது. ஜேம்ஸ் 19, அலன்-18, யூலியஸ்-16, செல்டன் ஆட்டமிழக்காது-31 ஓட்டங்களைப் பெற்றனர். தீபன்- 01, றஜீவ்குமார்-2 இலக்கு களை கைப்பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசை பட்டிய லுக்கு சென்றலைட்ஸ்அணி 4.71 புள்ளிகளையும் யாழ். சென்றல் அணி 1.3 புள்ளி களையும் பெற்றுக் கொண்டனர். (க)

# இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது கரவெட்டி ஞானம்ஸ் வி.கழகம்



அல்வாய் யூத் விளை யாட்டுக்கழகம் நடத்திய வட மாகாண ரீதியாக 21 வயதுக் கட்டுப்பாட்டுடனான மென் பந்தாட்டச்சுற்றுப்போட்டியில் நீர்வேலி அணியுடனான முதலாவது சுற்றுப் போட்டியில் நயீவனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுப் போட்டியில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்துடனும் வெற்றி பெற்று அரையிறுதில் அல்வாய் seventeen boys விளையாட்டுக் கழகத்துடனும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டு கழகம். (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் அண்ணா ஸ்ரார் அணி வெற்றி





மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் 25.09.2017 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் யாழ்.அண்ணா ஸ்ரார் அணியை எதிர்த்து பொற்பதி பீற்றஸ் மோதிய ஆட்டத்தில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தவிர்த்த உதைகள் மூலம் யாழ்.அண்ணா ஸ்ரார் 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக யாழ். அண்ணா ஸ்ரார் அணி வீரர் சரன்றாஜ் தெரிவு செய்யப்பட்டார். (க)

# மாணவி வித்தியா கொலை...

மாணவி வித்தியா கொலை வழக்கின் தீர்ப்பு நேற்றைய தினமான இருந்ததால் யாழ்.மேல் நீதிமன்ற வளாகத்தில் அதி உச்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடும் சோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. கடந்த 2015 ஆம் ஆண்டு மேமாதம் 13 ஆம் திகதி பாடசாலைக்கு சென்ற புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியா மறுநாள் சடலமாக மீட்கப்பட்டார். மிகக் கொடிய முறையில் நடைபெற்ற இந்த கொலையால் ஒட்டுமொத்த நாடே அதிர்ந்து போயிருந்தது. வட மாகாணம் உட்பட நாடு முழுவதிலும் மாணவி வித்தியாவிற்கு நீதி கோரி அகிம்சை வழியில் போராட்டங்கள் இடம்பெற்றன.

இந்நிலையில் இவ் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தும் வகையில் மேல்நீதிமன்ற நீதிபதிகளான பாலேந்திரன் சசிமகேந்திரன், மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அன்னலிங்கம் பிரேம்சங்கர் ஆகியோர் கொண்ட ட்ரயல் அட்பார் (நீதாய விளக்கமன்று) அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நீதாய விளக்கமன்று பதினெட்டு அமர்வுகளாக நடைபெற்று நேற்றைய தினம் தீர்ப்புக்காக யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதியின் மூன்றாவது மாடியில் மீண்டும் கூடியது. இதன்போது நீதிமன்ற வளாகத்தைச் சூழ விசேட அதிரடி படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுக் காலை 8.30 மணிவரை ட்ரயல் அட்பார் மன்றுக்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை. காலை 8.30இற்கு பின்னர் கடும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்பட்டனர். தீர்ப்பாயத்தின் தீர்ப்பை பார்வையிடுவதற்காக அளவுக்கு அதிகமானோர் மன்றில் கூடியமையால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. எனினும் நீதிமன்றப் பணியாளர்கள் சிரத்தை எடுத்து அதனைச் சமாளித்திருந்தார்கள். பின்னர் சட்டத்தரணிகள் தமது ஆசனங்களில் வந்து அமர்ந்தார்கள். அதனைத் தொடர்ந்து காலை 9.50 மணியளவில் பிரதி சொலிற்றர் ஜெனரல் குமாரரட்ணம், அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்தன் ஆகியோர் மன்றுக்கு வந்தனர்.

அதனை அடுத்து தீர்ப்பாயத்தின் நீதி பதிகள் காலை 10 மணிக்கு மன்றுக்கு வந்தனர். இதன்போது மாணவி வித்தியாவின் குடும்பம் சார்பில் சட்டத்தரணிகளான மணிவண்ணன். ரஞ்சித்குமார் ஆகியோர் மன்றில் தோன்றியிருந்தனர். தொடர்ந்து தீர்ப்பை வாசிப்பதாக நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் மன்றில் 130 பக்கத் தீர்ப்பை அறிவித்தார். சாட்சிகளின் வாக்குமூலங்களை பகுதி பகுதியாக சுட்டிக்காட்டி நீதிபதி தனது தீர்ப்பை அறிவிப்புச் செய்தார். அதனை நீதிபதிகளான மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அன்னலிங்கம் பிரேம்சங்கர் ஆகியோர் ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார்கள். தொடர்ந்து நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தனது தனிப்பட்ட தீர்ப்பாக 345 பக்க தீர்ப்பை அறிவித்தார்.

இதனை அடுத்து தீர்ப்பாயத்தின் பொதுவான தீர்ப்பை நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் அறிவித்தார். அதில்,

(முதலாம் எதிரி) பூபாலசிங்கம் இந்திரகுமார் மறுபெயர் சின்னா-அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் நிரபராதி என விடுதலை செய்யப்படுகிறார்.

(இரண்டாம் எதிரி) பூபாலசிங்கம் ஜெயக்குமார் மறுபெயர் ரவி - வித்தியாவை கொல்வதற்கு சதித்திட்டம் தீட்டியமை, கடத்தலில் ஈடுபட்டமை, வன்புணர்வு சதித்திட்டம் தீட்டியமை, பொது எண்ணத்துடன் வித்தியாவை கடத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். இவருக்கு மரண தண்டனை வழங்கப்படுவதோடு 30 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ரூபா 40 ஆயிரம் தண்டமும் செலுத்த தவறின் 4 மாத சிறைத் தண்டனையும் மேலதிகமாக வித்தியாவின் குடும்பத்திற்கு ரூபா 10 இலட்சம் நஷ்ட ஈடும் வழங்க வேண்டும். செலுத்தத் தவறின் 2 வருட சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும்.

(மூன்றாம் எதிரி) இந்திரகுமார் தவக்குமார் மறுபெயர் ரவி-வித்தியாவை கொல்வதற்குச் சதித்திட்டம் தீட்டியமை, கடத்தலில் ஈடுபட்டமை, வன்புணர்வு சதித்திட்டம் தீட்டியமை, பொது எண்ணத்துடன் வித்தியாவை கடத்தியமை, 38ஆவது குற்றச்சாட்டான கொலை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். இவருக்கு மரண தண்டனை வழங்கப்படுவதோடு 30 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ரூபாய் 40 ஆயிரம் தண்டமும் செலுத்தத் தவறின் 4 மாத சிறைத் தண்டனையும் மேலதிகமாக வித்தியாவின் குடும்பத்திற்கு ரூபா 10 இலட்சம் நஷ்ட ஈடும் வழங்க வேண்டும். செலுத்த தவறின் 2 வருட சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும்.

(நான்காம் எதிரி) மகாலிங்கம் சசீந்திரன் மறுபெயர் சசி-வித்தியாவை கொல்வதற்கு சதித்திட்டம் தீட்டியமை, கடத்தலில் ஈடுபட்டமை, வன்புணர்வு சதித்திட்டம் தீட்டியமை, 8ஆவது சந்தேக நபர் வித்தியாவைக் கடத்த உதவியமை, 2ஆம், 3ஆம், 5 ஆம், 6ஆம எதிரிகள் வித்தியாவை வன்புணர்வுக்கு உட்படுத்தியதற்கு உதவியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். இவருக்கு மரண தண்டனை வழங்கப்படுவதோடு 30 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் ரூபா 75 ஆயிரம் தண்டமும் செலுத்தத் தவறின் 4 மாத சிறைத் தண்டனையும் மேலதிகமாக வித்தியாவின் குடும்பத்திற்கு ரூபா 10 இலட்சம் நஷ்ட ஈடும் வழங்க வேண்டும். செலுத்தத் தவறின் 2 வருட சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும்.

(ஐந்தாம் எதிரி) தில்லைநாதன் சந்திரகாசன்-வித்தியாவை கொல்வதற்குச் சதித்திட்டம் தீட்டியமை, கடத்தலில் ஈடுபட்டமை, வன்புணர்வு சதித்திட்டம் தீட்டியமை, பொது எண்ணத்துடன் வித்தியாவை கடத்தியமை, கொலை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். இவருக்கு மரண தண்டனை வழங்கப்படுவதோடு 30 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ரூபா 40 ஆயிரம் தண்டமும் செலுத்த தவறின் 4 மாத சிறைத் தண்டனையும் மேலதிகமாக வித்தியாவின் குடும்பத்திற்கு ரூபா 10 இலட்சம் நஷ்ட ஈடும் வழங்க வேணடும். செலுத்தத் தவறின் 2 வருட சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும்.

(ஆறாம் எதிரி) சிவதேவன் துசாந்தன் - கடத்தலில் ஈடுபட்டமை, வித்தியாவை கொல்வதற்கு சதித்திட்டம் தீட்டியமை, வன்புணர்வு சதித்திட்டம் தீட்டியமை, பொது எண்ணத்துடன் வித்தியாவை கடத்தியமை, 38-வது குற்றச்சாட்டான கொலை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். இவருக்கு மரண தண்டனை வழங்கப்படுவதோடு 30 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ரூபா 40 ஆயிரம் தண்டமும் செலுத்தத் தவறின் 4 மாத சிறைத் தண்டனையும் மேலதிகமாக வித்தியாவின் குடும்பத்திற்கு ரூபா 10 இலட்சம் நஷ்ட ஈடும் வழங்க வேண்டும். செலுத்தத் தவறின் 2 வருட சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும்.

(ஏழாம் எதிரி) பழனிரூபசிங்கம் குகநாதன் மறுபெயர் நிசாந்தன்-அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் நிரபராதி என விடுதலை செய்யப்படுகிறார்.

(எட்டாம் எதிரி) ஜெயதரன் கோகிலன் மறுபெயர் கண்ணன்-வித்தியாவை கொல்வதற்குச் சதித்திட்டம் தீட்டியமை, கடத்தலில் ஈடுபட்டமை, வன்புணர்வு சதித்திட்டம் தீட்டியமை, பொது எண்ணத்துடன் வித்தியாவை கடத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். இவருக்கு மரண தண்டனை வழங்கப்படுவதோடு 30 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ரூபா 40 ஆயிரம் தண்டமும் செலுத்தத் தவறின் 4 மாத சிறைத் தண்டனையும் மேலதிகமாக வித்தியாவின் குடும்பத்திற்கு ரூபா 10 இலட்சம் நஷ்ட ஈடும் வழங்க வேணடும். செலுத்தத் தவறின் 2 வருட சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும்.

(ஒன்பதாம் எதிரி) மகாலிங்கம் சசிக்குமார் மறுபெயர் சுவிஸ்குமார்-வித்தியாவை கடத்துவதற்கு சதித்திட்டம் தீட்டியமை, வன்புணர்வு சதித்திட்டம் தீட்டியமை, வித்தியாவை கொல்வதற்கு சதித்திட்டம் தீட்டியமை, கடத்தலில் ஈடுபட்டமை, பொது எண்ணத்துடன் வித்தியாவை கடத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். இவருக்கு மரண தண்டனை வழங்கப்படுவதோடு 30 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ரூபா 40 ஆயிரம் தண்டமும் செலுத்த தவறின் 4 மாத சிறைத் தண்டனையும் மேலதிகமாக வித்தியாவின் குடும்பத்திற்கு ரூபா 10 இலட்சம் நஷ்ட ஈடும் வழங்க வேண்டும். செலுத்தத் தவறின் 2 வருட சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும்.

எதிரிகள் ஏழு பேருக்கும் 2ஆம், 3ஆம் குற்றசெயல்களுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனைகளை ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும். ஏனைய சிறைத் தண்டனைகளைத் தொடர்ச்சியாக அனுபவிக்க வேண்டும் என ட்ரயல் அட்பார் நீதிமன்றின் தீர்ப்பை அறிவிப்புச் செய்தார்.

இதனை அடுத்து தீர்ப்பாயத்தின் பொதுவான தீர்ப்பு அறிவிக்கப்படும் நேரம் வந்த போது அனைவரது முகங்களிலும் ஒருவித பதற்றம் தொற்றிக்கொண்டது. கூண்டில் இருந்த சநதேக நபர்கள் நீதிபதிகளையே உற்றுப் பார்த்த வண்ணம் இருந்தார்கள். சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்து கொண்டிருந்தனர்.

இதன்போது சுழன்று கொண்டிருந்த மின்விசிறிகள் நிறுத்தப்பட்டன, மின்குமிழ்கள் அணைக்கப்பட்டன நீதிபதிகள் உட்பட அனைவரும் எழுந்து நிற்க பிற்பகல் 1.25 மணியளவில் தீர்ப்பினை அறிவித்தார்கள். உங்கள் அனைவருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. இலங்கை ஜனாதிபதி விரும்பும் தினத்தில் உங்கள் கழுத்தில் சுருக்கிடப்பட்டு உயிர் பிரியும் வரையில் தூக்கில் இடப்படுவீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள் என அறிவித்த பின்னர் நீதிபதிகள் மூவரும் தீர்ப்பாயத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

தீர்ப்பு அறிவிக்கப்பட்டதும் மரண தண்டனை பெற்றவர்கள் அழுதார்கள், அதனைத் தொடர்ந்து அவர்களது உறவினர்கள் கதறி அழுதார்கள். தண்டனை பெற்றவர்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. பாதுகாப்புடன் அவர்கள் வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர். சட்டத்தரணிகளும், ஊடகவியலாளர்களும் பொது மக்களும் அங்கிருந்து கீழே இறங்கினர். நீதிமன்றுக்கு வெளியே நூற்றுக்கணக்கானோர் திரண்டிருந்தனர். இதனால் நேற்றையதினம் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற வளாகம் பரபரப்பாக காணப்பட்டது.

இதனை அடுத்து மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழுபேரும் கண்டி போகம்பரை சிறைச்சாலைக்குச் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர். இரண்டு வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற வழக்கு நேற்றுடன் நிறைவுற்றது. இதேவேளை எதிரி தரப்பு சட்டத்தரணிகள் குறித்த தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யவுள்ளதாக ஊடகங்களிடம் தெரிவித்தனர். (மு-4,9)

## குற்றவாளிகள்...

பாதுகாப்புடன் போகம்பரை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வித்தியா படுகொலை மரண தண்டனை குற்றவாளிகள் போகம்பரை சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை ஏராளமான பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் நீதிமன்றின் முன் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-4,9)

## நீதிமன்றில் மயங்கி...

நிலையில் 30 ஆண்டுகள் கடூழிய தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் வித்தியாவின் குடும்பத்திற்கு தலா 10 இலட்சம் ரூபாயை இழப்பீடாக செலுத்துமாறு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் திறந்த நீதிமன்றில் இருந்த வித்தியாவின் தாய் மயங்கி வீழ்ந்துள்ளார். (மு-9,11)

## விடுதலையானவர்...

சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். குற்றமே செய்யாத தனது கணவன் தண்டனை அனுபவிப்பதால் எமது குடும்பமே சீரழிந்து விட்டது என அவருடைய மனைவி நீதிமன்ற வாசலில் கதறி அழுதார்.

வித்தியா படுகொலை வழக்கின் தீர்ப்பு நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டது. அதில் முதலாம் எதிரியாக இனங்காணப்பட்ட பூபாலசிங்கம் இந்திரகுமாருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எவையும் அரச தரப்பால் எண்பிக்கப்படவில்லை. அதை அடுத்து அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் இருந்தும் குறித்த வழக்கில் இருந்தும் முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தார்.

ஆனால் கடந்த வருடம் குறித்த நபர் ஊர்காவற்துறை நீதிமன்றில் பொலிஸாரை தகாத வார்த்தைகளால் பேசியதாக அவருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது.எனவே இந்த நிலையில் இவர் நேற்றைய தினம் விடுவிக்கப்பட்டு மீண்டும் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இது குறித்த அவருடைய மனைவி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இந்த இரண்டரைவருட காலமும் நாம் சொல்லொணா துயரத்தை அனுபவித்துள்ளோம். எனது கணவர் தற்போது விடுதலையாகியுள்ளார். செய்யாத குற்றத்துக்காக இவர் தண்டனை அனுபவித்தார். இவரை கைது செய்த போது எமது வீடுகளோ எமது உடமைகளோ எவையும் இருக்கவில்லை. அனைத்தையும் அழித்து விட்டார்கள். எனது பிள்ளைகளும் நானும் யாழ்.நகரில் வந்து தங்கினோம். கோட்டை பகுதியில் கடலை கச்சான் வியாபாரம் செய்து பசியை போக்கினோம். சிறு பிள்ளைகளை வியாபாரத்தில் ஈடுபடுத்திய குற்றத்துக்கு எனக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

செய்யாத குற்றம் ஒன்றுக்காக சீரழிந்த எனது குடும்பம் இன்னும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழியின்றி தவிக்கிறோம் என நீதிமன்ற வாசலில் கதறி அழுதிருந்தார்.(மு-9)

## பாதுகாப்பற்ற ரயில்...

சரவை தீர்மானம் வருமாறு,

அனைத்து புகையிரத குறுக்கு வீதிகளுக்கும் பாதுகாப்பினை வழங்குவது அரசாங்கத்தின் கொள்கையாகும். குறித்த குறுக்கு வீதிகளில் பாதுகாப்பு சமிக்ஞைகளை பொருத்துவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் அந்நடவடிக்கைகள் முடியும் வரை புகையிரத குறுக்கு வீதிகளில் ஏற்படக்கூடிய விபத்துக்களை தடுப்பதற்காக புகையிரத குறுக்கு வீதிக்கான கதவுகளை இயக்குகின்ற நபர்களை பயன்படுத்த வேண்டும்.

இலங்கை பொலிஸின் தலையீட்டினால் நியமிக்கப்பட்டுள்ள புகையிரத குறுக்கு வீதிக்கான கதவுகளை இயக்குகின்ற நபர்களின் மூலம் 687 குறுக்கு வீதிகள் பராமரிக்கப்படுகின்றன. அவற்றில் ஒரு குறுக்கு வீதி கதவினை இயக்குவதற்கு மூவர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில் பணிபுரியும் ஒருவருக்கு 7,500 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. எனினும் குறித்த கொடுப்பனவு போதுமான அளவில் காணப்படாமையினால் கடந்த காலங்களில் சிலர் வேலையினை விட்டும் விலகிச் சென்றுள்ளனர். இந்நிலைமைக்கு தீர்வாக புகையிரத குறுக்கு வீதிகளின் பாதுகாப்பினை நாள் முழுவதும் வழங்கும் பொறுப்பினை குடும்பத்தின் நிலையான பிரதிநிதி ஒருவருக்கு ஒப்படைக்கும் வகையில் அப்பாதுகாப்பு கதவுகளை பராமரிக்கும் பணியினை தகுதிவாய்ந்த சமுர்த்தி குடும்பங்களுக்கு வழங்குவதற்கும், அதற்காக ஒரு குறுக்கு வீதிக்கதவுக்காக வேண்டி 22,500 ரூபாவினை மாதாந்த கொடுப்பனவாக ஒரு குடும்பத்துக்கு வழங்குவதற்கும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (மு-1)

## எனது மகளுக்கு...

ஸ்வதி சிவலோகநாதன் தெரிவித்துள்ளார்.

வித்தியா படுகொலை வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், எனது மகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தற்போது தீர்ப்பு கிடைத்துள்ளது. என்ன தீர்ப்பு அறிவித்தாலும் குற்றவாளிகளுக்கு எந்த தண்டனை கொடுத்தாலும் இனி எனது மகள் மீண்டும் உயிருடன் வரப்போவதில்லை. ஆனால் இந்த சம்பவமும் இந்த தீர்ப்பும் சமுதாயத்துக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

எனது மகளுக்கு நடந்த கொடுமை இனி வேறு எந்த பிள்ளைகளுக்கும் வரக்கூடாது. அதே போன்று எனக்கு வந்த நிலை வேறு எந்த தாய்க்கும் வரக்கூடாது.

எனது மகளுடைய இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது. இந்த இரண்டரை வருட காலமும் எம்முடன் ஒத்துழைத்த ஊடகங்களுக்கு எமது நன்றிகள்.

இந்த கொடூர செயலுக்கு உரிய தண்டனை வழங்கிய நீதிபதிகளுக்கும் எமக்கு துணையாக இருந்த சட்டத்தரணிகளுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

எமக்கு நம்பிக்கையாக இருந்து இந்த வழக்கை ஒழுங்கு முறையாக நடத்தி சென்ற குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி நிசாந்த சில்வா தலைமையிலான குழுவினருக்கு எனது நன்றிகள். அது அவர்களுடைய பணியாக இருந்தாலும் நேர்மையுடன் இந்த விசாரணைகளை முன்னெடுத்து சென்ற காரணத்தினால்தான் இந்த வழக்கை விரைவாக முடிவுக்கு கொண்டுவர முடிந்துள்ளது. ஆகவே அனைவருக்கும் நன்றி என அவர் மேலும் தெரிவித்தார். (மு-9)

## மரணதண்டனை...

யம். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த வழக்கு தொடர்பில் நேரடியாக உயர் நீதிமன்றிற்கு (Supreme Court) மேன்முறையீடு செய்யலாம். வழமையாக மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு முதலில் மேன்முறையீடு செய்யப்படும்.

ஆனால் தீர்ப்பாயங்களைப் பொறுத்தவரையில் நேரடியாக உயர் நீதிமன்றிற்கு மேன்முறையீடு செய்யப்பட வேண்டும். மேலும் 5 அல்லது 5க்கு மேற்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதிகளால் மேன்முறையீடு விசாரணைக்கு எடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-4-9)


காணி விற்பனைக்கு
(வீடு உடைந்த நிலையில்)

கே.கே.எஸ் வீதியில் தெல்லிப்பளை சந்திக்கு அருகாமையில் (சந்தியில் இருந்து மூன்று நிமிட நடைதூரம்) உடைந்த நிலையில் வீட்டுடன் 6 பரப்புக்காணி விற்பனைக்கு.

தொடர்பு:
076 623 8367, 071 039 5563
(825)



SB Travels and Tours Pvt Ltd

இல. 212 கஸ்தூரியார் வீதியில் இயங்கிவரும் SB Travels and Tours Pvt Ltd இப்போது விசேட விலைக் கழிவுகளுடனான விமான பயணச் சீட்டுக்களை வழங்குகின்றது. விசா விண்ணப்பப்படிவம் 150/= நிரப்பி தரப்படும். Budjet Airlinesல் மதுரை சென்னை ரூ.23500 இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
021 222 9555, 021 222 8555, 076 691 1080, 81, 076 691 1082, 83, 077 711 1228
(C-9717)



MCS IT CAMPUS வழங்கும் மாபெரும் சந்தர்ப்பம்

Special Offer
Entry Fee 8000 only

A/L க.பொ.த உயர்தரப்பரீட்சை தோற்றியோருக்கு
ஒரு கற்கைநெறிக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி
விரும்பிய அனைத்து கற்கை நெறிகளையும் கற்கலாம்

BIT,Comp.Eng,CIMA

Sinhala,Web Designing,Hardware ,Networking
Autocad,Accounting Package,Diploma in English

விஜயதசமி வரை.....!

Type<Name><Course><District><Send to 772395895
MCS IT CAMPUS Near University Of Jaffna
(C-9754)



ஆண்டு 200இனை நோக்கிய பயணத்தில்...

உடுவில் மகளிர் கல்லூரியின்
"பரதரிதா"
(நடன நிகழ்ச்சி)

பிரதம விருந்தினர் :
சிறி.ஆறுமுகம் நடராஜன்
(இந்திய துணைத்தூதுவர்)
&
திருமதி சாந்தி நடராஜன்

செப்ரெம்பர் 30 சனிக்கிழமை
மாலை 4.00 மணி

யாவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

-பாடசாலைச் சமூகம்
(சி-9776)



CCTV
100% தொழில் சார்
செயன்முறை பயிற்சிநெறி



CCTV துறையில்
வல்லுனர் ஆவதற்கு இதோ
ஓர் அரிய வாய்ப்பு

வேலைவாய்ப்பு உத்தரவாதம்*
Next Batch : 30-September-2017

ICS EDUCATION
77,மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
021-7306000, 076-7013060
(C-9773)



வேலை ஆள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் தையல் நிலையத்துக்கு வெட்டி தைக்கத் தெரிந்த பெண் வேலை ஆள் தேவை.

தொடர்பு:
076 739 8678
(824)



விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK - 550/= (C-9678)
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
UK-550/-Kg
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
நேர்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்படும்
தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
0768226241
(C-9677)



Swasthic Fine Arts



விஜயதசமி அன்று
பரதநாட்டிய
வகுப்புக்கள்
ஆரம்பம்
30.09.2017
காலை 10 மணி



கீதாஞ்சலி சுதர்ஸன்
(கலாக்ஷேத்ரா - சென்னை)
076 536 7818,
076 316 6060,
021 222 4550

No.15, Sirambiyady Lane,
(off Stanly Road, Jaffna)
(C-9772)

BRITISH COLLEGE
OF HIGHER STUDIES



வட இந்திய காசி யாத்திரை

நாட்கள்: 10 ஆரம்பம்: 19.10.2017

செல்லும் இடங்கள்: டெல்லி, நாராயணசுவாமி கோவில், ஆக்ரா, தாஜ்மஹால், செங்கோட்டை, மதுரா, கிருஸ்ணஜென்மபூமி, பிரேம்மந்திர் பிரமாண்டமான கிருஷ்ணர் கோவில், காசியில் 2நாள் (வாரணாசி), கயா காலமானவர்களுக்கு பிதிர்க்கடன் செய்யுமிடம், புத்தகயா (புத்தாலயங்கள்), அலகாபாத் (கங்கா, யமுனா, சரஸ்வதி) திருவேணி சங்கமம், சீத்தாமடி (சீதை தாயாருடன் பூமிக்குள் புதையுண்ட இடம்), வேறு இடங்களும் காணலாம். அத்துடன் இராமேஸ்வரம், நவபாஷாணம், உத்திரகோஷமங்கை, திருப்புலானி, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரத் தரிசனம், அப்துல் கலாமின் மணிமண்டபமும் காணலாம். ஒரு நாள் சொப்பிங்.

பெற்றுக்கொள்ளும் ரூபாயுக்கு எமது சேவை

4 விமான பயண டிக்கெட், மடப்பள்ளி ஆட்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு (மூன்று வேளை), கோப்பி, ரீ, குடிநீர் (மினரல் வோட்டர்) 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி, மேலும் கொழும்பிலிருந்து எயார் போட் போக வர வாகன வசதி.

குறிப்பு: மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரவும் திரும்ப கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லவும் எமது செலவில் வாகன வசதி செய்து தரப்படும்.

மடப்பள்ளி ஆட்கள் சமைப்பதால் பிராமண சமூகத்தினரும் எவ்வித தயக்கமுமின்றி கலந்து கொள்ளலாம். விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
No: 59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
T.P: 077 768 0102, 077 736 2154
(C-9771)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.